

# மனிதம்

27


März + April 1994

MANITHAM

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## மனதை உலுக்கிய மரணம்
## சிறுவர் அமுதம் ஆசிரியர் சின்ன ராஜேஸ்வரன் .....!

19.4.94 செவ்வாய் மாலை ரெலிபோனில் வந்த அந்தச் செய்தி எங்கள் இதயத்தில் உதைத்தது. "ஜேர்மனியில் ஒரு பட்டிமன்றத்தில் பங்குபற்றிவிட்டு திரும்புகையில் நிகழ்ந்த விபத்தில் சின்ன ராஜேஸ்வரன் உடனே மரணமாகிவிட்டார். கூடவே முன்னைய 'அறுவை' பத்திரிகை ஆசிரியர் சினி லோகனும் அவரது மனைவியும் இன்னும் ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்" என்பதுதான் அந்தத் துயரச் செய்தி.

புலம்பெயர்ந்த நாடுகளில் வாழும் தமிழ்ச் சிறார்கள் தாம் வாழ்கின்ற அந்தந்த நாட்டு மொழியிலேயே கல்விகற்கவேண்டியது அவர்களுக்கான ஒருவகை நிர்ப்பந்தம். அத்துடன் தாய்மொழியைக் கற்றுக் கொள்ளும் வாய்ப்பும் அரிது. இந் நிலையில் அடுத்துவரும் தமிழ்ச் சமூகம் எதிர்காலத்தில் தாய்மொழி தெரியாத தமிழர்களாகிவிடக் கூடிய ஒரு நிலைமை புலம்பெயர்ந்த நாடுகளில் உருவாகிவருவது கண்கூடு. இந் நிலையைத் தெரிந்துகொண்ட முதன்மையானவர்களில் பிரதானமானவர் 'சிறுவர் அமுதம்' ஆசிரியர் சின்ன ராஜேஸ்வரன்.

மற்றையோர் தெரிந்த நிலையில் மட்டும் இருக்க இவர் இந் நிலைமையிலிருந்து எமது அடுத்த பரம்பரையினரை விடுவித்துக் கொள்ளும் பொருட்டு, தமிழ்ச் சிறார்கள் தமிழ் மொழியைக் கற்றுக் கொள்வதற்கான முன்னெடுப்பு முயற்சிகள் பலவற்றை மேற்கொண்டார். அவ் ஊக்குவிப்பு முயற்சியின் உச்சமாக 'சிறுவர் அமுதம்' தமிழ்ச் சிறார்களுக்கான பத்திரிகையை விடும் முயற்சியில் முழுமையாக இறங்கினார். தான் மரணிக்கும் இறுதி நேரம்வரை மாதமோர் இதழாக சுமார் 5 ஆண்டுகள் இவ் இதழைத் தொடர்ந்து வெளிக்கொணர்ந்தார். இச் சிறு இதழினூடாக எமது நாட்டுச் சூழலையும், மக்களின் நடைமுறைகளையும் கதைகள் மூலமாச் சிறுவர்கள் அறிந்துகொள்ளச் செய்தார். சிறுவர்களுக்கான பொது அறிவை வளர்ப்பதிலும், இந் நிலையில் விஞ்ஞானப் பார்வையை ஊட்டுவதிலும் முக்கிய கவனம் செலுத்தினார்.

1992 ஆகஸ்டில் இவ் இதழின் மூன்றாவது ஆண்டை முன்னிட்டு கலை கலாச்சார நிகழ்ச்சியுடன் கூடிய சிறுவர்களுக்கான விழாவை நிகழ்த்தினார். இதிலும், சிறுவர்களின் தமிழ் வாசிப்புத்திறனை ஊக்குவிக்கும் வகையில் பலவகையான சிறுவர்களுக்கான நூல்களை பரிசில்களாக வழங்கினார். இன்னும் சிறுவர்களுக்கான நூல்களை இலங்கையிலும், இந்தியாவிலும் இருந்து தருவித்துக் கொடுப்பதிலும் இறுதிவரை செயற்பட்டார்.

சின்ன ராஜேஸ்வரனின் சிறுவர்களுக்கான இம் முயற்சிகளை இனிமேல் யார் தொடர்வாரோ?? என்று எண்ணும்போது சில கண நேரமேனும் கண்கள் பனித்துவிடுகின்றன.

முன்னைய தபால் அதிபரான இவர் சமகாலத்தில் வீரகேசரி, ஈழநாடு பத்திரிகை நிருபராகவும் செயற்பட்டுள்ளார். 1984 பகுதியில் சுவிற்சர்லாந்தில் தமிழ்ப் பத்திரிகையின் வருகைக்கு முன்பாக 'ஒன்றியம்' பத்திரிகையை வெளிக்கொணர்வதில் முக்கிய பங்காற்றி ஆசிரியர் குழுவிலும் அங்கம் வகித்தார்.

இச் செயற்பாடுகள் அனைத்திற்கும் மேலாக பலவித எதிர்ப்புக்களின் மத்தியிலும் தம்மை மனித நேயத்தின் பால் நிலைநிறுத்திக் கொண்ட ஒரு மனிதனாக வாழ்ந்தவர் சின்ன ராஜேஸ்வரன்.

இவரது இழப்பினால் துயருறும் சிறுவர் அமுதம் குழந்தை வாசகர்கள், அவரது மனைவி, ஒரே மகள், மற்றும் குடும்பத்தினர், நண்பர்கள் ஆகியோருடன் எம்மையும் இணைத்துக் கொண்டு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

– ஆ.ர் குழு

www.tamilarangam.net

**MÄRZ**
**+**
**APRIL**

**1994**

Zwei Monatlich Einmal



# மனிதம்

***Impressum***
***&***
***Herausgeber :***

Manitham
Postfach-212
3000 Bern -11
SCHWEIZ

## உள்ளே ....

- சுவிஸை சுற்றிவந்த அவைக்காற்று
- சூறாவளியின் கண்களில்.... குழந்தைகள்
- நினைவுகளினூடே ஒரு நீண்ட பயணம்
- இ.தொ.காவும் மலையக மக்களும்

***கவிதைகள் :***

- துள்ளி விளையாடும் மரணம்
- மன வாய் உணவுகள்
- தேர்தல்
- இலையுதிர்காலமும் நானும்
- நினைவும் வாழ்வும்
- எங்கள் ஊர்
- அந்த நாட்கள்

***சிறுகதை :***

- ஒரு குடிகாரனும் கடைசி பஸ்ஸும்

***நேர்காணல் :***

- செர்னோவ்ஸ்கியுடன் (நன்றி - RIFF)

***Redaktion :***
V.Logadas
M.Narendran
S.Ragavan
&
Manitham Redaktion komitee

***Abonnament :***
**22 SFr**
(pro Jahr)

***Post Konto :***
Manitham
3000 Bern-11
PC : **30-37152-1**

***Bank Konto :***
Schweizerische Kreditanstalt
3001 Bern
**Manitham**
**220348-70**

***Druck :***
Böhlen Druck AG
4912 Aarwangen

www.tamilarangam.net

# சுவிஸைச் சுற்றிவந்த அவைக்காற்று


–சி. அமுதன்

அல்ப்ஸ் தொடர் அரவணைக்கும் இந்த அழகிய குறிஞ்சியில் குண்டுமணிகளாய் பனி கொட்டும். இடை இடையே குளிர் காற்றுடன் உரசி மழை தூறும். சிறு பொழுதில் வெய்யில் அடிக்கும். இளவேனிற் காலத்தில் முதன் முதலாய் ஒரு தமிழ் நாடக விழா சித்திரை 4ம் திகதி தொடங்கி 10ம் திகதி வரை தமிழ் அவைக்காற்றுக் கழகத்தினரால் (லண்டன்) சுவிஸ்சின் தலைநகர் பேர்ணிலும் இன்னும் சூரிச், பாசல், செங்காலன் ஆகிய பிரதான நகரங்களிலும் ஐந்து அரங்குகளில் நாடகவிழா வெற்றிகரமாய் நிகழ்ந்தது. . இந்த நாடக விழாவில் மழை, பசி, பாரததர்மம், இரு துயரங்கள், சம்பந்தம், மன்னிக்கவும், ஐயா லெக்சன்கேக்கிறார், போகிற வழிக்கு ஒன்று ஆகிய எட்டு நாடகங்களும் எரிகின்ற எங்கள் தேசம் எனும் கவிதா நாடகமும் கான சாகரம் எனும் மெல்லிசையுமாக மொத்தம் பத்து நிகழ்சிகள் இடம்பெற்றிருக்கின்றன. சூரிச்சில் ஆரம்பமான முதல் நாள் நிகழ்வில் 400 க்கும் அதிகமான பார்வையாளர்கள் திரண்டு அவைக்காற்றுக் கழகத்தாரின் நாடக விழாவை சிறப்பித்தார்கள். என்ற செய்தி இன்னும் மகிழ்ச்சி அளிக்கிறது.

மணிக்கூட்டு கம்பிக்குள் சிக்குண்ட வாழ்விது. நாடக விழாவின் முழுமையிலும் கலந்து கொள்ள சந்தர்ப்பம் கிடைக்காத நிலையில் பேர்ண்ணில் 4ம் திகதி MAPAMONDO அரங்கில் நிகழ்ந்த நாடகங்களை மட்டுமே தரிசிக்கும் வாய்ப்புக் கிடைத்தது. 15 வருடங்களுக்கு முந்திய நினைவுகள்: நண்பர் ஒருவரின் தயவினால் கிடைத்த இலவச நுழைவுச்சீட்டு வீரசிங்கம் மண்டபத்தில் அவைக்காற்றுக் கழகத்தினரின் யுகதர்மம், நாற்காலிக்காரர் ஆகிய இரண்டு நாடகங்கள் பார்க்கக் கிடைத்தது. இன்று அவைக் காற்றுக் கலைக்கழகம் தனது 15 வது ஆண்டு விழாவை நிறைவு செய்து தொடரும் கலைப் பயணத்தில் மீண்டும் நான்கு நாடகங்களைத் சுவிஸ்சில் தரிசிக்கும் வாய்ப்புப் பெற்றுள்ளேன்.

தமிழகத்து நடிகை, நடிகர்களுக்கு தங்க நகைகள் போட்ட 'பாரம்பரியம்' சுவிஸ் வாழ் தமிழர்களுக்கு உண்டு. இந்த உண்மையின் பின்னால் ஒழிந்திருக்கும் 'கலாரசனை மட்டம்' மீது விழுந்தது ஒரு சம்மட்டி அடி – சுவிஸ்சில் அவைக் காற்றுக் கலைக்கழகத்தாரின் நாடக விழாவும் நூற்றுக்காணக்காய் பார்வையாளர்கள் திரண்டமையும்.

எம் தேசத்தில் மூண்ட பேரினவாத அரசியல் தீ தமிழ்ச் சமுதாயத்தின் பல்வேறு தளங்களிலுள்ள மக்களின் ஒரு பகுதியை உலகின் மூலை முடுக்கெல்லாம் சிதறி ஓட வைத்தது. புலம் பெயர்ந்த எந்த சமூகமும் புலம் பெயர்வு நாடுகளில் தம் கடந்த காலம் எல்லாவற்றையும் மறந்து இருப்பதுமில்லை. தம் வாழ்வின் தொடரை அந்தரத்தில் இருந்தோ அன்றி புதிதாய் பூஜ்ஜியப்புள்ளியிலிருந்தோ தொடங்குவதுமில்லை. இதற்கு தமிழ் சமூகம் மட்டும் என்ன விதிவிலக்காகி விடுமா?



அந்நிய மண்ணில் நம் சுய அடையாளத்தை நிலை நிறுத்தவும் எம்மை இந் நிலைக்குத் தள்ளிய அரசியலைப் புரிந்து கொள்ளவும் படைப்பாளிகள் குறிப்பாக எழுத்தாளர்கள் சிறு பத்திரிகைகளில் ஈடுபடத் தொடங்கினார்கள். கலைஞர்கள் இலை மறை காயாக அங்கு சிலர் இங்கு சிலராய் குழுமினார்கள். இந்த வகையில் 80 களின் நடுப்பகுதியில் அவைக்காற்றுக் கலைக்கழகமும் தம்மை லண்டனில் மீள் அமைத்துக் கொண்டது.

ஓர் இனத்தின் கலாச்சாரச் செழுமை, அரசியல் சமூக நோக்கினை அதன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆன்மாவைப் பலப்படுத்துவதாகவே அமையும் என்றும் தொடர்ந்த நாடக மேடையேற்றங்களே தீவிர நாடக இயக்கத்தை வலுப்படுத்தும் என்ற உயர்ந்த நோக்கில் லண்டனில் தம் கலைப் பயணத்தைத் தொடர்ந்தார்கள். சிறுவர்களுக்காக மூன்று நாடகங்களையும் மற்றும் கவிதா நாடகம் ஒன்றையும் மன்னிக்கவும், இரு துயரங்கள், பாரத தர்மம் என்று நான்கு நாடகங்களையும் லண்டனில் புதிதாய் படைத்ததோடு ஏற்கனவே இலங்கையில் மேடையேற்றப்பட்ட நாடகங்களையும் மறு தயாரிப்பு செய்திருக்கிறார்கள். இன்று ஐரோப்பாவிலும் தம் கலைப் பயணத்தை விரிவுபடுத்த முனைந்திருக்கிறார்கள் இதன் நுழைவாயில் சுவிஸ் நாடக விழா.

இந்த நாடக விழாவில் குறிப்பாக பேர்ண்ணில் நான் சுவைத்த நான்கு நாடகங்கள் பற்றி எனது அனுபவங்களை உங்களோடு பகிர்ந்து கொள்ள முனையும் முன்பு ஈழத்து நாடக வளர்ச்சி நவீன நாடகம் பற்றி சில குறிப்புக்கள் நாட்டுக் கூத்து, நாடகம், சபா நாடகம், நவீன நாடகம், வீதி நாடகம் என்று தமிழ் நாடகத் துறைவளர்ச்சியை நோக்கிய முனைப்பு ஈழத்தின் பாரம்பரிய நாட்டுக் கூத்து கலைவடிவங்களை புதுமெரு கூட்டி நவீன நாடக வடிவமாக வளர பேராசிரியர் வித்தியானந்தன் வித்திட்டார். இவரின் வழியில் மௌனகுரு அவர்கள் பெரும் பங்களிப்பு ஆற்றி வருகிறார். கொழும்பு, பேராதனை பல்கலைக்கழகங்களில் தொடர்ந்த நவீன நாடகங்களின் விளைவு எழுபதுகளில் யாழ்பாணத்தில் நாடக அரங்கக் கல்லூரி தோன்றியதும் பல பகுதிகளில் நாடகப் பட்டறைகள் நிகழ்த்தப் பட்டமையும் ஈழத்து நாடக வளர்ச்சியின் வரலாற்றில் முக்கிய புள்ளிகள். அரங்காடிகளும், அவைக்காற்றுக் கலைக்கழகமும் இதன் தொடர்ச்சியே. அரங்காடிகள் தொடர்ந்து யாழ்பாணத்திலும் கொழும்பிலும் பலநாடகங்களை மேடையேற்றி வருகிறார்கள். மண்சுமந்த மேனியர் பாகம் 1-2, மற்றும் மாயமான் போன்ற வீதி நாடகங்களின் ஊடாக ஈழத்து நாடக வளர்ச்சி இன்னொரு பரிமாணத்தை எட்டுகிறது.

வித்தியானந்தன், மௌனகுரு, மகாகவி, முருகையன், தாசியஸ் சுந்தரலிங்கம், குழந்தை சண்முகலிங்கம் என்ற பல நாடக முன்னோடிகளின் வரிசையில் 78ம் ஆண்டுகளில் பாலேந்திராவும் (பின்னர் சிதம்பரநாதன் போன்றோரும்) இணைந்து கொள்கிறார். இவர் மேடையேற்றிய முதல் நாடகம் மழை தமிழகத்தின் பிரபல நாடக ஆசிரியர் இந்திரா பார்த்தசாரதியின் பிரதியை நெறியாள்கை செய்து 78 ம் ஆண்டின் இடைப் பகுதியில் யாழ்பாணத்தில் முதல் நாடகம் மேடையேறுகிறது. ஒவ்வொரு கலைஞனதும் சமூகப் பிரக்ஞை உலகப் பார்வைகளுக்கு ஏற்ப அவர்களின் படைப்புக்கள் வெளிவரும். அந்த வகையில் பாலேந்திரா அவர்களின் நாடகங்களும் அமைகின்றன. இவர் நெறியாள்கை செய்த பல நாடகங்களின் பிரதிகள் பிற மொழிகளிலிருந்து தமிழுக்கு மாற்றம் செய்யப்பட்டதாகவே இருக்கிறது. இங்கே நாடகப் பிரதிகளின் மூலம் மட்டும் பிறமொழி அது பேசும் பொருள் தேச எல்லைக் கோடுகளை மீறி எங்கும் வியாபித்திருக்கும் மனித விழுமியங்களை, உணர்வுக் கிளர்ச்சிகளை, ஆளுமைச் சிதைவுகளை, போலிப் பண்புகளை முகம் விழித்துக் காட்டுகிறது. இன்னும் எமது சமூகத்தில் கெட்ட வார்த்தைகளாக அல்லது நான்கு சுவர்களுக்குள்ளேயே பேசத் தகுதியானதாகக் கருதப்படும் 'பாலியல்' உணர்வு பிரச்சனைகளையும் தொட்டுச் செல்கிறது.

மேலும் கலை இலக்கியத்தில் நவீனத்துவம் பற்றி பேசுபவர்களும் சரி படைப்பாளிகளும் சரி குறிப்பிட்டுச் சொல்லும் பெர்டோல்வண் ப்ரெக்டின் கலை இலக்கியக் கோட்பாடுகளான தூரப்படுத்தல் இயல்புணர்வு நீக்கம் செய்தல் முரண்பாடுகளை ஒரே தளத்தில் தொகுத்துக் கூறல் போன்ற பல கோணங்களினுடாகவும் பாலேந்திராவின் நாடகங்கள் தரிசிக்கப்படுகிறது.

பல ஆயிரக்கணக்கான பணங்களைக் கொட்டி இந்த மேடையில்தான் என் நாடங்களை நடாத்த முடியும் என்று பெருமை கொள்ளும் ஒரு சில நெறியாளர்கள் மத்தியில் மிகவும் குறைந்த செலவில் எங்கும் காட்டக் கூடிய வகையில் பாலேந்திராவின் நாடகங்களும் அமைந்திருக்கின்றன. இதற்கு மேலாக பாலேந்திராவின் எல்லா நாடகங்களையும் முழுமையாய் தரிசிக்க வாய்ப்புக் கிடைக்காத என்னால் அவரின் நாடகங்களின் முழுமை குறித்த அனுபவங்களை சொல்வதை இத்தோடு இடை நிறுத்திக் கொண்டு பேர்ண் நாடக விழாவில் சுவைத்த நாலு நாடகங்களின் அனுபவங்களை உங்களோடு பகிர்ந்து கொள்ள விழைகிறேன்.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முதல் நாடகம்

### சம்பந்தம்

கதை மூலம் – அன்ரன் செக்கோவ்
தமிழில் (தழுவல்) ஞானச் செந்தி சீவரத்தினம்

தந்தை நடேசு மகள் கோமளம் ஒரு 40 வயதைத் தாண்டிய முதிசக்கார முருகேசு. ........ கோமளத்தை பெண் கேட்டு நடேசு வீட்டுக்கு வருகிறார் முருகேசு. காலம் காலமாய் இந்த சமூகத்தில் பதிந்திருக்கும் போலிக் கௌரவம், சுயநலம், சந்தர்ப்பவாதம் போன்ற இழிகுணங்கள் காணிச் சண்டையாக மாட்டுச் சண்டையாக வெளிப்படுகிறது. இந்த இழிகுணங்கள் ஒன்று திரண்டு நடாத்தும் போராட்டத்தில் உண்மையான மனித உணர்வுகள் மனித நேயங்கள் பின்தள்ளப்படுகிறது.

இரண்டாவது நாடகம்

### மழை

ஒரு இடை நிலைச் சமுதாயத்தில் உள்ள வயதான பேராசிரியருக்கும் அவர் மகளுக்கும் இடையேயான முரண்பாடுகள் அதன் பன்முகத் தன்மைகள் இவர்களின் முரண்பாடுகளுக்கிடையே குறுக்கீடு செய்யும் ஒரு மென்மையான டாக்டர். தன் வாழ்வு தன் தந்தையாலேயே சிதைந்தது என குமுறும் மகள் காதலனையும் பறிகொடுத்து. உன் வாழ்விற்கு எந்த விதத்திலும் நான் தடையாக இருக்கவில்லையே என விசனிக்கும் தந்தை. குறிப்பாய் மனித உளவியல் போராட்டங்களுக்குள் ஊடுருவி நாடகம் நகர்கிறது. தனக்கு வாழ்கை வேண்டும். ஒரு ஆண் வேண்டும். அது நீங்களாக இருந்தாலும் பறவாயில்லை என உணர்வு வெடிக்கிறது. இருள் மின்னல் இடி முழக்கம், மழை பெய்கிறது தந்தை இறந்து விடுகிறார். மழை இடைவிடாது பெய்கிறது வெளிநாட்டிலிருந்து அண்ணன் வருகிறான் தங்கைக்கும் அண்ணனுக்கும் இடையே தந்தையின் இறப்புக் குறித்து விவாதம் நடக்கிறது. மழை இடைவிடாது பெய்கிறது டாக்டரை மணம் முடிக்க அவள் தயாராக இருந்த போதும் டாக்டர் தன் போக்கில் மறுத்து விடுகிறார். முரண்பாடுகள் நிறைந்த ஆளுமை சிதைந்த இன்றைய மனிதர்களின் பிரதிநிகள் இவர்கள். பாத்திரங்களை உணர்ந்து நடிக்கிறார்கள் கலைஞர்கள். பாலேந்திராவின் நடிப்பு இயல்பாய் அமைகிறது. பின்னிசை மேடை நிலைகள் சிறப்பாய் இருந்தன இருந்தும் முக்கிய உணர்வை வெளிப்படுத்தும் வார்த்தைகள் ஆங்கிலத்தில் ஒலிப்பதால் பார்வையாளர்களால் முழுமையாய் கிரகிக்க முடியாமல் போய்விடுகின்றனர். இந்தக் குறையை நாடகத்தின் ஓட்டத்தை சிதைக்காத வகையில் பாலேந்திரா நிறைவு செய்வாராயின் 'மழை' எல்லாப் பார்வையாளர்களையும் நனைக்கும்.

மூன்றாவது நாடகம்

### பாரத தர்மம்

கதைமூலம் – ரஜ்ஜித் சவுத்திரி
வடிவம் – புராண நாடகம்
பாத்திரங்கள் : தர்மர், தாய் குந்திதேவி, சண்டாளன், பெண்

தர்ம தேவன் விசாரணைக்கு உட்படுத்தப் படுகிறான். துரியோதனன் விரித்த சதிவலைக்குள் இருந்து பஞ்ச பாண்டவர்களும் தாய் குந்தி தேவியும் தப்பிப்பதற்காக அப்பாவிகள் பலிக்கடாய் ஆக்கப்படுகிறார்கள். தர்ம தேவன் தவறு இழைக்கிறான். இது பாரத யுத்தத்தில் மட்டுமல்ல இன்றைய நிகழ்கால அரசியல் சதுரங்க ஆட்டங்களிலும் பட்டவர்த்தனம் ஆகிறது. தவறிழைக்காத மனிதர்கள் யாருமில்லை யாரையும் எதனையும் கேள்விக்குட்படுத்தப்பட வேண்டும். மனித சமுதாய வளர்ச்சிக்கு இது அவசியமானது. ஆடை அணிகலன்கள் புராணிய நாடக வடிவத்தை வெளிப்படுத்தினும் அது பேசும் விடயம் புதிது. இதுவரை தொகுத்துரைக்கப்பட்ட 3 நாடகங்களிலும் இருந்து வேறுபட்டு நம்மை நம் தேசம் நோக்கி அழைத்துச் செல்கிறது. எரிகின்ற எங்கள் தேசம் கவிதா நாடக நிகழ்வு. ஈழத்தின் இரு தலைமுறையைச் சேர்ந்த 20 கவிஞர்களின் கவிதைகளையும் ஓவியர் கிருஷ்ணராஜவின் ஓவியங்களையும் இசைப் பாடல்களையும் இணைத்த ஒரு புதுவடிவம் தான் எரிகின்ற எங்கள் தேசம்.

அந்தத் தாய் தன் குழந்தையை எவ்வளவே கனவுகளைச் சுமந்து தலாட்டிச் சீராட்டி வளர்கிறாள். ஒரு பொழுதில் அவள் கனவு கலைக்கப்படுகிறது. ஜீப்புக்கள், சப்பாத்துக் கால்களும், கைகளும் மலிகின்றன ஆடிப்பாடிய முற்றமும் நிலவும் யுத்தத்துள் நசிகிறது. எங்கும் கொலை எதிலும் குருதி சுதந்திர தேர் இழுக்க வடம் பிடித்தவர்கள் திசை மாறினார்கள். தேர் இடை நடுவே இதுதான் எங்கள் தேசம் எரிகின்ற எங்கள் தேசம்.

கொலை செய்யப்படுபவர்கள் எல்லோரும் எமது குழந்தைகள் கொலைகளை நிறுத்துங்கள் தேசத்தாயின் குரல் ஒலிக்கிறது தவிப்பு, இழப்பு, ஏமாற்றம், துன்பம் எம்வாழ்வோடு தோய்ந்த நிகழ்வுகளை சொல்கிறது எரிகின்ற எங்கள் தேசம்.

தடுமாறும் உலகிற்று சட்டங்கள் காவல்
தவறான விளக்கங்கள் தர நூறு பேர்கள்

என்றும்

யார் செய்த வேளாண்மையார் அறுவடை செய்வோர்
யார் நட்ட பனைவடலி யார் தறிக்கின்றார்கள்

என்றும் தொடங்கும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அந்தப் பொதிவான பாடல்கள் உட்பட பல நல்லபாடல்கள் இசைத்தன.

போராட்டச் சூழல் அன்று இருந்த அமைதியான வாழ்வு அன்றைய யுத்தக் கொடுரங்கள் இலக்கு மாறிய துவக்குகள் என எமது தேசத்தின் பல வேறுபட்ட நிகழ்வுப் போக்குகளை ஒருசீரற்ற முறையில் தொகுத்து எம் சிந்தனையில் குழப்பத்தை ஏற்படுத்துகிறது. பார்வையாளர்களை அழ வைத்து உணர்ச்சி கொதிப்பேற்றுவதோ எல்லாம் இயல்பானது என்ற ஒரு தோற்றத்தை உருவாக்கக் கூடாது. பதிலாக பார்வையாளர்களை சிந்திக்கத் தூண்ட வேண்டும் ஏன் எதற்காக என்ற கேள்விகளை எழுப்பச் செய்ய வேண்டும் இது ப்ரெக்டின் கலைக்கோட்பாட்டு ஒரு வடிவம் இந்த வகையில் எரிகின்ற எங்கள் தேசம் கவிதா நிகழ்வு அமைந்திருந்தது. இருப்பினும் உணர்வு பூர்வமான காட்சிகளில் ஒத்துழைக்காத இசை இவையே இல்லாத 'தொய்ந்த' இடைவெளிகள் சில பாடல்களின் முதல் வரிகளை விழுங்கிய இசை அல்லது தாழ்ந்த குரல்கள் நிகழ்வு முறிந்து விட்டதோ என்று தூண்டிய பல முறிவுகள் போன்ற குறைபாடுகள் பார்வையாளர்களிடையே ஒரு சோர்வை உண்டு பண்ணியது. இங்கு இசை விடயத்தில் இத்தகைய நிகழ்சிகளுக்கு கீழத்தேய பழக்கப்பட்ட வாத்தியங்களை மாத்திரமன்றி மேலலைத்தய நவீன வகை இசை கருவிகளையும் பயன்படுத்துவது நிகழ்வின் நகர்வுப் போக்கை செழுமை செய்யும். சுவைத்த அம்சங்கள் தோழரே துப்பாக்கியை உயர்த்தும் என்ற கவிதைக்கான காட்சி அமைப்பு சிறப்பாக அமைந்திருந்தது. இதே போன்ற பாதிப்பை கவிதா நாடக நிகழ்வின் முழுமை ஏற்படுத்த வில்லை.

முன்னைய மூன்று நாடகங்களோடு ஒப்பிடும் போது இந்த கவிதா நாடக நிகழ்வை தயாரிக்க பாலேந்திராவும் அவருடன் இணைந்த கலைஞர்களும் நிறைய உழைப்பை செலுத்தியிருக்கிறார்கள். அதுவும் புலம் பெயர்ந்த நாடுகளில் எழக் கூடிய பல்வேறுபட்ட வாழ்வியல் பிரச்சனைகளிடையே இத்தகைய படைப்பை உருவாக்குவது கடினமான பணிதான். ஒரு கலைக்கழகமாக இயங்குபவர்கள்தான் இலகுவில் சாதிக்கமுடியும்.

அவைக் காற்று கலைக் கழகத்தின் கலைப் பங்களிப்பு இவ்விதமாகவே நிகழ்கிறது.

சுவீஸ்சில் அவர்களின் கலைப்பயணம் வெற்றியாய் அமைந்தது என்றே சொல்ல வேண்டும். அவர்களின் கலைப்பயணம் இன்னும் தொடர்ந்து புலம்பெயர்ந்த சமூகங்களிடையே விரிவடைய வேண்டும் குறிப்பாக எம்மவரின் கலாரசனை மட்டம் வளர்த்துச் செல்லப்பட வேண்டும். கலாரசனைமட்டம் வளர்த்தல் என்ற பிரச்சனையில் கலைஞர்கள் யாருக்காக படைக்கிறோம் என்பதில் தீவிர சிந்தனையை செலுத்த வேண்டும்.

## எங்கள் ஊர் !

சிலந்தியின்
வலையில்
சிக்கித் தவிக்கும்
நுளம்பு போல்
எங்கள் ஊர்.....

இளைஞன்
என்னும்
சந்ததியினரை
தொலைத்து விட்டு
தேடும் கிராமம்.......

முதுகெலும்பு
முறிக்கப்பட்டு
தலை நரைக்கப்பட்ட
வாலிபர்கள் தான்
எங்கள் ஊரின்
கதாநாயகர்கள்

தரிசாய்க் கிடக்கும்
நிலத்தை, பழுதுபார்க்க..
மண்வெட்டியைத் தூக்க முடியாத
கிழட்டுக் கட்டைகள்

வீதியும், தெருவும்
அக்கினியைச்
சுவாசித்துக் கொண்டிருக்க
ஊரைத் தொலைத்து விட்டு
ஒழிந்து வாழும்
எங்களைப் போன்ற வாலிபர்கள்
எப்படி
எங்கள் ஊரில் வாழ்வது?

– ஆரையம்பதி த.மலர்ச்செல்வன் –

நடிகமணி வைரமுத்துவையும், கலையரசு சொர்ணலிங்கத்தையும் அவர்களின் மரபார்ந்த நாடகங்களையும் வெகுஜனங்கள் அறிந்திருக்கும் அளவிற்கு நவீனத்துவ நாடங்களையோ, கலைஞர்களையோ இந்த மட்டம் அறிந்திருக்கிறா என்பது குறித்தும் நாம் ஆழமாய் சிந்திக்க வேண்டும். பார்வையாளர்கள் தமது கலாரசனை மட்டத்தை வளர்க்கும் நோக்கில் தம்மை தகவமைத்துக் கொள்வதும் தீவிர நாடக இயக்கமும் வெகுஜனப் பரப்பை நோக்கி முன்னேறுவதுமான இருவழிப் பாதைகளினுடாகத்தான் ஈழத்து நாடகத்துறை முன்னேற்றம் காணமுடியும். பார்வையாளர்கள் இத்தகைய நாடகங்களை தொடர்ச்சியாகப் பார்ப்பதும் நவீன நாடகங்கள் குறித்த பிரக்ஜையும் வளர்த்துக் கொள்வதும் அவசியமாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# என்று மடியும் எங்கள் ....

அரிச்சந்திரனுக்கு என்ன கஸ்டகாலமோ... வேதாளம் கதை கேட்கும் விக்கிரமாதித்தன் போல மீண்டும் கல்யாணவீட்டு சங்கதியள்தான். சுவிசில் எம்மவர்கள் அடிக்கடி சந்திக்கும் இடம் கல்யாணவீடு இல்லையென்றால் Bahnhof (புகையிரத நிலையம்). கல்யாணவீட்டு பிரச்சினையள் நிறைய இருக்கு. அதிலையும் இந்த ஐயர்மார் எங்கடையாக்களுக்கு மிளகாய் அரைக்கிறதை நினைச்சால் விக்கிரமாதித்தனுக்கு மண்டை வெடிக்குதோ இல்லையோ, அரிச்சந்திரனுக்கு தலை போகிற விடயம்தான்.

வழக்கம்போல திருமணம் ஒன்று. அழைப்பிதழ் அறியத்தந்தது– சுபமுகூர்த்தம் பகல் 1 மணியிலிருந்து 2 மணிவரை என்று. அரிச்சந்திரனுக்குத் தெரியும் சுவிஸ் கல்யாணவீடுகள் என்றால் சுபமுகூர்த்தத்துக்கு ஒரு இரண்டு மணிநேரம் என்றாலும் பிந்திப் போனாலும் தாலிகட்டி முடிந்திருக்கும் என்பது அதிசயமான விடயம்தான்.

இருந்தாலும் ஒரு அரை மணித்தியாலம் பிந்தி 2.30 க்கு போனபோது... மாப்பிள்ளையும் சில நண்பர்களும் மட்டும் மண்டபத்தில் நின்றார்கள். விசயம் என்னவென்றால் ஐயரே இன்னும் வரவில்லையாம். அவருக்கு ஏற்கனவே காலை 10 மணிக்கு வேறொரு திருமணச் சடங்கு இருந்ததாம். எப்படியும் 1 மணிக்கு வந்துவிடுவேன் என்று உறுதியளித்துவிட்டு இன்னும் வரவில்லை என்பதால் மாப்பிள்ளைகாரர் 'ஒருமையில்' ஐயரை திட்டிக்கொண்டிருந்தார்.

ஐயரைத் தேடி காரில் ஒருவரை Bahnhof க்கு அனுப்பியிருந்தும் அவரும் ஒரு அறிவித்தல்கூட தரவில்லை என்பதில் 'ரென்சன்' கூடியிருந்தது. எனது நண்பர் ஒருவர் தான் போய் ஐயரைப் பார்த்து வருவதாகக் கூறி என்னையும் துணைக்கு அழைத்தார். இதுமாதிரி ஒரு சந்தர்ப்பத்துக்காக காத்திருந்தவன் போல் நானும் முண்டியடித்துக் கொண்டு நண்பருடன் Bahnhof நோக்கிப் புறப்பட்டேன்.

Bahnhof இல் Taxi நிறுத்தும் இடத்துக்குப் போய்... விலாசத்துடன் முழித்துக்கொண்டு நின்ற ஐயரைக் கண்டதும்... நண்பர் அவரை எப்படியும் தவறவிடக்கூடாது என்ற நினைப்பில் Red Signal என்றும் பாராது மடக்கி வெட்டி ஐயருக்கருகில் கொண்டுபோய் ஒரு குத்துமதிப்பாய் காரை நிப்பாட்டினார்.

நாம் என்னத்துக்கு வந்துள்ளோம் என்ற சுயஅறிமுகத்துடன், திருமண மண்டபத்தில் எல்லோரும் அவருக்காய் காத்திருப்பதைக் கூறி அவசரமாக காரில் ஏறும்படி நண்பர் கூறினார். ஐயரும் தான் முன்சீட்டில் இருக்கப் போவதாயும் என்னை பின்னுக்கு செல்லும்படியும் கூறினார். நானும் வெட்டொன்றாக "உங்களால் பின்னுக்கு இருக்கமுடியாதோ?" என்றேன். ஐயருக்கு சுருக்கென்றாற்போல் இருந்தது. பின் ஒருவாறு தன்னை சுதாகரித்துக்கொண்டு பின்சீட்டில் அமர்ந்தார். கார்க்கார நண்பரும் நான் கூறியதை அவ்வளவாக ரசிக்கவில்லை என்பதை அவர் முகம் காட்டியது.

ஐயரும் 'வெதர்' பற்றி ஏதோஎல்லாம் கூறி பின் தான் தாமதமாய் வந்ததற்கு, முன்னர் 10 மணிக்கு என்றிருந்த திருமணம் V.D.O காரரும் மணப்பொண்ணும் வர தாமதமாகியதால் 12 மணிக்குத்தான் தாலிகட்டியது என்றும் தன்னால் முடிந்தளவு அவசரமாய் எல்லாவற்றையும் முடித்துக் கொண்டு இங்கே நேரத்துக்கு வர இருந்ததாய் கூறி "எங்கடயாக்கள் சுவிசுக்கு வந்தும் நேரம் தவறாமையைக் கற்றுக்கொள்ளவில்லையே" என்று போட்டாரே ஒரு போடு.

அரிச்சந்திரன்

உடனே நானும் இந்தக் கல்யாணவீடு யாரால தாமதம் என்றிழுத்தேன்..... நண்பர் உடனே என்னைத் தட்டி, பேச்சை வேறுதிசைக்கு இழுத்தார். அவருக்குப் பயம், ஐயர் கோபித்துக் கொண்டு போய்விட்டால் மாப்பிள்ளைக் காரரிடம் நல்ல பிள்ளைப் பட்டம் வாங்காமல் போய்விடுவேனோ என்று. பிறகென்ன அந்தக் கல்யாணவீடும் வழமைபோல் சுபமுகூர்த்தம் எல்லாம் முடிந்ததன் பின்தான் தாலிகட்டினது.

மாப்பிள்ளைக்காரருக்கு எல்லாச் சடங்குகளும் V.D.O வில் பதிவுசெய்யப்பட்டிருக்கும். அதைவிட வேறென்ன வேண்டும்.

எம்மவர்கள் கல்யாணவீட்டு அழைப்பிதழ் தயாரிக்கும் போது ஐயரிடம் கொடுத்துத்தான் சுபமுகூர்த்தம் எல்லாம் தெரிவு செய்கிறார்கள். ஐயரும் தனக்கேற்றபடிதான்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நாளைத் தீர்மானிப்பார். அதுவும் அனேகமான திருமணங்கள் சனி, ஞாயிறு விடுமுறை தினங்களில்தான் நடைபெறும். முன்பு ஒருசில ஐயர்மார் இருக்கும் போது சனி, ஞாயிறுகளில் 4 திருமணச் சடங்குகள் கூட நடைபெறும்.

ஒரு திருமணத்திற்கு ஐயர் வாங்கும் ரேட் (பூமாலையும் சேர்த்து) 1500Sfr என்றால் வார இறுதிநாட்களில் ஐயரின் ரேட்டைக் கணக்குப்பார்த்துக் கொள்ளுங்கோவன். மற்றைய நாட்களில் வேறு வேலை. சரி இவ்வளவு காசையும் கொட்டி சம்பிரதாயத்தை கடைப்பிடிப்பது என்றால்கூட அதற்கும் விசுவாசம் இல்லை. ஐயருக்கு காசைப்பற்றிய சிந்தனை. எம்மவர்க்கு கல்யாணவீடு என்றால் பணச்சடங்குமாதிரி எல்லாம் பாசாங்குதான்.

அரிச்சந்திரன் சுவிசுக்கு வந்த புதிசில் நடந்த சில கல்யாண வீடுகள் ஐயர் இல்லாமல் ரேப்ரெக்கோடரில் 'ஓம் மாங்கல்யம் தந்து...' ஒலிக்கும் அதைத் தொடர்ந்து, தவில்கச்சேரி கசட் மாற்றப்படும். அதற்குள் எல்லாமே முடிந்துவிடும்.

இப்ப நம்மவருக்கு காசும் பிடிபட தலைகால் புரியவில்லை. எல்லாத்திற்கும் ஐயரை அழைப்பது 'பாசனா', கௌரவமா என்று புரியவில்லை. கல்யாணவீடு, ஊரில் செத்த உறவினர்க்கு அங்கேயே அந்தியேட்டி, ஆண்டுத்திவசம் எல்லாம் நடைபெறும். எண்டாலும் இங்கயும் மீண்டும் ஐயரைக் கூப்பிட்டு ஒரு விழா எடுப்பினம். பிள்ளை பிறந்த துடக்குக் கழிவுக்கு ஐயர், சாமத்தியச்சடங்குக்கு ஐயர் என்று எங்கபோய் முடியுமோ.

ஐயர் மாருக்கு என்ன அவிவதற்கு சனம் உள்ளபோது கொண்டாட்டம்தானே. புதுப்புதுக் கார்கள், கம்பியில்லா ரெலிபோன் (Natel)........... என்று அவர்கள் எங்கேயோ போய்க்கொண்டிருக்கிறார்கள். ஊரில் இருந்து தமது உறவினர்கள் என்று 'அசிஸ்டன்ட்' ஐயர்மார் என்றெல்லாம் பிழைப்புக்கு இறக்கிவிட்டுள்ளார்கள். இதனால் இப்ப ஐயர்மாரின் மார்க்கெட் கொஞ்சம் தொஞ்சு கொண்டுள்ளதாம். சில ஐயர்மாரே தாங்களாகவே வலிந்து V.D.O மணவறைகாரருடன் தொடர்புகொண்டு குறைஞ்ச ரேட்டுக்கு வரத்தயாராக இருப்பதாயும் இவற்றை வெளியில் கதைக்க வேண்டாம் என்றும் கூட அறிவிக்கினமாம்.

ஐயர்மாரின் கபடத்தனங்களால் விசனமுற்ற சிலர் 'ஹரேராமா ஹரேகிருஸ்ணா அமைப்பின் ஐயரைக் கொண்டு திருமணம் நடத்துகிறார்கள்.

எந்த பிறமத தத்துவங்களை எடுத்துக் கொண்டாலும் அந்தந்த மதகுருமார்கள் தங்கள் மதத்தினரின் திருமணத்திற்கு 'ரேட்' நிர்ணயம் செய்துகொண்டு நடந்து கொள்வதில்லை. ஆனால் இந்த மதகுருமார்கள் மட்டும் அப்படியில்லை. அவர்கள் அந்தக்காலம் தொட்டே உழைக்காமல் மக்களிடம் சுரண்டி வாழ்வதற்கென்றே அனுட்டானங்கள், கிரியை முறைகளை ஏற்படுத்திக் கொண்டவர்கள். பணப்புழக்கம் இல்லாத காலத்திலேகூட வருடத்திற்கு 40 'சன்ஸ்காராக்கள்' அதாவது பிராமணனை அழைத்து வந்து அவர்கள் வயிறுபுடைக்கத் தானம் வழங்கும் சுபதினங்களை பிராமணியம் இந்து மதத்தில் ஏற்படுத்தியிருந்தது என்றால் பார்க்கவேண்டியதுதானே!

அரிச்சந்திரனைக் கேட்டால் எம்மவர்கள் ஐயரை திருமணச் சடங்குக்கு அழைப்பதாயின்..... கடவுளுக்கு திருமணச் செய்தியைக் கூறுவதற்கு சமஸ்கிருதத்தில் ஓதுவதால், தமிழ்–ஜேர்மன் மொழிபெயர்ப்பாளர்களுக்கு சுவிஸ் அரசு என்ன மணித்தியால சம்பளம் கொடுக்கிறதோ அது கொடுத்தாலே போதுமானதே! □□

## யாருக்குச் சொல்லியழ...

அண்மையில் 'காலங்கள்' என்ற சிறுகதைத் தொகுதியொன்று யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் வெளியிடப்பட்டது. அதில் கலந்து கொண்டு உரையாற்றினார் புதுவை ரத்தினதுரை!

"புலம்பெயர்ந்த எழுத்தாளர்கள் தங்களை நியாயப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இங்கு யாரும் எழுதலாம் (எதையும் என்று குறிப்பிடவில்லை), அதற்குத் தடையில்லை" என்றும் குறிப்பிட்டார்.

நல்லது ரத்தினதுரை அவர்களே! ஆனாலும் சுருக்கமாக சிலவற்றைக் குறிப்பிடுகின்றேன்.

"எந்த மடையன் சொன்னவன், உங்கு எழுதத் தடை என்று. புலிகளையும் அதிலும் மேலாக அதன் தலைவரையும் புகழ்பாடும் சுதந்திரம் இன்னும் வளர்ந்து கொண்டல்லவா வருகின்றது. அதனிலும் மேலாக அப்படியான எழுத்துக்களுக்கு பரிசுகள் கௌரவங்கள் வேறு....!"

நீங்கள் 'நல்லாய்' எழுதுங்கள், ரத்தினதுரை அவர்களே! பிழைக்கத் தெரிந்தனீங்கள், இன்னும் புகழ் பாடுங்கள்! ஆனால் நீங்கள் வளர்க்கும் எழுத்துச் சுதந்திரம் பற்றி

↗16



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அந்த நாட்கள் . . .

– ஏ.சி. ஸரூக்
மன்னார்

அந்த நாட்கள் ... அவை
கறைபடிந்த நாட்கள் அல்ல
இதயத்தில் உறைந்து விட்ட
இனிய நாட்கள்.

இப்போதெல்லாம் ...
நான் கண் திறந்து
அந்த இனிய ராகங்களை
மீட்டுவதில் கஷ்டப்படுகின்றேன்.
காரணம் நான் ஒளியை
வெறுக்கவில்லை
ஆயினும்
அவை கருமையிலேயே
என்னிடம் கண் சிமிட்டுகின்றன.
எனவே தான்....
நான் கண்களை மூடுகின்றேன்.
விளக்கை அணைத்து விட்டுத்
தனிமையில் இருந்தாலும் – அவை
என்னிடம் வருவதற்குக்
கொஞ்சம் தயக்கம் தான்.
எனவே தான்....
நான் கண்களை மூடி
அவற்றைக் கவனமாய்த்
தேடுகின்றேன்.

பூமாலையின் வாச மலர்களாய்
நினைவுகள் ஒவ்வொன்றும்
என்னை – என் மனதை
மணக்க வைக்கின்றன.
என்னுயிர்த் தோழரின்
சிரிப்பொலிகளும் – வேடிக்கை
வார்த்தைகளும்
இன்னும் என் காதுகளில்
ரீங்காரிக்கவே செய்கின்றன.

நண்பர்கள், நண்பிகள்
நட்பில் தான் எத்தனை வகை!
ஒவ்வொன்றும் ... மலர்களின்
ஒவ்வொரு மணங்கள்.
அவர்களின் குணங்களும் அப்படியே.

இந்த மாலை...
எனக்கு ஏனோ
சற்ற வேறுபாடு தான். ஏனெனில் –
பூக்களின் அளவுகளும்
இங்கு ஒரேயளவானவையல்ல.

மழலைகள் –
என் மனத்தை நிறைத்த மல்லிகைகள்
வாழ்க்கையை அனுபவித்து –
எனக்கு வகையாகக் கூறியோர்
என்றுமே வாடா மல்லிகைகள்.
இலக்கியமும் இனிய காதலும்
தரும் இன்பத்தை – எனக்கு
இனிக்கச் செய்தவர்கள்
என்னைப் பொறுத்த வரை
இலுப்பைப் பூக்களே.

காட்சி ஓயவில்லை. ஏனெனில்
கதை சற்று நீளம் தான்
மனத்திரையில் சில மதகுகள்....
நண்பர் குழாத்துடன் – நான்
நாட்களைக் கடத்தியதன்
ஞாபகச் சின்னங்கள்.
நான் பொய்யனென்றால்....
அவற்றிடமே கேளுங்கள்.
அவைகள்–

ஒன்றும் என்னைப் போல்
பொய்மையல்ல.

கண்களை மூடுவதும் – ஒரு
கஷ்டமான காரியம் தான்.
ஏனெனில் – எனக்கு
இப்போதுள்ள சிக்கலிற்கு
கண்களை உருட்டியும்
சிமிட்டியும் தான்
விடை தேட வேண்டும்.
எனினும் – அவை எனக்கு
வெதுவெதுப்பாக வெந்நீரையே
இறைக்கின்றன.

மல்லிகையொன்று –
நான் கண்ட மழலையொன்று
மனம் விரும்பிய – தன்
மனத்தில் நிலைத்துள்ள
மனிதர்களைக் கேட்கின்றது.
அண்டை அயலவர்கள்
ஆசிரிய ஆசிரியைகள்
மல்லிகைப் பூமாலையின்
மற்றைய மல்லிகைகள் – அவை
என் மழலையின்
மனம் கொண்ட நண்பர்கள்.
பெயர் தெரியாது – ஆயினும்
மழலையின் மனதில் பதிந்த
சின்னங்களால் விமர்சிக்கப்படும்
விளம்பர
மனிதர்கள்.
இது கூட
அதன் கேள்வியின்
அதன் தேடலின் ஒரு பகுதி.
'இவரெல்லாம் எங்கே?'

நான் ஏன் இங்கே?
இதுவே அதன் கேள்வி –
கேள்விக்குப் பதில
சுருக்க விடையாயின்
அஞ்சாமல் அகதி என்பேன்
ஆனால் – அதற்கோ
விடை விரிவாகத் தேவையாம்.
எனினும் – எனக்கோ –
விரிந்த என் கண்களால்
வெதுவெதுப்பான நீரையே
விடையளிக்க முடிகின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சூறாவளியின் கண்களில் 120 மில்லியன் குழந்தைகள்


1970 இல் எடுவாடோ காலியானோ (Eduardo Galeano) எழுதிய OPEN VEINS OF LATIN AMERICA என்ற புத்தகத்தின் முகவுரை இங்கு பிரசுரமாகிறது. இதன் மிகுதி அடுத்த இதழில் முடியும்.

இப் புத்தகத்தின் முடிவுரையை எடுவாடோ 7 ஆண்டுகளின் பின் எழுதிமுடித்தார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

தமிழில் – தேவா

உலகில் எங்கள் பகுதி இன்று லத்தீன் அமெரிக்கா என்று அழைக்கப்படுகிறது. கலை கலாசாரத்தில் மேம்பட்ட ஐரோப்பியர்கள் துணிவுடன் சமுத்திரப் பரப்பினைக் கடந்து இந்திய சமூகத்தின் களத்தில் தங்கள் பற்களை என்று பதித்தார்களோ அன்றிலிருந்து லாபம் ஈட்டும் நுண்திறமையை மிக நன்கு வளர்த்தெடுத்துக் கொண்டுள்ளார்கள். நூற்றாண்டுகள் கடந்து விட்டன. லத்தீன் அமெரிக்கா, தனது வேலைப் பிரிவினையில் முழுமை எய்திவிட்டது. நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கும் காலம் அதிசயம் எங்களை ஆட்கொண்ட காலமல்ல, உண்மைகளையும் கடந்து மாயை எங்கள் சிந்தையை மங்கச் செய்வதற்கு! அல்லது அவர்களது வெற்றியின் பரிசுகள் எங்கள் சிந்தையில் வெட்கத்தைப் பரவவிட!

பாளம் பாளமாய் தங்கம்.... மலைக்குள் துகளாக வெள்ளி.... ஆயினும் எங்கள் பிரதேசம் இன்னமும் உடல் உழைப்பு நாடாகத்தான் இருக்கிறது. தனது பொருளாதார இருப்பாக மற்றவர்களுக்கு சேவை செய்வதைத்தான் நிலையாகப் பெற்றுள்ளது. இதன் எண்ணை வளம், இரும்பு, செம்பு, இறைச்சி, பழவகை, கோப்பி எல்லாமே மூலப்பொருட்களாகவும் உணவுப் பொருட்களாகவும் வெளிநாட்டில் நுகரப்படுவதின் மூலம் அந் நாடுகள் இதனை உற்பத்தி செய்யும் லத்தீன் அமெரிக்காவை விட அதிக லாபம் சம்பாதித்துக் கொள்கின்றன. வாங்குபவர்கள் விதிக்கும் வரிகள் விற்பனையாளனான லத்தீன் அமெரிக்காவின் விலையை விட அதிகமானவை. இப்படியிருக்க முன்னேற்ற உதவியகத்தின் தொடர்பதிகாரி கோவே ரி. ஒலிவர் (Covey T. Oliver) 1968 யூலையில் "நியாயமான விலை பற்றிப் பேசுவது உலோகாயுத கால நடைமுறை, ஆனால் நாம் வாழ்வதோ சுதந்திர வர்த்தக காலம்" எனக் கூறினார்.



எமது ஆக்கிரமிப்பாளர்களின் துாக்குமர நீதி உள்நாட்டுச் சந்தையிலும் வெளிநாட்டுச் சந்தையிலும் கடனுதவி, வெளிநாட்டு முதலீடு என்று அவர்கள் ஆதிக்கம் பெற்ற சந்தையில் கொள்ளை லாபத்தை ஈட்டித் தருகிறது. கடந்த காலத்தில் 1913 இல் ஜனாதிபதி வுட்றோ வில்சன் (Woodrtow Wilson) "நீங்கள் லத்தீன் அமெரிக்காவில் வெளிநாட்டு முதலீடுகளுக்கு சலுகைகள் வழங்கப்படுவது பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள், ஆனால் வட அமெரிக்காவில் வெளிநாட்டு முதலீடுகளுக்குச் சலுகைகள் வழங்கப்பட்டதாகக் கேள்விப்பட்டிருக்க மாட்டீர்கள். ஏனெனில் அவ்வாறான சலுகைகள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வழங்கும் நிலையில் வெளிநாட்டு நலன்கள் உள்நாட்டு நடவடிக்கைகள் மீது ஆதிக்கம் செலுத்தக் கூடிய நிலை உருவாகும்" எனக் கூறினார். அவர் கூறியது சரியானதே. 'மேபிளவர்' நாடோடிகள் பிளைமவுத் கடலோரப் பிராந்தியத்தில் குடியமர்வதற்கு ஒரு நூற்றாண்டுக்கு முதலே கியூபாவும், கெயிற்றியும் புதிய நாடுகளெனச் சரித்திரத்தில் இடம் பெற்றிருந்தன. அப்படியிருக்க நாங்களோ காலப் போக்கில் எங்களை அமெரிக்கர்கள் என்று அழைக்கும் உரிமையைக் கூட இழந்து விட்டோம். இன்று உலகிற்கு அமெரிக்கா, வடஅமெரிக்கா (United States) நாங்கள் வாழும் பிரதேசமோ அமெரிக்காவை ஒட்டிய பிரதேசம் – ஒருவித தெளிவற்ற அடையாளம் கொண்ட இரண்டாம் தர அமெரிக்கா.

லத்தீன் அமெரிக்கா குருதி நாடிகள் பிளக்கப்பட்ட ஒரு பிரதேசம். இந் நாடு கண்டுபிடிக்கப்பட்ட காலத்திலிருந்து எங்கள் காலம்வரை 'எல்லாமே' முதலில் ஐரோப்பிய நாடுகளுக்கும் பின்னர் (U.S.A) வட அமெரிக்காவிற்கும் கொண்டு செல்லப்படுகின்றது.

இவ்வாறாக தூரதேச நாடுகளின் மூலதன சேகரிப்பிற்கு வாய்ப்பளிப்பதாக அமைந்தது. 'எல்லாமே' என்றால் இதன் மண், கனிவளம், இதன் செழுமையான தாது வளங்கள், இதன் மக்கள் இவர்களின் வேலை செய்யும் திறன் இவர்களின் நுகர்வுத் திறன், இயற்கைவளம், மனிதவளம், எல்லாம் என்று பொருள். சர்வதேச முதலாளித்துவ பல்லுச் சக்கரங்களுக்குள் ஒவ்வொரு பிரதேசமும் நுழைக்கப்பட்டு இந் நாட்டிற்கு வெளியிலிருந்தே ஒவ்வொரு பகுதியினதும் உற்பத்தி முறை, வர்க்க அமைப்பு முறைகள் என்பன வெற்றிகரமாக நிர்மாணிக்கப்பட்டன. காலத்தின் தேவையையொட்டி வெளிநாட்டின் பெரும் நகரங்களுக்கு நன்மை பயக்கும் வகையில் ஒவ்வொரு பிராந்தியமும் தகவமைக்கப்பட்டு தொழிற்பாடுகள் நிர்ணயிக்கப்பட்டன.

"எங்கள் தோல்வி மற்றவர்களின் வெற்றியில் பதிந்திருந்தது. எங்கள் செல்வங்களோ எங்கள் ஏழ்மைக்குக் காரணமாயின. அவை மற்றவர்களின் வளர்ச்சிக்கு உரமூட்டச் சென்று விட்டன, கடல்கடந்து சாம்ராச்சியங்களுக்கும் அதன் பிரசைகளுக்கும்! காலனித்துவ நவகாலனித்துவ செப்படி வித்தையில் பொன் துருப்பிடித்த இரும்பாகவும் உணவுகள் நஞ்சாகவும் மாறிவிட்டது"

வரைமுறையின்றி தங்கி வாழும் நிலை வரையறையின்றி தொடர்ந்தது. இச் சங்கிலிப் பிணைப்பு இரண்டுக்கும் அதிகமானவை. லத்தீன் அமெரிக்காவினுள் பெரிய நாடுகள் சிறிய நாடுகளை ஒடுக்குவதும், ஒவ்வொரு நாட்டிற்குள்ளும் பெரு நகரங்களும் துறைமுகங்களும் உள்நாட்டு உணவு, உழைப்புகளைச் சுரண்டுவதும் நடந்தேறுகின்றன. (நான்கு நூற்றாண்டுகளுக்கு முன்னரே இன்றைய இருபது பெருநகரங்களில் பதினாறு பெரு நகரங்கள் இருந்து வந்துள்ளன.)

சரித்திரத்தை வெற்றி தோல்வியின் அளவு கோலாகக் கொள்ளும் ஒவ்வொருவருக்கும் லத்தீன் அமெரிக்காவின் பின்தங்கிய நிலையும் வறுமையும் இதன் தோல்வியின் விளைவுகளே என விளங்கும். நாங்கள் தோற்றோம் – மற்றவர்கள் வென்றார்கள். லத்தீன் அமெரிக்காவின் தோல்விச் சரித்திரம் யாரோ கூறியது போல் உலக முதலாளித்துவத்தின் வளர்ச்சிச் சரித்திரத்தின் பிரிக்க முடியாத ஒரு பாகம். "எங்கள் தோல்வி மற்றவர்களின் வெற்றியில் பதிந்திருந்தது. எங்கள் செல்வங்களோ எங்கள் ஏழ்மைக்குக் காரணமாயின. அவை மற்றவர்களின் வளர்ச்சிக்கு உரமூட்டச் சென்று விட்டன, கடல்கடந்து சாம்ராச்சியங்களுக்கும் அதன் பிரசைகளுக்கும்! காலனித்துவ நவகாலனித்துவ செப்படி வித்தையில் பொன் துருப்பிடித்த இரும்பாகவும் உணவுகள் நஞ்சாகவும் மாறிவிட்டது"

இயற்கை செல்வத்தை இங்கு அள்ளி வழங்கியது ஆனால் முதலாளித்துவமோ முறைகேடாகத் தனது தேவைக்கு மாத்திரம் இதனைக் கவர்ந்து கொள்கின்றது. முதலாளித்துவத்தின் மையத்தை செழிக்கப் பெய்யும் மழை அதன் சுற்றுப் புறப்பகுதிகளை வெள்ளக் காடக்கின்றது. வடகிழக்கு பிரேசிலும் ஆர்ஜன்டீனாவின் குவபிரச்சோ (Quebracho) நீள் தொடர் பிரதேசமும், எண்ணை வளம் மிக்க மராச்சாயோ (Marracaibo) ஏரியை சுற்றிவாழும் சமூகங்களும் இந்த உண்மையை மெய்வருந்தப் புரிந்து கொண்டது.

இடைவெளி பெருகிக் கொண்டே போகின்றது. கடந்த நூற்றாண்டின் நடுப்பகுதிகளில் செல்வந்த நாடுகள் வறிய நாடுகளை விட 50 வீத வாழ்க்கைத்தர வசதிகளைக் கூடுதலாக அனுபவித்தன. அபிவிருத்தி 'சமனின்மையை' விருத்தி செய்கின்றது. ஏப்ரலில் 1969 இல் றிச்சட் நிக்சன் அமெரிக்கப் பிராந்திய அமைப்பில் (Organization of American State) பேசுகையில் "இருபதாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் அமெரிக்காவின் தலா வருமானம் லத்தீன் அமெரிக்காவின் தலா வருமானத்தை விடப் பதினைந்து மடங்காகப் பெருகும்" எனக் கூறினார். முதலாளித்துவத்தின் முழுச் சக்தியுமே அதன் பகுதிகளின் சமனின்மையிலேயே தங்கியிருக்கிறது. இந்தச் சமனின்மை புதிய பரிமாணங்களை பெற்றுக் கொண்டே போகிறது. அடக்குமுறை நாடுகள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முன்னரை விட செல்வந்த நாடுகளாகின்றன. மற்றையப் பகுதிகளோ தீவிரமாக ஏழை நாடுகளாகிக் கொண்டிருக்கின்றன.

முதலாளித்துவத்தின் 'தலைமைச் செயலகம்' கற்பனை வளம்மிக்க புராணங்களை அவிழ்த்து விடவும் உருவாக்கவும் செய்யலாம். ஆனால் முதலாளித்துவ நாடுகளின் பிடியிலுள்ள ஏழை நாட்டினருக்குத் தெரியும். கட்டுக் கதைகளைப் பசிக்கு உணவாகச் சாப்பிட முடியாதென்று.

வட அமெரிக்கப் பிரஜையின் சராசரி வருமானம் லத்தீன் அமெரிக்கப் பிரஜையின் சராசரி வருமானத்திலும் ஏழுமடங்கு அதிகமானது. அது மட்டுமல்லாமல் வட அமெரிக்கப் பிரஜையின் சராசரி வருமானம் பத்து மடங்கு வேகமாகவும் அதிகரித்துக் கொண்டு போகிறது. லத்தீன் அமெரிக்காவின் சராசரி வருமானக் கணக்குக் கூட அபத்தமானது. பெரும்பான்மையான ஏழைமக்களுக்கும் ரியோவின் தென்பாகத்திலுள்ள சிறுபகுதி செல்வந்தருக்கும் இடையிலான நூலிழைக் கணக்கிது. வட அமெரிக்காவின் கணக்கின்படி சமூகப் பிரமிட்டின் உச்சியிலிருக்கும் ஆறு மில்லியன் லத்தீன் அமெரிக்கர்களின் செல்வப்பங்கு அடித்தளத்தில் இருக்கும் 120 மில்லியன் மக்களின் வருமானப் பங்கிற்குச் சமன்.

60 மில்லியன் கம்பசீனோஸ் (Campesions) களின் நாளாந்தச் செல்வம் 25 டொலர். மறுமுனையிலோ வறுமைத் துன்பத்திற்கு மாமா வேலை செய்பவர்கள் 5 மில்லியன்களை தங்கள் பிரத்தியேகக் கணக்கில் சுவிஸ், அமெரிக்க வங்கிகளில் குவித்துக் கொள்கிறார்கள். இன்னும் ஒருபடி மேலே இவர்கள் மிதமிஞ்சிய ஆடம்பரத்தில் மூழ்கிச் சோம்பல் வாழ்க்கை வாழ்வதுடன் தங்களது பணத்தை எவ்வித பிரயோசனமுமில்லாது முடக்கி வைத்துள்ளனர். இவ்வாறாக முடக்கப்பட்ட முதல் லத்தீன் அமெரிக்காவின் உற்பத்தி முதலின் அரைப்பங்கிற்கும் மேலானது. இதனைக் கொண்டு லத்தீன் அமெரிக்காவை மறுபிரதியீடு செய்யலாம், விரிவுபடுத்தலாம், வேலை வாய்ப்புக்களை அளிக்கக் கூடிய உற்பத்திகளைப் பெருக்கலாம். ஜோசேடிகஸ்ரோ "நான் சமாதானத்திற்கான சர்வதேச பரிசினைப் பெற்றவன். ஆனால் எனது சிந்தையில் கவலையுடன் வந்த முடிவு லத்தீன் அமெரிக்காவின் பிரச்சினைகளின் தீர்வு வேறெந்த வழியிலுமில்லை – வன்முறையைவிட" சூறாவளியின் மையத்தில் 120 மில்லியன் குழந்தைகள் நகர்ந்து கொண்டிருக்கின்றன.

லத்தீன் அமெரிக்காவினது மக்கள் பெருக்கம் வேறெந்த நாட்டிலுமில்லை. அரை நூற்றாண்டுக் காலத்திற்குள் இதன் சனத்தொகை மூன்று மடங்காகப் பெருகி விட்டது. ஒரு நிமிடத்திற்கு ஒரு குழந்தை பட்டினியாலோ நோயாலோ இறக்கிறது. 2000 வருடத்தின் இறுதியில் 650 மில்லியன் லத்தீன் அமெரிக்கர்கள் இருப்பார்கள். அரைவாசிப் பேர் 15 வயதிக்குட்பட்டவர்கள். காலத்தின் வெடிகுண்டு – இன்றைய 280 மில்லியன் லத்தீன் அமெரிக்கர்களில் 50 மில்லியன்கள் வேலையே அற்றவர்கள், அல்லது குறைவான வேலை செய்பவர்கள். 100 மில்லியன் மக்கள் கல்வியறிவில்லாதவர்கள். அரைப்பங்கினர் சுகாதார வசதியற்ற சேரிகளில் நெருக்கமாக வசிக்கிறார்கள்.

லத்தீன் அமெரிக்காவின் மூன்று பெரும் சந்தைகள் ஆஜன்டீனா, பிறேசில், மெக்சிக்கோ. இவை மூன்றினதும் மொத்த நுகர்வோர் பிரான்ஸ் அல்லது மேற்கு ஜேர்மனின் மொத்த நுகர்விலும் விடக் குறைவானது. ஆனாலும் இவை மூன்றினதும் மொத்தச் சனத்தொகையோ எந்த ஐரோப்பிய நாட்டின் சனத்தொகையை விடவும் அதிகமானது. சனத்தொகையுடன் ஒப்பிடுகையில் லத்தீன் அமெரிக்காவின் உணவு உற்பத்தி குறைவானதே. இரண்டாவது உலக யுத்தத்திற்கு முந்தைய உணவு உற்பத்தியிலும் பார்க்க தற்போதையது குறைவானதே.

எங்களது தரகு பிரதிநிதிகள் – பூர்சுவாக்கள் – வெளிநாட்டு எஜமான்களுக்கு தங்கள் உணர்வுகள், ஆன்மா முழுவதையும் மொத்தமாக மலிவு விலைக்கு விற்று விட்டார்கள். தற்போதய அமைப்பு வெகு கச்சிதமானதே, அவர்களுக்கு! ஏனெனில் இது எவ்வளவு விருத்தியடைகிறதோ சமனின்மையும் அதேயளவு வளர்ந்து விடுகிறது. இது சமூகத்தில் ஏற்படுத்தும் அவலமான நிலைகளால் ஒன்றுடன் ஒன்று பொருந்தாத எதிர்மறை விளைவுகளும் அதேயளவு வளர்ந்து விடுகின்றன. தொழில் மயமாகுதல் கூட காலங்கடந்து, அதுவும் தங்கியிருக்கும் நிலையில் வரினும், லத்திவுன்டியா (Latifundia) க்களுடனும் சமூகச் சமனின்மையுடனும் ஒன்றுடன் ஒன்று கைகோர்த்துப் போகும் நிலையிலேயே

> "நான் சமாதானத்திற்கான சர்வதேச பரிசினைப் பெற்றவன். ஆனால் எனது சிந்தையில் கவலையுடன் வந்த முடிவு லத்தீன் அமெரிக்காவின் பிரச்சினைகளின் தீர்வு வேறெந்த வழியிலுமில்லை – வன்முறையைவிட"
>
> – ஜோசேடிகஸ்ரோ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வருகிறது. இது தொழில் வாய்ப்புக்களைப் பெருக்காமல் வேலையில்லாத் தன்மையைப் பெருக்க உதவுகிறது. வறுமை விரிவடைகிறது. செல்வமோ சோம்பேறிக் குழுக்களிடம் போய்க் குவிந்து கொள்கிறது. புதிய தொழிற்சாலைகள் சில முன்னுரிமை பெற்ற மையங்களில் தொடங்கப்படுகிறது. ஆனால் தொழிலாளர்களோ வரவர குறைந்த அளவில்தான் தேவைப்படுகிறார்கள்.

இந்த அமைப்பு விடுபட்டுப் போன பெருந்தொகை மக்களைப் பற்றி சிறிதேனும் கவலைப்படுவதாகத் தெரிவதில்லை – அவர்களோ தொடர்ந்து உற்பத்தி செய்து கொண்டிருக்கிறார்கள், குழந்தைகளை!. எந்தவித கவலையுமின்றி இவர்கள் குழந்தைகளைப் பெற்றுவிட வீதியோரங்கள் வேலையில்லாதவர்களால் நிறைந்து கொண்டு போகிறது. ஒரு புறத்தில் லத்திவுண்டாக்கள் பெரும் நிலப்பரப்புக்களை வெறுமையாக வைத்துக் கொண்டிருக்கின்றனர். நகர்ப் புறங்களிலோ இயந்திரங்களின் ஆதிக்கம், வேலையின்மை. இந்த அமைப்பு மக்களை வாந்தியெடுக்கிறது. வட அமெரிக்கா மிசனரிகள் கருத்தடை மாத்திரைகள், சாதனங்கள், நாட்கள் குறித்த கலண்டர்கள் என்பவற்றை விதைத்தார்கள். ஆனாலும் அறுவடை செய்தது, மேலும் மேலும் குழந்தைகளைத்தான். லத்தீன் அமெரிக்கக் குழந்தைகள் விடாப்பிடியாகப் பிறந்து கொண்டேயிருக்கிறார்கள், இந்த ஈடிணையற்ற நாட்டில் தனது இயற்கை உரிமையைக் கோரிக்கொண்டு!. இந்த நாடோ யாருக்கும் எதையும் கொடுக்க மறுக்கிறது – எல்லாருக்கும் போதுமானளவு இருந்தும் கூட.

1968 இல் றிச்சட் நிக்சன் உற்பத்தி உதவி அமைப்புக் கூட்டத்தில் "ஏழு வருடங்கள் இந்த அமைப்பு தொடர்ந்து வந்திருப்பினும் உணவுப் பற்றாக்குறை அதிகரித்துக் கொண்டு தான் வந்துள்ளது" என மிக உரத்தக் குரலில் மனம் வருந்தினார்.

சில மாதங்களுக்கு முன்பு April Life பத்திரிகையில் ஜோர்ஜ் W. பால் "எவ்வாறாக இருப்பினும் இன்னும் சில பத்தாண்டு காலங்களுக்கு வறிய நாடுகளின் காழ்ப்புணர்வு உலகத்திற்கு அச்சுறுத்தலாக அமையப் போவதில்லை. இது வெட்கத்துக்குரியது என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை. ஆயினும் பல சந்ததிகள் காலத்திற்கு உலகின் மூன்றிலொரு பகுதி பணக்காரராகவும் மூன்றில் இரண்டு பகுதி ஏழையாகவும் தான் இருந்து வந்துள்ளது. இது நீதியின்மையாகக் கூட இருக்கலாம். ஏழைகளின் சத்தி கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கக் கூடியதாகவே இருக்கிறது." பால் ஜெனிவாவில் நடந்த வியாபார, அபிவிருத்தி மகாநாட்டிற்கு அமெரிக்காவின் சார்பில் தலைமையேற்றுச் சென்றிருந்தார். இம் மகாநாட்டில் ஏழை நாடுகளின் வியாபாரத்திற்கு குந்தகம் விளைவிக்கும் பன்னிரண்டு நடவடிக்கைகளை நீக்குவதென முடிவுவெடுக்கப்பட்டது. பால் இவைகளில் ஒன்பதினை எதிர்த்து வாக்களித்தார்.

வறுமையினால் மனிதக் கொலைகள் லத்தீன் அமெரிக்காவில் நடந்து கொண்டிருப்பது ஒரு ரகசியம். ஒவ்வொரு வருடமும் சத்தம் சந்தடியின்றி மூன்று 'கிரோசிமா' குண்டுகள் வெடித்துக் கொண்டிருக்கின்றன. இந்த சமுதாயங்களோ பல்லைக் கடித்துக் கொண்டு இவைகளைச் சகிக்கப் பழகிக் கொண்டுள்ளன. இது திட்டமிட்ட நடவடிக்கை – ஏதோ தற்செயலாக நடப்பதல்ல. இந்த சமூகத்திற்கு எதிரான அராஜகம் கூடிக் கொண்டே போகின்றது. இதனால் பாதிக்கப்படும் மக்களைப் பற்றி பரபரப்பாக மக்கள் தொடர்புச் சாதனங்களில் செய்திகள் வருவதில்லை. இவை உலக உணவு விவசாய நிறுவனத்தின் குறிப்புக்களில் புள்ளி விபரங்களாக ஒளிந்து கொள்கின்றன.

(மிகுதி அடுத்த இதழில்)

வாசகர் கடிதம் :

கட்சி–அரசு–சிவில்சமூக நிறுவனங்களுக்கிடையேயான உறவு பற்றிய கட்டுரையை மனிதம்–23 இல் பார்த்தேன். பயண அவசரத்தில் அதுபற்றி விரிவாக எழுத முடியவில்லை. பொதுவாக அக் கட்டுரையின் கருத்துக்களோடு நான் உடன்படுகிறேன். கடந்த 6 ஆண்டுகாலமாக இத்தகைய கருத்துக்களை நாம் வலியுறுத்தி வருகிறோம். ஆனால் மேற்படி கட்டுரையில் தேவையில்லாமல் மாக்சிச எதிர்ப்புத் தொனி வெளிப்படுவதைத் தவிர்த்திருக்கலாம் என்பது என் கருத்து.

– அ. மார்க்ஸ்

வாசகர்களே!

எமது முகவரி மாற்றத்தைக் குறித்துக் கொள்ளுங்கள் !

புதிய முகவரி :

**MANITHAM**
**Postfach 212**
**3000 BERN - 11**
**SWITZERLAND**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிறுகதை

# ஒரு குடிகாரனும் கடைசி பஸ்ஸும்

இரவு நேர பஸ். அனேகமாக எல்லோரும் வேலை விட்டுப் போபவர்கள். ஒரு சிலர் தான் பஸ்ஸினுள். கடைசிச் சீற்றில் ஒருவன் கத்திக் கொண்டிருந்தான். வெறிபோலும்.... அதனால் ஒருவரும் பின்னுக்கு இருக்கவில்லை. எல்லோரும் முன்னாலேயே இருந்தனர், சிலர் நின்றனர். அவனைச் சுற்றி இருக்கைகள் காலியாகவே இருந்தது. ஆனாலும் ஒருவரும் பின்னுக்கு போய் இருக்கவில்லை. சிலருக்கு பயமாக இருக்கலாம், சிலருக்கு அருவருப்பாக இருக்கலாம், சிலருக்கு ஏன் வம்பு என்றிருக்கலாம். அவன் கத்திக் கொண்டேயிருந்தான். ஏதேதோ எல்லாம் சொல்லிக் கொண்டிருந்தான். ஆனாலும் ஒருவரும் அவனை ஒன்றும் கேட்கவேயில்லை. எனக்கு இது பழகிப் போய்விட்டது. அனேகமாக இரவுகளில் இது நடக்கும். அப்போது அவனைச் சுற்றி இருக்கைகள் காலியாகவேயிருக்கும்.

எல்லோரும் முன்னுக்கு வந்துவிடுவார்கள். இருக்கைகள் காலியாகவே இருக்கும்.

ஏதாவது புத்தகம் படிக்கலாம் என்றால்... 'மூட்'இல்லாமலிருந்தது. வேலை செய்யிற இடத்தில நடந்தது தான் ஞாபகம் வந்தது.

"மச்சான் திருப்பி அனுப்பப் போறாங்களாம்"
"நல்லது தானேயடா"
"அது சரி, ஊரில போய் என்ன செய்யப் போறம்"
"அது சரிதான் என்ன செய்கிறதென்ற திட்டமுமில்ல, காசுமில்ல. ஆனா போகிறதில சந்தோசமிருக்கு. ஏன் தெரியுமே ஊர், அந்தமண், சைக்கிள்.... எல்லாத்தையும் விட ஊரில இரவு 2 மணி வரையும் கோப்ப கழுவத் தேவையில்ல"

" அது சரிதான். ஆனா வரக்க, பிளைட்டில ஏறுகிற வரைக்கும் அப்பா, அம்மாவின்ர காசில தான் படிப்பு, வாழ்க்கை. இப்பவும் கையில ஒரு சதமும் இல்ல. முன்னயென்றால் தனியாள், இப்ப மனுசியும் வேற"

"ஒன்று செய். உன்ர மனுசியை அவவின்ர அம்மா வீட்டிற்கே அனுப்பிப் போட்டு, நீயும் உன்ர அம்மா, அப்பாவோட இருந்து திரும்பவும் லவ் பண்ணிக் கொண்டு இருங்கோ"

சிரிக்க முடியாத ஜோக்.

உண்மைதான் என்ன செய்வது?? இதைவிட அது நல்லது, அதைவிட இது நல்லது. மனம் அப்படித்தான் சொன்னது.

பின்னுக்கு அவன் கத்திக் கொண்டிருந்தான். சில நேரம் மௌனமானான். பிறகு கத்தினான்.

பஸ் ஓரிடத்தில் நின்றது.
சிலர் தான் ஏறினார்கள். சிலர் ஏறாமல் நின்றனர். மற்ற பஸ்ஸிற்கு நிற்கிறார்கள்போலும். மற்றது கெதியாகப் போய்விடும். இந்த பஸ் மெதுவா எல்லா இடத்திலயும் நின்று தான் போகும். ஆனா இந்த பஸ் தான் எனக்கு பிடித்திருக்கிறது. இலகுவானதும் கூட.

இப்ப இரவு 12 மணியாகுது. விடிய எனக்குமுதல் வேலைக்குப் போனவள், இப்ப வந்து சமைத்து விட்டுப் படுத்திருப்பாள். சாப்பாடு மேசையில் கோப்பையில் மூடியிருக்கும். சாப்பிட்டுவிட்டு படுக்க வேண்டியது தான். நாளைக்கு எனக்கு லீவுதான். ஆனா அவளுக்கு வேலை. அதோட ஒரு கல்யாண வீடும் வேற. லீவு கேக்கிறனென்று சொன்னாள். கொடுத்தாங்களோ தெரியாது. கொடுத்திருந்தா சாப்பாட்டில தெரியும். 2,3 கறியோட சமைத்திருக்கும். இல்லாவிட்டால் ஒரு கறி தான். அவளுக்கும் லீவென்றால் எவ்வளவு நல்லது. இரண்டுபேரும் ஒன்றாய்ச் சேர்ந்து ஒரு இடத்துக்குப் போய் எவ்வளவு நாளாகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவன் திரும்ப கத்திக் கொண்டிருந்தான். எனக்கு அவனைப் பார்க்க வேணும் போல இருந்தது. வெளியில பார்த்து யாரையோ சுட்டிக்காட்டி.... ஏதோ எல்லாம் பேசி சிரித்து... ஏதோ செய்து கொண்டே இருந்தான். இப்பவும் இருக்கையெல்லாம் காலியாகத்தான் இருந்தது. சிலர் நின்று கொண்டிருந்தனர். அதோட எனக்குப் பக்கத்திலையும் எவரும் இருக்கவில்லை. அந்த இடமும் காலியாகத்தான் இருந்தது. பஸ் ஓடிக் கொண்டிருந்தது.

ஏதோ திடீரென அம்மாவின் ஞாபகம் வந்தது. இப்போதெல்லாம் அடிக்கடி ஊர் ஞாபகம் வருகிறது. அம்மா இப்ப எப்படியிருப்பா? எனக்கு இன்னும் அதே பழைய முகம் தான் நினைவில் இருக்கிறது. ஆன்மீகம், கூட்டுக் குடும்ப வாழ்வு, வறட்டுக் கௌரவம் இவைகளுக்கு பெயர் போன அந்தக் கிராமத்தையும், யாழ்ப்பாண ரவுணையும் மட்டும் தெரிந்த அம்மா, இப்ப எப்படி இருப்பா?

●●●●● ஆனந்தி ●●●●●

யாழ்ப்பாணம் போவதென்றால் உச்சியில் முடிமயிர் வைத்து முடிந்த பெரிய கொண்டை, நெற்றியில் பெரிய குங்குமப் பொட்டு. இந்த முகம் தான் இப்போ நினைவில் நிற்கிறது. இப்ப எப்படியிருப்பா.. எப்படி மாறிப்போனா. யாழ்ப்பாணத்திற்கே அப்பாவோடதான் போன அம்மா, இப்ப தனிய கொழும்பு வந்து லொட்ஜில தங்கி எனக்கு ரெலிபோன் எடுத்து...

"தம்பி நேரத்துக்கு காசு அனுப்பு. நான் நேரத்துக்குப் போகவேணும். அங்க அப்பாவும், தம்பிமாரும் தனிய. அதோட லொட்ஜுக்கும் காசு கனக்க கட்ட ஏலாது. இவன் பெரிய அண்ணாவையும் ரெலிபோன் போடச் சொல்லு"

அம்மா எப்படி மாறிப் போனா. எனக்கு அந்த முகம், எதற்கோ நீண்ட காலமாய் சிரிப்பு மறந்த அந்த முகம், யாழ்ப்பாணத்தையும், கிராமத்தையும் மட்டும் தெரிந்த அந்த முகம் தான் இப்பவும் நினைவில.

நாங்க வாழ்ந்த மண்வீடு, நான் யாழ்ப்பாணத்துக்கு படிக்க வந்த பின் அடிக்கடி

9←

இன்னோர் கேள்வி?

ராஜினி என்றொரு பெண் நடுவீதியில் நாய்போல் உங்களால் சுட்டுக் கொல்லப்பட்டாள். கேசவன், செல்வி போன்றோரெல்லாம் உங்கள் சிறைகளில்....! அவர்களும் ஏதோ எழுதியதால் தானாம். அதுசரி, அதைப்பற்றி எங்களுக்கென்ன.... மூச்சு விடாதீர்கள், இன்னும் எழுதுங்கள். சுட்டுக் கொல்வதும் சிறையில் அடைப்பதும் புலிகளின் சுதந்திரம். அதனை அங்கீகரித்து எழுதுங்கள்! தலைவர் இன்னும் பரிசுகள் தருவார்.

அதுசரி, உங்களுக்கும் பரிசுகள் கௌரவங்கள் கிடைத்ததாமே. ஓ.... அதற்காகத்தானே எழுதினீர்கள், எழுதுகிறீர்கள். மேலும் மேலும் எழுதுங்கள் இன்னும் கௌரவங்கள் காத்திருக்கும். ஆனால் ஒன்றும் மட்டும் உறுதி. உங்களைப் போல் உண்மைகளை மறைத்து பொய்களை உண்மையென எழுதுவதன் மூலம் தான் 'உங்கு' இருக்க வேண்டும் என்றால், அந்த இருப்புத் தேவையில்லை. அதைவிட புலம்பெயர்ந்து உண்மையை எழுதுவதே மேல்.

வெளிநாடு சென்றவர்களை 'நாயிலும் கீழவன்' என்றும் 'பாய் விரித்தால் படுத்துறங்கும் நாய்ச்சாதி இவர்கள்' என்றும், இன்னும் எப்படி எப்படியெல்லாமோ கவிதை படித்து ஒலிப்பதிவு நாடா வெளியிடுங்கள்.... பின் அவர்களிடமே பணம் சேகரியுங்கள். அவர்கள் சிந்திக்கும் வரை உங்கள் காட்டில் மழையோ மழைதான்!

அப்பு

மறந்த மண்வீடு, கடைசி இருக்கும் வரைக்கும் அம்மாவும் அப்பாவும் விட்டுவராத மண்வீடு... எப்படியிருக்கும்? சீ கடைசியா வரும்போது கூட பார்க்காமல் வந்து விட்டேன். எங்கள் வீட்டை ஒரு கயிற்றால் கட்டியிருப்பது போன்ற ஒற்றையடிப்பாதை எப்படியிருக்கும்... ஒரு தரம் அம்மா வரும்போது கேட்டேன். அம்மா சொன்னா எங்கட கிராமத்தில இப்ப பல்லிகளும், பாம்புகளும், மிருகங்களும் தான் வாழுறதாம். அப்படியென்றால் நான் வாழ்ந்த அந்த மண் வீட்டில, நான் நடந்து திரிந்த அந்த ஒற்றையடிப் பாதையில ஏதாவது ஒரு மிருகம்.... ஏதாவது பாம்பு... அல்லது பல்லி...

பஸ் ஓடிக் கொண்டிருந்தது. சில இடங்களில் நின்றது. சிலரை ஏற்றி, இறக்கிவிட்டு ஓடியது.

அந்த வெறிகாரன் இன்னும் இறங்கவில்லை. அவன் கத்திக் கொண்டேயிருந்தான்.

நானும் இறங்கும் இடம் இன்னும் வரவேயில்லை.

□□□



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இ. தொ.கா வும் மலையக மக்களும் – 5

"குடியுரிமைச் சட்டங்கள் இலங்கைச் சுதேசிகளான சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள், பறங்கியர் ஆகியோருக்கும் எத்தகைய சம்பிரதாயமுமற்று தாமாகவே பரம்பரையால் குடியுரிமை அந்தஸ்தை வழங்கின. ஆனால் இச் சட்டத்தின் கீழ் குடியுரிமை கோரக்கூடிய இந்தியர்கள் இலங்கையில் இருந்த சனத்தொகையில் மிக மிகச் சிறு வீதத்தினராகவே இருந்தனர்."

கொழும்பு பல்கலைக்கழக ரோசிரியர் கொடிக்காரவினால் கூறப்பட்ட கூற்றுக்களே இவை. மலையக மக்களைப் பொறுத்து இக் கூற்று முற்றிலும் பொருத்தமுடையதாக இருந்தது. இதனால் 1947 இல் 7 பிரதிநிதிகளை பாராளுமன்றத்திற்கு அனுப்பிய மலையக மக்களால் பிற்காலத்தில் ஒருவரைக் கூட அனுப்ப முடியவில்லை. பிரஜாவுரிமைச் சட்டங்களைத் தொடர்ந்து, கொண்டு வரப்பட்ட வாக்குரிமைச் சட்டம் பிரஜாவுரிமை உள்ளவர்களுக்கு மட்டுமே வாக்குரிமையை வழங்கியதால் இந் நிலை ஏற்பட்டது.

மலைமகன்

1948ம் ஆண்டு கொண்டு வரப்பட்ட பிரஜாவுரிமைச் சட்டத்திற்கு பல பக்கங்களிலிருந்தும் எதிர்ப்புக் கிளம்பியமையால் 1949ம் ஆண்டு இந்திய–பாகிஸ்தானிய பிரஜாவுரிமைச் சட்டம் கொண்டு வரப்பட்டது. இதன்படி பிஜைாவுரிமை பெறுவதற்கு 1946 க்கு முன்னர் மணம் முடித்தவராயின் 7 வருடங்களும், மணம் முடிக்காதவராயின் 10 வருடங்களும் இலங்கையில் தொடர்ச்சியாக வசித்திருக்க வேண்டும் எனக் கூறப்பட்டது. ஆனால் இதனை நிரூபிப்பதற்கு கடுமையான சிக்கலான விதிமுறைகள் கையாளப்பட்டன. அவற்றில் வசிப்பிடத் தகைமைகள் பற்றிய விதிமுறைகளே மிகக் கொடுரமானதாக இருந்தது. வசிப்பிடத் தகமைகளின்படி பிரஜாவுரிமைக்கு விண்ணப்பிப்பவர் நியாயமானளவு நிதிவசதி, நிரந்தரமாக குடியேறும் எண்ணம் என்பவற்றைக் கொண்டிருக்க வேண்டும் எனக் கூறப்பட்டது.

இவ் ஏற்பாடுகள் சான்றுகளின் போதாத்தன்மையை காரணமாகக் காட்டி விண்ணப்பத்தை நிராகரிப்பதற்கு ஆட்சியாளருக்கு வசதியாக இருந்தது. உதாரணமாக துரைசாமி வழக்கில் விண்ணப்பதாரர் தான் இந் நாட்டில் தொடர்ச்சியாக வாழ்ந்தார் என்பதை நிரூபித்தாலும் நிரந்தரமாக குடியேறும் நோக்கம் சரியாக நிரூபிக்கப் படவில்லை எனக் கூறப்பட்டு விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது.

இந்தியாவுக்கு பணம் அனுப்பும் பலர் அதற்கான படிவத்தில் தற்காலிகமாக வசிப்பவர் எனக் குறிப்பிட்டிருந்தார்கள் என்ற காரணத்துக்காகவும் இவர்களது விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன.

உண்மையில் விண்ணப்பங்களை பரிசீலனை செய்த நிர்வாக அதிகாரிகள் பிரஜாவுரிமை வழங்கும் நோக்கத்துடன் விசாரணை நடத்துவதை விட விண்ணப்பங்களை நிராகரிக்கும் நோக்கத்துடனேயே விசாரணைகளை நடத்தியிருந்தனர். இதனை இதுபற்றிய வழக்கை விசாரணை செய்த நீதிபதி பேர்ணாண்டோவே ஒருதடவை ஒப்புக்கொண்டிருந்தார்.

விண்ணப்பப் படிவங்களில் காணப்பட்ட எழுத்துப் பிழைகளுக்காகவும் கூட பல விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன. விண்ணப்பதாரர்களுடைய மனுக்கள் ஏன் நிராகரிக்கக் கூடாது என்பது தொடர்பாக அனுப்பிய கடிதங்களுக்கு பதில் கிடைக்கவில்லை என்பதற்காகவும் பல விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன. உண்மையில் அக் கடிதங்களில் பல பதிவுத் தபாலில் அனுப்பப்பட்ட போதும் விண்ணப்பதாரர்களுக்கு கிடைக்கவில்லை. இதனால் 1956 ஜனவரி தொடக்கம் நவம்பர் வரை 28,204 மனுக்கள் நிராகரிக்கப்பட்டன என பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சரின் தகவல்களிலிருந்து தெரியவருகின்றது.

### பிராஜாவுரிமைச் சட்டங்களும் அரசியற் கட்சிகளும்.

1) தமிழ்க் காங்கிரசும் ஏனைய சிறுபான்மை இன உறுப்பினர்களும்

பிரஜாவுரிமைச் சட்டம் கொண்டு வரப்பட்ட போது அங்கீகரிக்கப்பட்ட தமிழ்க் கட்சியாக அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி மட்டுமே இருந்தது. முதலாவது சட்டம் கொண்டுவரப்பட்ட போது தமிழ்க் காங்கிரஸ் அதனை எதிர்த்தது. ஆனால் காங்கிரஸ் கட்சியை சேராத ஐக்கிய தேசியக் கட்சியில் அமைச்சர்களாக இருந்த அடங்காத் தமிழன் சி. சுந்தரலிங்கம், சி. சிற்றம்பலம் என்போர் அதனை ஆதரித்தனர். எனினும் சி. சுந்தரலிங்கம் பின்னர் இது தொடர்பாக அரசாங்கத்தோடு முரண்பட்டு தனது அமைச்சர் பதவியை இராஜினாமாச் செய்தார்.

இரண்டாவது சட்டம் கொண்டு வரப்பட்ட போது பிரதமர் D.S.சேனநாயக்கா தமிழ்க் காங்கிரஸ் கட்சியை


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சட்டத்தை ஆதரிக்க வைக்க வேண்டும் என்பதற்காக அதன் தலைவர் ஜி.ஜி பொன்னம்பலத்திற்கு கைத்தொழில் அமைச்சர் பதவியைக் கொடுக்க முன்வந்தார். இவ் அமைச்சர் பதவியில் மயங்கிய ஜி.ஜி. பொன்னம்பலம் சட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்தார். இவரோடு தமிழ்க் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த கே.கனகரத்தினம், ரிராமலிங்கம் ஆகியோரும் ஆதரித்து வாக்களித்தனர். ஆனால் அதில் உறுப்பினராக இருந்த எஸ்.ஜே.வி செல்வநாயகம் எதிராக வாக்களித்ததோடு தமிழ்க் காங்கிரஸ் கட்சியிலிருந்து வெளியேறி, அகில இலங்கைத் தமிழ்அரசுக்கட்சியை உருவாக்கினார். இன்று இந்திய வம்சாவழியினருக்கு நடைபெறுகின்ற இந்த அநீதி நாளை இலங்கைத் தமிழருக்கும் நடக்கலாம் எனக் கூறியே கட்சியிலிருந்து வெளியேறினார்.

தமிழ்க் காங்கிரஸ் கட்சிக்குப் புறம்பாக பாராளுமன்றத்தில் சுயேட்சையாக அங்கம் வகித்த தமிழ் உறுப்பினர்களான S.U. எதிர்மன்னசிங்கம், வி.நல்லையா, A.L. தம்பையா ஆகியோரும் சட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்தனர். முஸ்லீம் உறுப்பினர்களில் T.B. ஜாயா, H.S. இஸ்மாயில், M.S. காரியப்பர், A.L. சின்னலெப்பை, M.M. இப்ராகிம் ஆகியோரும் ஆதரவாக வாக்களித்தனர். நியமன உறுப்பினர்களில் ஐரோப்பிய அங்கத்தவர்களான F.H. கிரிவ்த், மேயர் J.W. ஒல்பீல்ட், S.A. பகீமன், E.E. ஸ்பென்சர் என்பவர்களும் பறங்கி இனத்தவரான J.O. மாட்டென்சும் ஆதரவாக வாக்களித்தனர்.

ஏனைய சிறுபான்மை இனத்தவர்களை கவனத்தில் எடுக்காவிட்டாலும் தமிழ்ப் பிரதிநிதிகள் இதனை ஆதரித்தமை மிகப்பெரிய துரோகமாக இருந்தது. உண்மையில் தமிழ் உறுப்பினர்களில் செல்வநாயகத்தைத் தவிர மற்றைய எல்லோரும் இதனை ஆதரித்தனர். இத் துரோகச் செயலுக்கான விலையை தமிழ்த் தேசிய இனம் இன்றுவரை அனுபவித்தே வருகின்றது என்றே கூறவேண்டும். இன்றும் கூட மலையக மக்கள் வட, கிழக்கு தமிழர்களில் நம்பிக்கை வைக்காததற்கு இத் துரோகச் செயல் முக்கிய காரணமாக அமைந்துள்ளது. தமிழ்த் தலைவர்கள் இத் துரோகச் செயலைச் செய்யாவிட்டால் தமிழர்கள் என்ற வகையில் மலையகத் தமிழரும் இலங்கைத் தமிழர்களும் ஐக்கியப்பட்டிருக்க முடியும். இரு சமூகமும் இணைந்த வகையில் ஒரு தமிழ்த் தேசியத்தைக் கட்டியெழுப்பியிருக்க முடியும். இத் தேசியத்தின் வளர்ச்சியில் அரசுக்கு இருபக்க அழுத்தங்களைக் கொடுப்பதன் மூலம் இரு இனங்களினதும் விடுதலையைக் கூட அதிக இழப்புக்கள் இல்லாமல் பெற்றிருக்க முடியும். தலைவர்கள் துரோகமிழைத்தார்கள். விளைவு : தமிழர்கள் மலையகத் தமிழர், வட கிழக்குத் தமிழர் எனக் கூறுபோடப்பட்டனர். உண்மையில் இக் காலப் பகுதியில் பரம வைரிகளாக இருந்த கண்டியச் சிங்களவர்களும் கரையோரச் சிங்களவர்களும் பௌத்த சிங்கள தேசிய வாதம் என்ற அணிக்குள் ஐக்கியப்படத் தொடங்கினர். சமஸ்டிக் கோரிக்கையை முன்வைத்த கண்டியர் அதனைக் கைவிட்டு கரையோரச் சிங்களவர்களோடு கைகோர்த்து நின்றனர். ஆனால் சிறுபான்மை இனத்தவர்களான தமிழர்களும் முஸ்லிம்களும், மலையகத் தமிழர்களும் தமிழ் பேசும் மக்கள் என்ற வகையில் ஐக்கியப்படக் கூடியதாக இருந்தும் தமிழ்த் தலைமை அதனை உடைத் தெறிந்தது. 1920 களின் ஆரம்பத்தில் இதற்காக சிறுபான்மையோர் ஐக்கிய முன்னணி என்ற அமைப்பை உருவாக்கிய போதும் யாழ்ப்பாணத்துத் தமிழ்த் தலைமையின் மேலாதிக்கத்தினால் அது சிதறிப் போனது. பின்னர் தமிழர்கள் என்ற வகையில் மலையகத் தமிழர்களும், வடக்கு கிழக்குத் தமிழர்களும் ஐக்கியப்படக் கூடிய சூழல் இருந்தும் அதனையும் தமிழ்த் தலைமை சிதைத்தது. தொடர்ந்து வந்த காலங்களில் மலையகத் தமிழர்களுக்கு எதிரான நடவடிக்கைகளை இத் தலைமை எடுத்த போதும் பிரஜாவுரிமைச் சட்டத்தை ஆதரித்தமையே தமிழ்த் தலைமையின் நிலைமையை தெளிவாக கோடிட்டு காட்டியது.

எஸ்.ஜே.வி செல்வநாயகமும் அவரது தமிழரசுக் கட்சியினரும் இதற்கு விதிவிலக்காக இருந்த போதும் பிரஜாவுரிமைப் பறிப்புக்கு எதிரான போராட்டம் எவற்றையும் நடாத்த வில்லை. பாராளுமன்ற உரைகளில் மட்டும் அதனைக் கோரிக்கையாக வைத்திருந்தனர். 1956ம் ஆண்டு பண்டா–செல்வா ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட போது முதலில் பிரஜாவுரிமைக் கோரிக்கையை முன்வைத்தார்களாயினும் பின்னர் பண்டாரநாயக்காவின் வற்புறுத்தலினால் அதனைக் கைவிட்டிருந்தனர். இதன் பின்னர் மேடைப் பேச்சுக்களில் மலையக மக்களைப் பற்றி கதைப்பார்களே தவிர அரசியல் கோரிக்கைகளில் அதனைக் கவனத்தில் எடுப்பதில்லை.

தமிழரசுக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி வழிவந்த விடுதலை இயக்கங்கள் கூட ஆரம்பத்தில் தமது அமைப்பு மலையக மக்களின் விடுதலைக்காகவும் போராடும் என அறைகூவின. EPRLF, EROS என்பன தமது ஈழம் மலையகத்தையும் உள்ளடக்கியது என்றது. EROS இன்னும் ஒருபடி கூடச் சென்று ஈழப் போராட்டத்தின் தலைமைச் சக்திகள் மலையக மக்களே என்றது. திம்புப் பேச்சுவார்த்தையிலும் மலையக மக்களுக்கு பிரஜாவுரிமை என்பதை ஒரு கோரிக்கையாக வைத்தன. ஆனால் தற்போது எல்லோரும் மலையக மக்களைக் கைவிட்ட நிலையிலேயே உள்ளனர். தமிழ்க் குழுக்களால் பாராளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு முன்வைக்கப்பட்ட நான்கு அம்சக் கோரிக்கையில் கூட மலையக மக்கள் பற்றி எதுவுமே கிடையாது. சந்திரசேகரன்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தலைமையிலான மலையக மக்கள் முன்னணி இது தொடர்பாக வற்புறுத்தியும் கூட தமிழ்க் குழுக்கள் அதற்கு செவிசாய்க்கவில்லை.

2) சிங்கள சுயேட்சை உறுப்பினர்கள்

சட்டத்தை எதிர்த்து வாக்களிக்க வேண்டிய தமிழ் உறுப்பினர்களும் ஏனைய சிறுபான்மை உறுப்பினர்களும் சட்டத்தை ஆதரித்து வாக்களித்த வேளை இடதுசாரிகளல்லாத பல சிங்கள சுயேட்சை அங்கத்தவர்கள் சட்டத்தை எதிர்த்து வாக்களித்திருந்தனர். லக்ஷ்மன் ராஜபக்ச, வில்மட் பெரேரா, R.S. பெல்பொல, I.M.R.A ஈரியக்கொல, H.சிறீநிசங்க என்பவர்கள் எதிர்த்து வாக்களித்திருந்தனர். இவர்களில் பிரபலம் வாய்ந்த பௌத்தரான சிறீநிசங்க "சட்ட ஆக்கற் கோட்பாடுகளின் முதலாவது விதியை அலட்சியப் படுத்தும் ஒரு நடவடிக்கைக்கு நான் வாக்களிக்க மாட்டேன். இத்தகைய கடின பிரச்சனையின் தீர்வுக்கான அணுகுமுறை வேறாக இருக்க வேண்டும்" எனக் குறிப்பிட்டார்.

அரசாங்க கட்சி உறுப்பினர்களில் பெரும்பாலானவர்கள் சட்டத்திற்கு ஆதரவாக இருந்த போதும் S.W.R.D பண்டாரநாயக்கா சட்டத்தை எதிர்த்திருந்தார். இதனூடாக அவர் அரசாங்கத்திலிருந்து தன்னை வேறுபடுத்தி காட்டியிருந்தார். அவர் இதுபற்றிக் குறிப்பிடும் போது "எந்தவித வேலையுமற்ற சிங்களவர் ஒருவர் பிரஜாவுரிமை பெறுவதற்கு தகுதியுடையவரானால் வருமானம் எதுவுமற்ற ஓர் இந்தியருக்கு ஏன் இந்த உரிமை விலக்கப்பட வேண்டும். இத்தகைய அளவுகோல் மிக மோசமான வகுப்பு வாதச் சார்பு உடையது அல்லவா? வகுப்பு வாதச் சார்பு கீழிருந்து வருவதில்லை, எப்போதும் மேலிருந்தே வருவது" எனக் குறிப்பிட்டார்.

பண்டாரநாயக்காவைப் பொறுத்தவரை இந்திய வம்சாவளித் தொழிலாளர்கள் நாட்டுக்கு இன்னும் தேவையாக இருப்பதால் அவர்களுக்குரிய சகல உரிமைகளும் இந் நாட்டின் தொழிலாளர்களுக்குரிய எல்லா நலன்களும் அளிக்கப்பட வேண்டும் என்பதே கருத்தாக இருந்தது. இந்தியாவுக்கு திரும்ப விரும்புவோருக்கு நீதியான சிறந்த வசதிகள் அளிக்கப்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

- தொடரும் -

# மன வாய் உணவுகள்

எந்த வேளையிலும் உண்டுகொண்டே இருக்கின்றேன்
ஒரு வினாடிகூட என்வாய்
இருக்கவில்லை ஓய்வாய்.
பசு மாட்டின் இறைச்சியைப்போல
இந்த மலைகளை
நான் கடித்து இழுத்துத் தின்னத் தின்னக்
குறைவதைப் போன்றும் காணவில்லை.
கடலும் குடிக்கக் குடிக்க
வற்றவில்லை.

தென்னைமரங்களை நான் முருங்கைக்காயைக் கார்வதைப்போல
புயல்போல வந்து நான்
கார்ந்து எறிந்தும்
அவை குறைந்ததாய்
தெரியவில்லை எனக்கு.

நீ இன்னும் நம்பவில்லை,
தொடர்ந்து நான்
சாப்பிட்டுக்கொண்டே இருப்பதை!
மீன்கறி சமைத்து வெண் பாத்திரத்தில் சோறு
போட்டுக்கொண்டு தருகிறாய்
தாயே;

நான் இடிமுழக்கத்திற்குள் பீங்கான் கழுவுகின்ற சத்தமாவது
உன் காதுகளுக்கு இதுவரை
கேட்கவே இல்லையா!
நட்சத்திரங்களைப் பொரித்துத் தருகிறது வெயில்
நீ சின்னமீன் பொரிக்கும்
விதம்போல.


அற்புதம், தாயே
நட்சத்திரப் பொரியல்
அற்புதம்!
நீ என்னமீன் சமைத்துள்ளாய் இன்று!
இப்போது நான் சாப்பிட்டுக்கொண்டிருக்கிறேன்
நிலவுப் பப்படமும்
பகல் பிடித்து சமைத்துவைத்து இரவுதரும்
சூரிய முள்ளின் சூப்பும்.
வேண்டாம்தாயே, சாப்பாடு, என்னை இந்த
தினிசுகளை உண்ணவிடு,
மன வாயால்.

– சோலைக்கிளி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**பங்குனி**

**v**

**சித்திரை**

**1994**

❖❖❖

*இரு மாதத்துக்கு ஒருமுறை வெளிவரும் இதழ்*

**ப**றவைகள் காலநிலை மாற்றத்திற்கேற்ப நாடுகள் மாறுவது போல் இன்று தமிழ் அகதிகளின் இருப்பும் அந்தந்த நாட்டு அரசியல் சூழலுக்கேற்ப நாடு மாற வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகியுள்ளனர். 83 களில் இலங்கை தமிழ் அகதிகளை இந்திய அரசும் தமிழக அரசியற்கட்சிகளும் போட்டி போட்டு வரவேற்று தஞ்சம் கொடுத்தனர். இந்நடவடிக்கை இலங்கை அரசியலில் தனது தலையை நீட்டுவதற்கு இந்திய அரசிற்கு ஓர் நல்ல வாய்ப்பாக அமைந்தது. இன்று தமது நோக்கங்கள் தேவைகள் மாறிவரும் போது தமிழ் அகதிகளை வெளியேற்றுவதில் முன்முயற்சி எடுத்து செயலாற்றி வருகின்றது.

இவ்வகை செயற்பாடுகள் இந்தியாவில் மட்டுமல்லாது ""சிவப்பு நாடுகள"" என கருதப்பட்ட நாடுகளிலிருந்து வெளியேறிய அகதிகளை கப்பலும் விமானமும் அனுப்பி இறக்குமதி செய்து விசேட சலுகை வழங்கி மேற்குலக நாடுகள் தஞ்சம் அளித்தனர். ஆனால் இன்று மேற்குலக நாடுகளில் தஞ்சம் புகுந்துள்ள தமிழ் அகதிகள் ஓர் அழையா விருந்தாளிகளே.

உலக நாடுகளில் அகதிகள் விவகாரம் உள்நாட்டு அரசியல் நடவடிக்கைகளில் எவ்வாறு தாக்கம் செலுத்துகின்றன என்பதற்கு சுவிற்சர்லாந்து ஓர் நல்ல உதாரணம். சுவிற்சர்லாந்தில் அகதிகளும் வெளிநாட்டவர்களும் ஓர் அரசியற் தீர்மான சக்திகளாக இருப்பதனை தேர்தல் காலங்களில் அனைத்து அரசியற் கட்சிகளின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் இருந்து கண்டு கொள்ளலாம்.

சுவிற்சர்லாந்து அரசு தமிழர்களை திருப்பி அனுப்பப் போவதாக ஒவ்வொரு தேர்தல் காலங்களிலும் அரசியல் நெருக்கடிகளின் போதும் அறிக்கைகளை விட்டு பூச்சாண்டி காட்டி வருவது வழமையாக இருந்த போதும் இம்முறை அறிக்கையோடு மட்டும் நின்று விடாது இவ்வாண்டு ஆரம்பத்தில் தமிழ் அகதிகளை திருப்பி அனுப்புவது தொடர்பாக இலங்கை அரசுடன் ஓர் உடன்படிக்கையை செய்து கொண்டது தமிழ் அகதிகளை வியப்பிற்குள்ளாக்கி இருந்தது.

இந்நிலைமையை கணக்கில் கொண்டு இம் மாதம் (ஏப்பிரல்) சுவிற்சர்லாந்து தமிழர் அமைப்பினால் நடாத்தப்பட்ட உண்ணாவிரதப்போராட்டமும் எதிர்ப்பு ஊர்வலமும் தமிழ் மக்களின் சார்பிலான எதிர்ப்பினை தெரிவித்திருந்தது. இவ் எதிர்ப்பு நடவடிக்கையில் உண்மையாக பாதிக்கப்கட்டவர்கள் குறைந்த அளவினரே கலந்து கொண்டாலும் ஏனையோர் இப்போராட்டத்தினை வழிநடாத்தியும் பிரதிநிதித்துவப்படுத்தியதும் ஓர் வரவேற்க தக்க நிகழ்வாகும்.

பொது மக்களின் அபிப்பிராயப்படி இந்நாட்டில் தஞ்சம் புகுந்த அகதிகள் பிரிவினரில் தமிழ் அகதிகள் விரும்பத்தக்கவர்களாக கருதப்படுகின்றனர். ஏனெனில் பெரும்பான்மையான தமிழ் அகதிகள் வேலை செய்து வருகின்றனர். இந்நடவடிக்கை மட்டுமல்லாது எதிர்ப்பு குணாம்சம் குறைந்தவர்களாகவும் எதற்கும் வளைந்து கொடுக்க கூடியவர்களாகவும் கணிக்கப்படுகின்றனர். நாமும் இப் பொறியில் ஓர் முக்கிய உதிரிப்பாகங்களாக மாறியுள்ளதே உண்மை.

வழமையாக அரசின் தீர்மானங்கள் சமூக சேவை நிறுவனங்களினதும் மனித

www.tamilarangam.net

உரிமைகள் அமைப்புக்களினதும் கண்டனத்திற்கும் விமர்சனத்திற்கும் உள்ளாகி முடிவை மாற்றும் தருவாயில் காகம் இருக்க பனம் பழம் விழுவது போல் இலங்கை நிலைமைகளும் மோசமடைந்து வந்துள்ளது. இவற்றை காரணம காட்டி அரசு தனது முடிவை மாற்றிக் கொண்டுள்ளது. ஆனால் இம்முறையும் வழமைபோல் சுவிற்சர்லாந்து அகதி உதவி நிறுவனத்தினர் (SFH) இலங்கை சென்று நிலைமைகளை அவதானித்து கடந்த 19 ஏப்ரல் 94 இல் பத்திரிகையாளர் மாநாட்டினைக் கூட்டி தமிழ் அகதிகளை திருப்பி அனுப்புவதற்கு இது நேரமில்லை (The Time in not yet ripe) என தலைப்பிட்ட இலங்கை நிலைமை பற்றி தமது பயண அறிக்கையை சமர்ப்பித்துள்ளனர். இவ் அறிக்கை தெரிவிப்பதாவது இலங்கையில் தொடர்ச்சியான மனித உரிமை மீறல்கள் நடைபெறுவதாகவும் இவ்வகையில் நடைபெறும் மனித உரிமைகள் மீறல்களிற்கு அவசரகால சட்ட மூலமும் பயங்கரவாத தடைசட்டமும் நன்கு துணை போவதாக எடுத்து கூறியுள்ளது. மேலும் இலங்கை அரசினால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் இரகசிய தடுப்பு காவல் நிலையங்களை உள்நாட்டு - சர்வதேச மனித உரிமைகள் அமைப்புக்கள் பார்வையிடுவதற்கான அனுமதி கொடுக்கப்பட வேண்டும் எனவும் கோரியுள்ளனர்.

அண்மையில் கொழும்பில் நடைபெற்ற குண்டு வெடிப்பு சம்பவங்களின் போது நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்ட போதும் சுவிற்சர்லாந்து சமஸ்டி பொலிஸ் நீதித்துறை அமைச்சர் (EJPD) Arnold Koller கடந்த 20 ஏப்ரல் அன்று தமிழ் அகதிகள் சம்பந்தமான இறுதி முடிவை அறிவித்தார். இந்நாட்டில் 4 வருடங்களுக்கு மேல் தஞ்சம் அடைந்துள்ள அகதி விண்ணப்பதாரர்களுக்கு டீ வதிவிட அனுமதி அல்லது மாற்று வழி தீர்மானிக்கப்படும் எனவும் ஆனால் 1990 இற்கு பிற்பாடு வந்த 12 ஆயிரம் தமிழ் அகதிகள் திருப்பி அனுப்பப்படுவார்கள் எனவும் இவர்கள் முறையே (Last in first out) கடைசியாக வந்தவர் முதலில் என்ற அடிப்படையில் முதல் கட்டமாக 600 தமிழ் திருப்பி அனுப்பப்படுவார்கள் என அறிவித்துள்ளார். திருப்பி அனுப்பப்படும் தமிழ் அகதிகளின் நிலைமைகளை UNHCR கவனிக்கும் என தெரிவித்துள்ளனர்.

UNHCR இன் கண்காணிப்பில் உள்ள அகதிகள் காணாமல் போவதை பத்திரிகைகள் மூலம் அறியக்கூடியதாகவுள்ளது. இவர்களின் உத்தரவாதம் எந்தளவிற்கு நேர்த்தியானது என்பதனை யதார்த்தத்தில் இருந்தே புரிந்து கொள்ளலாம். இலங்கை அரசுடன் சுவிஸ் அரசு ஏற்படுத்திய ஒப்பந்தத்தில் யுத்தப் பிரதேசத்தினை இருப்பிடமாக கொண்டவர்கள் சொந்த இடங்களிற்கு செல்ல நிர்ப்பந்திக்கப்பட மாட்டார்கள் என குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் UNHCR இந்தியாவில் இருந்து திருப்பி அனுப்பப்பட்ட தமிழ் அகதிகளுக்கு சொந்த இடங்களிற்கு திரும்புபவர்களுக்கு மேலதிக நிவாரணம் வழங்குவதாக சலுகைகளை அறிவித்து மறைமுக நிர்ப்பந்தத்தினை கொடுத்து வருகின்றது.

சுவிஸ் அரசு இலங்கை தமிழ் அகதிகளை திருப்பி அனுப்புவதற்கு உண்மைக்கு புறம்பாக இலங்கை நிலைமை சீரடைந்துள்ளதாக பிரச்சாரம் செய்வது போலியானது. மாறாக இவ்வகையில் ஒரு முடிவினை எடுப்பதற்கு முக்கிய காரணமாக அமைந்தது பழைய யூகோசெலாவியாவில் நடைபெறும் யுத்தமும் வெளியேறி வரும் அகதிகளின் எண்ணிக்கையுமே காரணமாகும்.



**சந்தா விபரம் :**

**தனிப்பிரதி : 3 SFr**
**வருட சந்தா : 22 SFr**

**ஐரோப்பிய நாடுகளிற்கு .... -25 SFr**

**Postcheck Konto :**
30-37152-1
Manitham

**Bank Konto :**
Schweizerische
Kreditanstalt
3001 BERN
Nr- 220348-70


**இலங்கை, இந்தியா -இலவசம்**

www.tamilarangam.net

## புராண நாடகங்கள் மட்டும்

சென்ற வருடம் தமிழ்த் தின விழாப் போட்டியை நடாத்திய அரசுக்கு ஓர் இக்கட்டான நிலை ஏற்பட்டது. சமூக நாடகங்களையும் மேடையேற்றலாம் என நாடக விதிகளில் கூறப்பட்டதாலையே நெருக்கடி நிலை ஏற்பட்டது. அப் போட்டியில் பொகவந்தலாவ சென் மேரிஸ் வித்தியாலயம் மேடையேற்றிய "வீட்டில் வெளிச்சம் இல்லை"என்ற நாடகம் தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கை நிலையை தோலுரித்துக் காட்டியதோடு அரசையும் மறைமுகமாக கண்டித்திருந்தது. நடுவர்கள் அந் நாடகத்திற்கு முதற்பரிசினைக் கொடுத்த போதும் பரிசளிப்பு விழாவின் போது அந்த நாடகத்திற்கு முதற்பரிசினைக் கொடுக்காமல் இரண்டாவதாக வந்த நாடகத்திற்கே முதற் பரிசு கொடுக்கப்பட்டது.

அரசின் இச் செயற்பாடு மலையகம் எங்கும் பாரிய கண்டனத்திற்கு உள்ளானது. மலையக அமைப்புக்கள், மாணவர்கள், தொழிற்சங்கங்கள் என்பன இது தொடர்பாக கண்டனங்களைத் தெரிவித்திருந்தன. தொண்டமான் இச் செயற்பாட்டுக்கு ஆதரவாக இருந்தமையால் அவரும் கண்டனத்துக்குள்ளானர். தற்போது அரசு விழித்துக் கொண்டது விளைவு சமூக நாடகங்கள் ஒன்றும் மேடையேற்றப்படக் கூடாது புராண நாடகங்கள் மட்டுமே மேடையேற்றப்படலாம் என பாடசாலைகளுக்கு அரசு சுற்றறிக்கை ஒன்றை அனுப்பியுள்ளது. இச் சுற்றறிக்கையை மலையக தமிழ்ப் பாடசாலைகளுக்கு, மத்திய மாகாண தமிழ்ப் பாடசலைகளுக்கான அமைச்சு அனுப்பியுள்ளது.




## யாழ்பாணத்தில் உள்ளவர்களுடன் தொடர்பா?? உடன் கைது

மலையகத்தில் படையினர் இப்போ புதுவித பணியை ஆரம்பித்துள்ளார்கள். யாழ்ப்பாணத்தில் உள்ளவர்களுடன் தொடர்பு வைத்திருப்பவர்களை கைது செய்வதே அப்பணி.

அண்மையில் அட்டன் ஆர்னகல் தோட்டத்தைச் சேர்ந்த 45 வயது தொழிலாளியான சுப்பையா என்பவர் கைது செய்யப்பட்டார். காரணம் யாழ்ப்பாணத்தில் விவாகம் செய்துள்ள இவரது மகள் இவர் கைது செய்யப் படுவதற்கு சில வாரங்களுக்கு முன்னர் தோட்டத்திற்கு வந்து பெற்றோரை பார்த்துச் சென்றுள்ளராம்.

அண்மையில் கொழும்பு முகத்துவார அகதி முகாமில் வசிக்கும் ஜவ்பர் (வயது 31) எனும் முஸ்லீம் பெண்மணியும் நள்ளிரவில் கைது செய்யப்பட்டுள்ளார். புலிகளின் காவலில் இருக்கும் அவரது கணவருடன் அவர் தொடர்பு வைத்திருப்பதன் மூலம் புலிகளின் உளவாளியாக தொழிற்படுகின்றார் என கைது செய்வதற்கு காரணம் காட்டியுள்ளார்கள். இப்போது தென் இலங்கையில் வாழும் தமிழ் பேசும் மக்கள் யாழ்ப்பாணத்தவர்களைக் கண்டாலே ஓடி ஒழிகின்றார்கள்.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## யுத்த மேகத்தினால் சூழப்பட்ட மலையகம்

தொண்டமானுக்கும் செல்லச்சாமிக்குமிடையில் ஏற்பட்ட யுத்தம் இன்று மலையகமெங்கும் பரவ ஆரம்பித்துள்ளது. இருபக்கத்தவர்களும் மலையக தோட்டங்கள் தோறும் தமது பிரச்சாரத்தை முடிக்கிவிட்டு உள்ளனர். செல்லச்சாமியின் கூட்டங்களுக்கு அரசு முழுமையான பாதுகாப்பைக் கொடுத்து வருகின்றது. இருந்தும் தொண்டமான் ஆதரவாளர்கள் செல்லச்சாமி ஆதரவாளர்களால் தாக்கப்படுவது மலையக மெங்கும் சகஜமாக நடை பெற்றுவருகின்றது.

இதோ சில உதாரணங்கள்:-

1) கொட்டகல நகரில் தீனதயாள் என்ற பலசரக்கு கடைவியாபாரி அமைச்சர் தொண்டமானின் பேரன் ஆறுமுகம்-தொண்டமானின் அடியாட்களால் கடையிலிருந்து வெளியே இழுத்து வரப்பட்டு தாக்கப்பட்டார். அத்துடன் பாலித்த ோட்டல் உரிமையாளரான சிங்கள முதலாளி ஒருவரும் தாக்குவதற்காக மேற்படி தாக்குதல்களில் சம்பந்தப்பட்ட இளைஞர்களால் தேடப்பட்டுள்ளார்.

2)இ.தொ.காவின் தேசிய சபைக் கூட்டத்தில் கலந்து கொண்ட அட்டன் மாவட்ட காங்கிரஸ் தலைவரும் வாலிப காங்கிரஸ் தலைவருமான சதாசிவம். செல்லச்சாமிக்கு ஆதரவாக சில கேள்விகள் கேட்க முற்பட்ட போது பலாத்காரமாக மேடையிலிருந்து இறக்கப்பட்டார்.

3) செல்லச்சாமிக்கு சார்பாக உள்ள மத்தியமாகாண சபை உறுப்பினர் ரெங்கநாதன் தேசிய சபைக் கூட்டத்தில் பங்கு பற்றச் சென்ற போது தாக்கப்பட்டதோடு கூட்டத்தில் கலந்து கொள்வதிலிருந்து தடுக்கவும் பட்டார்.

4) செல்லச்சாமியின் ஆதரவாளரும் இ.தொ.கா மகளிர்ப் பகுதி இணைப்பாளரும் பிரதேச சபை உறுப்பினருமாகிய கிறிஸ்டின் அந்தோனி, இ.தொ.கா மகளிர் பகுதி உத்தியோகஸ்தர்களாகிய மால்வரோ-செல்வராணி, கிறிஸ்லெஸ்பாம், மனோன்மணி ஆகியோரால் தாக்கப்பட்டு டிக்கோயா கிளென்கன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## முனைப்பு பெறும் முஸ்லீம் தேசியவாதம்

மார்ச் 1ம் திகதி அரசாங்கம் பல தில்லு முள்ளுகளுக்கு மத்தியில் கிழக்கிலும், வவுனியா நகரசபையிலும் உள்ளூராட்சி தேர்தல் நடாத்தி முடித்துவிட்டது. கிழக்கில் மட்டக்களப்பு மாவட்டத்திலும் திருகோணமலை மாவட்டத்திலும் தேர்தல் என்ற பேயரில் ஒரு கூத்தையே நடாத்தி முடித்துள்ளது. அம்பாறை மாவட்டத்திலும் முஸ்லீம்கள் அல்லாத பிரதேசத்தில் இதே நிலைதான் தேர்தல் ஓரளவாவது ஒழுங்காக நடைபெற்ற இடம் அம்பாறை மாவட்டத்தின் முஸ்லீம் பிரதேசங்கள் தான். அங்கு முஸ்லீம் காங்கிரஸ்சுக்கும், ஐக்கிய தேசிய கட்சிக்கும் நேரடி போட்டி நடைபெற்றது. அஸ்ரப், மன்சூரும் யார் முஸ்லீம்களின் தலைவர் என்பதைக் காட்டும் பலப்பரீட்சையில் இறங்கியிருந்தனர். மன்சூர் அம்பாறை மாவட்டத்தில் மாதக் கணக்காக முகாம் அமைத்து நின்று பல அபிவிருத்தி திட்டங்களுக்கான அடிக்கல்லையும் ஆரம்பித்து வைத்தார்.

முஸ்லீம் தேசியவாதம் கிழக்கில் முனைப்புப் பெற்று வருகின்றது என்பதையே காட்டுகிறது. இவ் வெற்றிக்கு மத்திலிலும் தான் சவால் விட்டபடி அம்பாறை மாவட்டத்தின் ஆறு பிரதேச சபைகளும் தமக்குக் கிடைக்காதமையால் தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்வதற்கு அஸ்ரப் முன்வந்துள்ளார். கட்சிக்குள்ளும் கட்சிக்கு வெளியிலும் அதனைப் பலர் எதிர்த்த போதும் தனது முடிவில் அவர் உறுதியாகவே உள்ளார். இவ் இராஜினாமா முயற்சி அடுத்து வரும் பாராளுமன்றத் தேர்தலில் முஸ்லீம்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆயினும் என்ன? முஸ்லீம் காங்கிரஸ் முன்வைத்த முஸ்லீம் தேசியவாத அரசியலுக்கு முன்னால் மன்சூரால் நின்றுபிடிக்க முடியவில்லை. தான் பரம்பரை பரம்பரையாக வெற்றி பெற்று வந்த கல்முனையிலேயே தோல்வியுற்றார். அம்பாறை மாவட்டத்திலுள்ள ஆறு பிரதேச சபைகளில் நான்கு பிரதேச சபைகளை முஸ்லீம் காங்கிரஸ் கைப்பற்றிக் கொண்டது. இரு பிரதேச சபைகளை மட்டும் சொற்ப வாக்கு வித்தியாசத்தில் ஐக்கிய தேசியக் கட்சி கைப்பற்றியது.

இதைவிட மட்டக்களப்பு மாவட்டத்தில் காத்தான்குடி பிரதேச சபையையும் திருகோணமலை மாவட்டத்தில் மூதூர் பிரதேச சபையையும் முஸ்லீம் காங்கிரஸ் கைப்பற்றியுள்ளது.

1989 தேர்தலில் கிழக்கில் முஸ்லீம் காங்கிரஸ் பெற்ற வாக்குகளை விட அதிகளவிலான வாக்குகளை இத் தேர்தலில் பெற்றுள்ளது. இது முஸ்லீம் தேசியவாதம் கிழக்கில் முனைப்புப் பெற்று வருகின்றது என்பதையே காட்டுகிறது. இவ் வெற்றிக்கு மத்திலிலும் தான் சவால் விட்டபடி அம்பாறை மாவட்டத்தின் ஆறு பிரதேச சபைகளும் தமக்குக் கிடைக்காதமையால் தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்வதற்கு அஸ்ரப் முன்வந்துள்ளார். கட்சிக்குள்ளும் கட்சிக்கு வெளியிலும் அதனைப் பலர் எதிர்த்த போதும் தனது முடிவில் அவர் உறுதியாகவே உள்ளார். இவ் இராஜினாமா முயற்ச்சி அடுத்து வரும் பாராளுமன்றத் தேர்தலில் முஸ்லீம் காங்கிரஸ்சுக்கான ஒரு முதலீடு என்றே கூறவேண்டும்.

முஸ்லீம் காங்கிரஸ்சின் வெற்றிக்கு அவர்களின் அரசியலுக்கு அப்பால் பாரியளவு உதவி புரிந்தவர் ஒருவர் இருந்தார். அவர் வேறு யாருமல்ல நமது ஜனாதிபதிதான். தேர்தல் காலத்தில் சிறுபான்மையினருக்கு எதிராக அவர் வெளியிட்ட ஒவ்வொரு கருத்துக்களையும் முஸ்லீம் காங்கிரஸ் நன்கு பயன்படுத்திக் கொண்டது.

## தமிழ் குழுக்களின் உண்மைச் சொருபத்தை வெளிக்காட்டிய ஐ. தே. க அமைச்சர்

அரசின் ஆதரவில் அதன் பணி உதவியுன் உள்ளூராட்சி தேர்தலில் போட்டியிட்ட தமிழ்க் குழுக்கள் தேர்தல் மேடைகளில் தாம் அரசிற்கு எதிரானவர்கள் எனக் காட்டும் வகையில் காரசாரமான அரசுக்கு எதிரான பிரச்சாரங்களை முடிக்கிவிட்டிருந்தனர். வடக்குக், கிழக்கைப் பிரிக்கும் வகையில் தெரிவுக் குழு முன் அறிக்கை சமர்ப்பித்த TELO இயக்கத்தினர் வடக்குக், கிழக்கு இணைப்பை வலுவாக்க தங்களுக்கு வாக்களியுங்கள் என்று பிரச்சாரம் செய்தனர். சில உறுப்பினர்கள் இன்னும் ஒரு படி மேலே சென்று ஐ.தே.க அமைச்சர்களை அவன், இவன் என்று ஒருமையில் கூட பேசியிருந்தனர்.

இவர்களுடைய பேச்சைக் கேட்டு மக்களுக்கு ஒரு சந்தேகம் இவர்கள் உண்மையாகவே அரசை எதிர்க்க ஆரம்பித்து விட்டார்களா என்று. தேர்தல் முடிவு வந்தவுடன் எல்லாவற்றையும் போட்டுடைத்தார் ஐ.தே.க அமைச்சர் சிறிசேனகூறே தேர்தல் பற்றி அவர் பத்திரிகைக்கு அறிக்கை விடும் போது "கிழக்கு மாகாணத்தில போட்டியிட்ட சுயேட்சைக் குழுக்களும் ஐ.தே.க ஆதரவானவையே" எனவே அவற்றிற்கு வாக்களித்தவர்களும் எமக்கு ஆதரவானவர்களே எனக் குறிப்பிட்டார்

இவருடைய பத்திரிகை அறிக்கையை எதிர்த்து இது வரை ஒரு தமிழ்க் குழு கூட வாய்திறக்கவில்லை. என்ன செய்வது? வாய்திறந்தால் மாதாமாதம் பாதுகாப்பு அமைச்சிடமிருந்து பெற்றுக் கொள்ளும் பணத்திற்கு இடி விழுந்திடுமே.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## சொந்த வீட்டுக்கு வாடகைப் பணம் கட்டும் தாய்

யாழ்ப்பாணத்தில் ஓர் கிராமம். நீண்டகாலமாக வாயை வயித்தைக் கட்டி ஒரு வீட்டைக் கட்டிருந்தார் கணவனில்லாத வயதான பெண்மணி. அண்மையில் அப் பெண்மணியின் ஒரே ஒரு மகளுக்கு திருமணம் நடந்தது. தான் நீண்ட காலமாய் வாழ்ந்து வந்த அந் நிலத்தையும், வீட்டையும் பெண்ணுக்கு சீதனமாய் கொடுத்திருந்தார் தாய். பெண்ணின் கணவனுக்கு கொழும்பில் வேலை. இதனால் திருமணம் முடிந்து சிறிது காலத்தில் பெண்ணும் கணவரும் கொழும்புக்கு வர தாய் மட்டும் வீட்டில் இருந்தார்.

வந்தார்கள் புலிகள்.

"இது யாருடைய வீடு" என்றார்கள் அவர்கள்.
"மகளின் வீடு" என்றார் தாய்.
"மகள் எங்கே" என்றனர் அவர்கள்.
"கொழும்பில் வேலை அதனால் கொழும்பில் நிற்கின்றார்கள" என்றார் தாய்.
"ஓஇன்னொருவர் வீட்டில் நீங்கள் தான் இருக்கின்றீர்கள். உரிமையாளர் இல்லா வீடு எங்களுக்கு சொந்தம். எனவே நீ மாதாமாதம் எங்களுக்கு வாடகை கட்ட வேண்டும்" என்றனர். ரசீதையும் கிழித்துக் கொடுத்தனர்.

இப்போ பரம்பரையாக வசித்த வீட்டுக்கு வாடகை கட்டுவதற்காக மாதாமாதம் புலிகளின் வரிகட்டும் நிலையத்திலற்கு முன் கியூவில் கால்கடுக்க நிற்கின்றார் தாய்.

## அரசின் விருதைப் பகிஸ்கரித்த சிங்கள கலைஞர்

கலாச்சார விவகார அமைச்சின் கீழ் இயங்கும்"சிங்கள நாடக சபை" 1992 ம் ஆண்டு தயாரிக்கப்பட்ட நாடகங்களில் சிறந்த நாடகத்தை உருவாக்கியவர் என்ற வகையில் சிங்கள நாடகக் கலைஞர் சுகத பால டி சில்வாவுக்கு விருது ஒன்றை வழங்கியது. அவ் விருது அரசினால் வழங்கப்பட்ட விருந்தாகையால் தான் அதனைப் பகிஸ்கரிப்பதாக மேற்படி நாடக சபைக்கு சுகதபால டி சில்வா கடிதமூலம் அறிவித்துள்ளார்.



இது தொர்பாக அவர் அனுப்பிய கடிதத்தில் பின் வருமாறு குறிப்பிட்டுருந்தார்.

இவ் விருது அரசினால் வழங்கப்பட்ட விருது. இவ் அரசு இதுவரையும் கலைஞர்களை எவ்வாறு நடாத்தி வந்தது என்பது மக்களுக்குத் தெரியும். றிச்சாட்டி சொய்சாவை அது கொலை செய்தது. றிச்சாட்டி சொய்சா ஒருபத்திரிகையாளன் மட்டுமல்ல அவன் ஒரு கலைஞனும் கூட அவன் ஒரு மேடைக் கலைஞன் சினிமா, தொலைக்காட்சி நடிகன், தயாரிப்பாளன் அவனால் எழுதப்பட்ட மேகவுத? , மெனவதகரன்னே? (இது யார்?, என்ன செய்கிறார்கள்) நாடகங்கள் மேடையேற்ற முனைந்ததற்காகவே மேடையேற்றுவதற்கு முதல் நாள் கொல்லப்பட்டான்.

றிச்சாட்டி சொய்சாவின் கொலை கடந்த கால துரதிஸ்ட நிகழ்வு என நீங்கள் வாதிடலாம். இன்று கூட அரசு


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

*திருந்திவிட்டதா? அப்படியாயின் றிச்சாட்டி சொய்சாவின் நினைவு தினத்தில் பொலிசாரின் அட்டூழியம் எதைக் காட்டுகிறது. அரசின் உண்மை நிலை இதுதான். அதனால் விருதை பஸ்கரிப்பதாக நான் முடிவு செய்துள்ளேன்.*

*முண்டியடித்துக் கொண்டு இலங்கையரசின் சாகித்திய விருதைப் பெற்றுக் கொள்ளத் துடிக்கும் தமிழ்க் கலைஞர்களுக்கு இக் கடிதம் சமர்ப்பணம்.*

சாதி இனப் பேதங்களைச்
சொல்ல வேட்பாளர்ச்
சதி காரர் வருகிறாரே
மெள்ள – சம
நீதி பற்றி யாரிடம் நான்
சொல்ல? – அதை
வெல்ல!

ஓட்டுக் கேட்டு உத்தமர் போல்
வருவார் – எம்மை
ரோட்டி னிலும் கைகூப்பித்
தொழுவார் – பின்பு
வீட்டில் வந்தும் காலடி
விழுவார் – கேட்டு
அழுவார்!

நள்ளிரவில் வீடு வீடாய்
வருவார் – காடையர்
நம்கையில் காசும் மதுவும்
தருவார் – உடன்
கள்ள ஓட்டும் ஆளமர்த்தி
இடுவார் – வென்றும்
விடுவார்!

போட்டி யிட்டுத் தேர்தலிலே
வெல்லப் – பல
பொய் பித்த லாட்டங்களே
அல்லோ! – பின்னர்
ஓட்டுப் போட்டோர் காணச்
செல்ல – மறப்பார்
அல்லோ?

ஊசிபோல ஓட்டுக் கேட்க
வந்தோர் – வென்றே
உப்பி விட்டார்! உடல் பெருத்துத்
தொந்தி – நாமோ
ஊசி போலக் காதறுந்தே
சந்தி – நடுச்
சந்தி!

தேர் தலேதான் முடிந்து விட்ட
பின்னே – வீடு
தெரு வீதி பற்றி எரியு
தண்ணே! – வீழ்ந்தே
யார் யாரின் தலை உருள
மண்ணில் – ரத்தந்
தன்னில்?

கட்சி மாறும் பச்சோந் தியை
நம்பி – இனியும்
கண் மூடி ஓட்டுப் போட்டால்
தம்பி – நாம்
வந்து சேரும் இடமோ முச்
சந்தி – நன்கு
சிந்தி!

ஆளை ஏய்க்க ஜனநா யகந்
தானோ? – இங்கே
யாவ ருக்கும் சம உரிமை
காணோம் – சமவுரிமை
அடை வதற்குப் புது முயற்சி
வேணும் – விடிவைக்
காணும் – இன்றேல்
வீணாம்!

*– கண்டி எம். ராமச்சந்திரன்*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## நினைவுகளினூடே ஒரு நீண்ட பயணம்.......

கடந்த ஜனவரி 15ம் திகதி ஜேர்மனின் சன நெரிசல் நிறைந்த அந்த வீதிகளை ஊடறுத்துச சென்று கொண்டிருந்தது நீண்ட ஊர்வலம் ஒன்று. சுமார் எண்பதினாயிரத்துக்கும் அதிகமான மக்கள் கலந்து கொண்டிருப்பார்கள். ஜனவரி மாதத்திற்கேயுரிய கடும் குளிர் அவர்களின் முகத்தில் அறைந்து கொண்டிருந்தது. ஆனாலும் அவர்களின் முகங்களில் ஒருவித உறுதி தெரிந்தது. ஊர்வலம் நகர்ந்து கொண்டிருந்தது. அவர்கள் அடக்குமுறைகளுக்கு எதிராகவும், வெளிநாட்டவர் மற்றும் அகதிகளுக்கு ஆதரவாகவும் சுலோகங்களை எழுப்பியும் அட்டைகளைத் தாங்கியவண்ணமும் சென்று கொண்டிருந்தனர். ஊர்வலம் என்றாலே இவ்வாறான அட்டைகளும், சுலோகங்களும் இருப்பது சகஜம் தான். ஆனால் இம்முறை ஒரு வித்தியாசம். ஆம், அவர்களின் கைகளில் பூச்செண்டுகளும் இருந்தன. ஊர்வலம் இறுதியாக ஞாபகார்த்த தூபிகள் அமைக்கப்பட்டிருந்த ஒரு இடத்தைச் சென்றடைந்தது. ஒவ்வொருவரும் நினைவுக்கற்களின் அடியில் மலர்க் கொத்துக்களை வைத்துச் சென்றனர். இந்த வைபவத்தில் ஜேர்மனியிலுள்ள இடதுசாரிகளும் முற்போக்குப் பிரிவினரும் பரவலாகக் கலந்து கொண்டனர். எண்பதாயிரத்துக்கும் அதிகமானவர்கள் கலந்து கொண்டதால் ஜேர்மன் தொலைக்காட்சியும் இதை காட்டி தொலைக்க வேண்டியிருந்தது.

அவர்கள் தங்கள் தலைவர்களான ரோஸா லக்சம்பேர்க், லீப்னெக்ட் போன்றவர்களை ஆத்மார்த்தமாக நினைவுகூர்ந்தனர். இந்த மனிதர்கள் இறந்து 73 ஆண்டுகள் கடந்தபின்பும் ஏன் நினைவுகூரப்படுகிறார்கள்? ஆம், அவர்கள் தலைசிறந்த பாட்டாளி வர்க்கத் தலைவர்களாகவும், சர்வதேசிகளாகவும் இருந்து சகல அடக்கு முறைகளுக்கும், தேசிய வெறிக்கும் நிறவெறிக்கும் எதிராக போராடினார்கள். அன்றைய நாட்களில் ஜேர்மனியில் இருந்த முற்போக்குவாதிகள் பலர் சந்தப்பவாதிகளாகவும் தேசிய வெறியர்களாகவும் சீரழிந்த போது இவர்கள் அவர்களையும் எதிர்த்துப் போராடி நேர்மையான மனிதர்களாக உயர்ந்து நின்றார்கள். உழைக்கும் மக்களின் விடிவுக்காகப் போராடி அதற்காகவே உயிர்துறந்தார்கள். அவர்கள் இன்று நினைவு கூரப்படுவது தனிமனிதர்கள் என்பதற்காக மாத்திரமல்ல, அதற்கும் அப்பால் சகல அடக்கு முறைக்கும் அடிமைத்தனங்களுக்கும் எதிரான குறியீடாக அவர்கள் இன்றும் திகழ்வதற்காகவும்தான்.

யார் இந்த ரோசா லக்சம்பேர்க்!

ரோஸா லக்சம்பேர்க் 1871ம் ஆண்டு மார்ச் 5ம் திகதி ஸமோசி என்ற சிறிய போலந்து நகரத்தில் பிறந்தவர். அப்போது இப் பகுதி ரஷ்யப் பேரரசின் கீழ் இருந்தது. ஆரவாரமற்ற அமைதியான நடுத்தர குடும்பத்தைச் சேர்ந்த யூதப் பெற்றோர்களுக்கு மகளாகப் பிறந்தவர். அவர் போலந்துக்காரராகவும் யூத மதத்தவராகவும் இருந்ததால் படிப்பில் இருமடங்கு சிரமப்பட்டார். அவர் படித்துக் கொண்டிருந்த காலத்தில் போலந்துக்கான ரஷ்யமயமாக்கல் முழுமூச்சுடன் செயல்பட்டது. பாடசாலைகளில் ரஷ்ய மொழி பயன்படுத்தப்பட்டது. மாணவர்கள் போலந்து மொழியில் பேசுவது கூட தடைசெய்யப்பட்டது. இத்துடன் பலவிதமான சட்டங்கள் யூதர்கள் மீது விதிக்கப்பட்டன. ரோஸா வெளிப்படையாகவே கலகக்கார மாணவியாக விளங்கினார்.

ரோஸா உயர்நிலைப் பள்ளி மாணவியாக இருந்தபோதே அரசியல் நடவடிக்கையில் ஈடுபட்டார். தொழிலாளக் கட்சியின் கடைசிக் காலத்தில் அதனுடன் அவருக்கு தொடர்பேற்பட்டது. போலந்தில் சோசலிசக் கட்சியை அமைப்பதற்கான முதல் முயற்சியாக இக் கட்சி இருந்தது. அவருடைய அரசியல் நடவடிக்கைகள் பொலிசின் கவனத்தைக் கவர்ந்ததால் அவர் தன்னுடைய 19 வயதில் நாட்டை விட்டு வெளியேறினார். பல்கலைகழகத்தில் படிப்பதற்காகவும் அங்கு ரஷ்யா மற்றும் போலந்திலிருந்து நாடு கடத்தப்பட்டவர்களால் அமைக்கப்பட்டிருந்த காலனியில் சேர்வதற்காகவும் அவர் சுவிஸில் உள்ள சூரிச் நகருக்குப் போக முடிவு செய்தார். அவ்வாறு நாடு கடத்தப்பட்டோருள் ரஸ்ய மாக்சிசத்தின் தந்தை என சரியாகவே அழைக்கப்பட்ட பிளக்னோவும் இருந்தார். அவர் அங்கு ஐந்தாண்டுகள் தங்கியிருந்தார். போலந்தில் தொழில் வளர்ச்சி பற்றிய ஆராய்ச்சிக்காக டாக்டர் பட்டத்தைப் பெற்றார்.

சூரிச்சில் ரோஸா, லியோ ஜோசிக்காஸ் என்னும் போலந்துக் காரரைச் சந்தித்தார். அவர் ரோஸாவுக்கு சில ஆண்டுகள் மூத்த மாணவர். ரோஸாவின் சொந்த வாழ்க்கையில் பல ஆண்டுகள் ஆதிக்கம் செலுத்தியவரும், ரோஸாவின் பிற்கால வாழ்க்கை முழுவதிலும் அரசியல் ரீதியாக மிகுந்த செல்வாக்குச் செலுத்தியவரும் இவரே. சூரிச்சில் இருந்தபோது இவ்விருவரும் மற்றவர்களுடன் இணைந்து போலந்துக் குடியரசின் சமூக ஜனநாயகம் (Social Democracy of the Kingdom of

http :\\ www. thamizham. net



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ராஸா லக்சம்பேர்க்கின் பெரும் பகுதி ஜேர்மனியில் செலவிடப்பட்டது என்றாலும் அவரது அந்திம காலம் வரையிலும் ஞனுமீ யே அவரது முக்கிய அக்கறையாய் இருந்தது.

1898 இல் லக்சம்பேர்க் ஜேர்மனிக்கு போகத் தீர்மானித்தார். அப்போது ஜேர்மனி, வெகுஜன சமூக ஜனநாயகக் கட்சியுடன் (SPD) சோசலிச உலகத்தின் மையமாகவும் மாக்சிசத்தின் நிச்சயமான புதுப் பிறப்பிடமாகவும் விளங்கியது. மேலும் சோசலிச அகிலத்தில் பலம் பொருந்தியதாகவும் காணப்பட்டது. எல்லாவற்றுக்கும் மேலாக ஜேர்மன் ஜ.கட்சி கோட்பாட்டுத் துறையில் புகழ் பெற்றிருந்தது. அறிவுத்திறன் மிக்க பலர் அக் கட்சியிலிருந்தனர். அவர்களுள் ஒளிமிக்க நட்சத்திரமாக மாக்சிசத்தின் போப் என்று அறியப்பட்ட கார்ல் காவுட்ஸ்கி (1854- 1938) இருந்தார்.

ஜேர்மனியில் லக்சம்பேர்க் வருகையும் திரிபுவாதத்தின் மீதான விவாதத்தின் தொடக்கமும் இணைந்திருந்தன. ஞனு யின் புரட்சிகர மாக்சிசம் என்னும் சரியான திட்டத்தை மாற்றி அதனை மிதவாதப் போக்குடைய சீர்திருத்தக் கட்சியாக மாற்ற எட்வர்ட் பேர்ன்ஸ்டீன் மேற்கொண்ட முயற்சியே இத் திரிபு வாதமாகும். (இவர் ஏங்கெல்ஸ் தன் வாழ்நாளில் வெளியிட இயலாது விட்டுச் சென்றவற்றைப் பதிப்பிக்கும் உரிமை பெற்றிருந்தார்) லக்சம்பேர்க் இந்த விவாதத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். அவருடை சமூக சீர்திருத்தம் அல்லது புரட்சி என்னும் நூலில் மிகச் சிறந்த முறையில் பேர்ன்ஸ்டீனுக்குப் பதிலளித்தார். பேர்ன்ஸ்டீனின் கருத்தைச் சுற்றி எழுந்த விவாதத்தை தொகுத்துக் கூறுகிறார். முடிவான நோக்கம் என்பது அது எதுவாக இருந்த போதிலும் -ஒன்றுமில்லை. இயக்கம் என்பதே எல்லாமாக இருக்கிறது. லக்சம்பேர்க் நேரடியாக விசயத்தின் முக்கிய பகுதிக்கு வந்து விடுகிறார்.

சோசலிசத்தை இறுதி லட்சியமாகக் கொண்டிருப்பதே சமூக ஜனநாயக இயக்கத்தை முதலாளித்துவ ஜனநாயகம், முதலாளித்துவ முற்போக்குவாதம் ஆகியவற்றிலிருந்து வேறுபடுத்திக் காட்டுகிறது. இதுவே தொழிலாளர் இயக்க முயற்சியை முதலாளித்துவ அமைப்பு முறையை சீர்செய்யும் வீண் முயற்சியாக்கி விடாமல் அதை முதலாளித்துவ அமைப்பு முறைக்கு எதிரான வர்க்கப் போராட்டமாக முதலாளித்துவ அமைப்பு முறைறையை ஒழிப்பதாக மாற்றுகிறது. பென்ஸ்டீன் முன்வைக்கும் சீர்திருத்தமா? புரட்சியா? என்ற கேள்விக் கெதிராய் -சமூக ஜனநாயகக் கட்சி வாழ்வா? சாவா? என்ற கேள்வியை முன்வைக்கிறது. பேர்ன்ஸ்டீன் அவரது ஆதரவாளர்களிடம் இந்தக் கொள்கை மாறுபாட்டிலிருந்த எந்தப் போராட்ட முறையைக் கையாள்வது, எந்தவகையான போர்த் தந்திரங்களை மேற்கொள்வது என்பதல்ல நம்முன் உள்ள கேள்வி. சமூக ஜனநாயக இயக்கம் உயிர்த்திருப்பது அல்லது அழிவது என்பதே நம்முன் உள்ள பிரச்சனை என்பதை கட்சியிலுள்ள ஒவ்வொருவரும் தெளிவாகப் புரிந்த கொண்டாக வேண்டும். (ரோசா லக்சம்பேர்க் எழுதிய சமூக சீர்திருத்தமா? புரட்சியா? நூல்பக்கம்-7)

இந்த விவாதத்தில் தான் லக்சம்பேர்க்குக்கு கட்சியில் பெரும் புகழ் கிட்டியது. ஒரு மாக்சியக் கொள்கையாளர் என்ற வகையில் தேசிய சர்வதேசிய அளவில் புகழ் பெற்றார்.

1911ம் ஆண்டுக்குப் பிறகு வந்த ஆண்டுகள் லக்சம்பேர்க்குக்கு மிகவும் பயனுள்ளவையாக இருந்தன. ஞனு பிரஷ்யாவின் துயரப் பிரச்சினையின் மீதான போராட்டத்தைத் தொடங்கியது. அதுவரையிலும், ப்ருஷ்ய டயட் (Prussian Diet) தேர்தலில் மிகப் பெருவாரியான தொழிலாளர்கள் ஓட்டுப் போடுவது கடுமையாகத் தடை செய்யப்பட்டிருந்தது. இத் தடைக்கு எதிரான போராட்டத்தில் ரோசா முழுமையாகச் செயல்பட்டார். இதே ஆண்டுகளில் ரோசா காவுட்ஸ்கியுடனிருந்த நெருக்கமான அரசியல் ரீதியான தொடர்பை முறித்துக் கொண்டார். அவர் (காவுட்ஸ்கி) சந்தர்ப்பவாதப் பாணியில் செல்வதை தெளிவாகக் கண்டார். இந்த விஷயத்தைப் புரிந்து கொள்வதில், ரோசா சர்வதேச மாக்சிய இயக்கத்தின் சமகாலத்தவர்களைவிட முந்தி இருந்தார். குறிப்பாக லெனின். 1914 இல் உலகப் போர் வெடிக்கும் வரை லெனினுக்கு காவுட்ஸ்கியின் (அதன் விளைவாய் SPD தலைமையின்) உண்மையான தன்மை தெரிவிக்கப்படவில்லை. மேலும் இந்த ஆண்டுகளில்தான் -1913இல்- ரோசா தமது மூலதனக் குவியல் -நூலை எழுதினார்.

உலகப் போர் வெடித்தவுடன் தொடர்ந்து சோசலிஸ்ட் அகிலமும் தகர்ந்தது. லக்சம்பர்க் உடனே அதற்கு எதிராக சமரசமற்ற நிலையை எடுத்தார். இந்த எதிர்ப்பினால் அவர் போர்க்காலம் முழுவதையும் சிறையிலே கழிக்க வேண்டியவரானார். சிறையிலே, 1915 இல் 'Accumulation of Capital Anti-Critique" புத்தகத்தை எழுதினார். மேலும் அவர், மிகவும் புகழ்ந்து வரவேற்கப்பட்ட ஜூனியஸ் பிரசுரமான (Junius Pamphlet) ஜேர்மன் சமூக ஜனநாயகத்தில் நெருக்கடி (The Crisis in the German Social Democracy) என்ற நூலையும் எழுதினார். இது போர் எதிர்ப்பு இடதுசாரிகளை அணிதிரள அழைப்பு விடுத்தது. பிரான்ஸ் மெகாங்கார்ல் லீப்னெக்ட், லியோ ஜோசிக்சஸ் ஆகியோர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஸ்பார்டகஸ்பண்ட் (Spartakus Bund) என்ற அமைப்பை உருவாக்குவதில் பெரும்பங்கு வகுத்தது.

1918 நவம்பர் புரட்சியில் கெய்சர் தூக்கியெறியப்பட்டவுடன் லக்சம்பர்க் விடுதலை செய்யப்பட்டார். அவர் உடனே புரட்சிகர இடதுசாரிகளில் செல்வாக்கை உறுதிப்படுத்தவும், விரிவுபடுத்தவும் முனைந்தார். 1918 டிசம்பரில் ஸ்பார்ட்டகஸ் பண்ட் மற்ற இடதுசாரி குழுக்களுடன் இணைந்து ஒரு மாநாடு நடத்தியது. ஜேர்மன் கம்யூன்ஸ்ட் கட்சியை (KPD) அது தோற்றுவித்தது. லக்சம்பர்க் அந்த மாநாட்டில் சொற்பொழிவு நிகழ்த்தினார். புதிய கட்சியின் திட்டத்தையும் அறிமுகப்படுத்தினார். போல்ஷ்விக் புரட்சியை ஆர்வமுடன் ஆதரிப்பவரானாலும் விமர்சனமற்ற முறையில் அல்ல என்பது அவருடைய எழுத்திலிருந்து தெளிவாகியது.

1919 ஜனவரி ஆரம்பத்தில் பேர்லின் போலீஸ் தலைமை அதிகாரி எமையில் எய்கோன் என்பவரை பதவியிலிருந்து நீக்கும் முயற்சிக்கு எதிராக தங்கள் எதிர்ப்பைக் காட்டும் விதமாக பேர்லின் தொழிலாளர்கள் பல ஆயுதம் தாங்கிய ஆர்ப்பாட்டங்களைத் தொடங்கினர். எய்கோன் புகழ்மிக்க இடதுசாரி சமூக ஜனநாயக வாதியாவார். குடியரசுவாதிகளின் சமூக – ஜனநாயக அரசின் மறைமுக ஆதரவுடன், இராணுவம், சட்டம் ஒழுங்கை நிலைநாட்டும் முயற்சிக்கு அவர் இடையூறாய் இருந்தார். ஸ்பார்ட்கஸ் பண்டின் தலைவர்கள் இந்த ஆர்ப்பாட்டத்திற்கு எதிரான கருத்தைக் கொண்டிருந்த போதிலும் தொழிலாளர்களின் ஆர்ப்பாட்டத்தை கைவிடச் செய்ய முடியாது போனபோது அவர்கள் தாங்களே ஆர்ப்பாட்டங்களில் முன்னின்றனர். இந்த ஆர்ப்பாட்ட காலம் ஸ்பார்டகஸ் வாரம் எனப் பெயர் பெற்றது. இறுதியில் இந்த ஆர்ப்பாட்டம் இராணுவத்தால் மிருகத்தனமாக குருதிப் பெருக்கெடுக்க அடக்கப்பட்டது. புரட்சிகர சோசலிச வாதிகள் மீது கடுமையான வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டது.

1919 ஜனவரி 15ம் நாள் லக்ஸம்பர்க்கும், லீப்னெக்ட்டும் (புதிய குடியரசுவாதிகளின் சமூக – ஜனநாயக அரசின் கட்டுப்பாட்டின் கீழுள்ள) இராணுவ அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுக் கொடுமையான முறையில் கொலை செய்யப்பட்டனர். லக்ஸ்ம்பர்க துப்பாக்கி கைப்பிடியால் அடித்து நொறுக்கிச் சாகடிக்கப்பட்டார். பிறகு அவரது உடல் ஒரு கால்வாயில் தூக்கியெறியப்பட்டு சில வாரங்கள் அங்கேயே கிடந்தது, லீப்னெக்ட், தலையின் பின்பக்கம் சுடப்பட்டுக் கொல்லப்பட்டார். அவருடைய உடல் சவக்கிடங்கிற்கு எடுத்துச் செல்லப்பட்டது. அங்கு சுடப்பட்டுக்கிடந்த அடையாளம் தெரியாத நபர் என்று உடலை வைத்தனர். லக்சம்பர்க் உயிரோடிருந்திருந்தால் ஃீனு கட்சியின் பிற்கால வளர்ச்சி வேறு விதமாக இருக்கக்கூடும் என்பது சாத்தியமே. அவ்வாறிருந்திருப்பின் அது ஐரோப்பிய வரலாற்றின் போக்கையே மாற்றியிருக்கவும் கூடும்.

இறுதிவரையில் லக்ஸம்பர்க் வெகுஜனங்களால் ஒரு சோசலிசப் புரட்சியைச் செய்ய முடியும், அவ்வாறே செய்வார்கள் என்ற நம்பிக்கையை மாற்றிக் கொள்ளவே இல்லை. அவர் தான் கொல்லப் படுவதற்கு முன்தினம் இவ்வாறு எழுதினார்.

வெகுஜனங்களே தீர்மானிக்கும் ஆற்றலுள்ள சக்தி. புரட்சியின் இறுதி வெற்றிக்குக் கட்டப்படும் அடித்தளம் அவர்களே. வெகுஜனங்கள் சோதனைகளை தாங்கினர். இந்தத் தோல்வி யிலிருந்து அவர்கள் உலக சோசலிசத்தின் சக்தியும், பெருமையும் அடங்கிய வரலாற்று ரீதியான தோல்விகளின் தொடர்ச் சங்கிலியில் மேலும் ஒரு கண்ணியைச் செய்தனர். அதனாலேயே இந்தத் தோல்வியிலிருந்து வெற்றி பிறக்கும். நாளை மீண்டும் புரட்சி எழும். ஒளிரும் ஆயுதங்களுடன் அவள் புரட்சி முரசொலித்து உங்களை அச்சுறுத்துவாள். நான் இருந்தேன், நான்இருக்கிறேன், இருப்பேன், என்று ரோசா லக்ஸம்பர்க்கின் சுதந்திரமும் புரட்சியும் என்ற நூல் பற்றிய கட்டுரையில் கு.டு.கார்டால் மேற்கோள் காட்டப்பட்டது. (காண்க–லீயோபாட் லேபெட்ஸ் தொகுத்தளித்த மார்க்சிய சிந்தனை வரலாறு பற்றிய கட்டுரைகள் என்ற நூல்.) இதுவே அவரது சொந்தக் கல்லறை வாசகமாக இருந்திருக்கலாம். ஐயத்திற்கிடமின்றி லக்ஸம்பர்க் மாக்சியப் புரட்சிகர இயக்கம் உருவாக்கிய மிகச்சிறந்த பெண்மணியாவார். மேலும் அதே அளவில், கொள்கையாளர் என்ற வகையிலும், நடைமுறைத் தலைவர் என்ற வகையிலும் மாக்சியம் உருவாக்கிய மிகச் சிறந்த நபர்களுள் அவரும் ஒருவர் எனச் சொல்லலாம். அவரது செல்வாக்கு, ஜேர்மனி, போலந்து, ரஷ்யா ஆகிய நாடுகளில் உணரப்பட்டது. இன்னும் பல இளம் மார்க்சிய வாதிகளின் மீது அவர் ஆழமான பாதிப்பை ஏற்படுத்துகிறார். அவரைப் பற்றி லெனின் கூறுவது : ரோஸாலக்சம்பர்க் ......... நமக்காக இருந்தார், இருக்கிறார் ஒரு கழுகைப்போல ........ கூர்மையான நோக்குடன்)

ஆம்! அந்த புரட்சிகர போராளியின் கல்லறையில் தான் கடந்த ஜனவரி பதினைந்தில் அவர்கள் மலர்களை வைத்தனர். ரோசாவின் லீப்க்னெட்டின் லட்சியப் பயணங்கள் நீண்டதும் கடினமானதும், ஆனாலும் அவர்கள் தொடர்வர்.

தொகுப்பு :- ராகவன்

நன்றி .–பரிமாணம்

லெனின் நூல்திரட்டு.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சுவிற்சர்லாந்து

# 18 வது இலக்கியச் சந்திப்பு



பத்திரிகையாளர் – ஆக்கதாரர் – வாசகர்கள் ஆகியோர்களுக்கிடையிலான ஒரு சந்திப்பு மையமாகவே இலக்கிய சந்திப்பு ஆரம்பமாகியது. பின் பிரான்ஸ், நெதர்லாந்து, சுவிற்சர்லாந்து என்று ஜேர்மனுக்கு வெளியில் உள்ள பத்திரிகையாளர்–வாசகர்களையும் உள்வாங்கிக் கொண்டது. அப்போது இலக்கிய சந்திப்பு பற்றிய எமது பார்வை வித்தியாசமாகவே காணப்பட்டது. குறிப்பிட்ட ஒருவித வேலைத்திட்டமும் அற்ற நிலையில் இச்சந்திப்பு பத்திரிகையாளர், வாசகர்களுக்கிடையிலான ஒருவித பொழுதுபோக்கு மையமாகவே எம்மால் கணிக்கப்பட்டது.

"ஆனால் பேர்லின் நெதர்லாந்து ஆகிய இடங்களில் நிகழ்ந்த சந்திப்புக்கள் எமது பார்வையில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியது. அதாவது இலக்கிய சந்திப்பின் தரமும், வலிமையும் அதைப் பொறுப்பேற்கும் குழுவில்தான் தங்கியுள்ளது என்ற முடிவிற்கு எம்மை இழுத்துச் சென்றது. இவ்வடிப்படையில் இன்றைய எமது எண்ணமும் தீர்மானமும் வருடத்தில் இரண்டு சந்திப்புக்கள் நிகழ்ந்தாலும் பரவாயில்லை. இலக்கிய சந்திப்பு தரத்துடன் திகழ வேண்டும், என்பதுவே! அதற்கான நிதியுதவியை சகல நாட்டவரும் பொறுப்பேற்றாலும் பரவாயில்லை. அத்துடன் ஐரோப்பா வாழ் அறிவு ஜீவிகளின் பங்களிப்பு போதியதாகவில்லை. இவர்கள் இலக்கிய சந்திப்புடன் தமது ஈடுபாட்டை வலுப்படுத்திக் கொள்வது அவசியமாகும்.

மேலும் இலக்கிய சந்திப்பின் இன்றைய நிலை சந்திப்பு மையம் என்ற கட்டத்தை தாண்டி, பத்திரிகையாளர்கள்– ஆக்கதாரர்கள்– வாசகர்கள் இலக்கிய கர்த்தாக்கள் ஆய்வாளர்கள் ஆகிய பலரது தொடர்பைப்பேணும் ஒரு பாலமாகவும், ஆய்வுக்கும் விவாதத்திற்கும் உரிய பல விசயங்களை பலரும் அறிந்து கொள்வதற்கும், புடம் போட்டுக் கொள்வதற்குமான ஒரு களமாகவும், சில நூல்களை வெளியிட்டும், அறிமுகம் செய்தும், ஒரு வெளியீட்டு நிலையமாகவும் செயற்பட்டு ஓர் இலக்கிய மாநாடு போன்று திகழ்வது மிகவும் மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். என்று மனிதம் குழுவினர் சார்பில் முன்வைக்கப்பட்ட தொடக்கவுரையுடன், 18 வது இலக்கிய சந்திப்பு ஆரம்பமானது. இச்சந்திப்பு 1994 ஏப்ரல் 2,3 ஆகிய திகதிகளில் பேர்ன் நகரில் இடம்பெற்றது. நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் தொன்மை தமிழ் இலக்கியத்தில் அரசியல் என்ற தலைப்பில் அழகலிங்கத்தின் உரை ஆரம்பமானது. தேவாரம், திருவாசகம், திருக்குறள், சிலப்பதிகாரம், கம்பராமாயணம், பைபிள் வரை பார்வையாளர்களை இழுத்துச் சென்றது. அங்கு புதைந்து காணப்படும் அரசியல் குறிப்பாக பொதுவுடமை கருத்தினை வெளிக்கொணர்ந்த அவரது உரை சுமார் ஒன்றரை மணி நேரத்திற்கு மேல் சென்றது, தொடர்ந்த கலந்துரையாடலில் குறிப்பாக இத்தொன்மை இலக்கியங்களில்தான் ஆணாதிக்கத்திற்கும் பெண் அடக்குமுறைக்கும் சார்பான பல விடயங்கள் காணப்படுகின்றனவே, அவை பற்றி ஏன் குறிப்பிடவில்லை? என்று பெண்கள் சார்பில் எழுப்பப்பட்ட வினாக்கள் பல முதன்மையானவையாக காணப்பட்டன. இவ்வினாவிற்கான அவரது பதில், கார்லமாக்சிற்கு முன்பு கேகல் வரை எழுதப்பட்ட இலக்கியங்கள், தத்துவங்கள் அனைத்தும் தாம் கூறி வந்த கருத்துக்களை அதே நூலில் மறுதலிக்கும் தன்மை கொண்ட படைப்புக்களாகவே இருந்தன. அந்த வகையில் ஒரே நூலில் ஒரு புறத்தில் பொதுவுடமை கருத்துக்கள் புதைந்து இருக்கும் மறு புறத்தில் கொடியவனாக இருந்தாலும் அரசன் போற்றப்படுவான். இத்தகைய முரண்பாடு உடைய போக்கு தொன்மை இலக்கியங்களில் காணப்படும் பொதுவான அம்சமாகும்" என்று அமைந்தது.

மதிய இடைவேளைக்குப் பின்பு புலம் பெயர்ந்த தமிழ் சிறார்களின் வாழ்வியலும் தமிழ் மொழி கல்வியும் என்ற தலைப்பில் பெற்றோர்– ஆசிரியர்களுக்கு வேண்டிய அவசியமான சில கருத்துக்களை ராஜ்குமார், யோகராஜா ஆகியோர் தொகுத்தளித்தனர். இது இலக்கிய சந்திப்புக்கு அவசியமற்றது என்ற கருத்தும் இடையிடையே சலசலத்துக் கொண்டிருந்தது.

தொடர்ந்து நசமைய ஏழெ பரவெநெ என்ற சுவிற்சர்லாந்து பெண் எழுத்தாளர் பெண்களின் கதை என்ற தமது புத்தகத்தை அறிமுகம் செய்து அதிலிருந்து கத்தரினாவும் அவளது ஓய்வு நேரமும் என்ற கதையை வாசித்துக் காட்டினார். (இவரது பேச்சுக்களை சுசீந்திரன் மொழி பெயர்ப்பு செய்தார்.) இந்நாட்டில் வசிக்கும் ஓர் வெளிநாட்டு பெண்ணின் வாழ் நிலையை இக்கதை சித்தரித்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இருந்தது. அத்துடன் சுவிற்சர்லாந்தில் உள்ள தற்கால எழுத்தாளர்கள் சிலரை அறிமுகப்படுத்தி இருந்தார்.

பாரதி கலைக்குழுவினரின் காலம் குறியீட்டு நாடகத்தை அடுத்து சேரனின் கவிதை வாசிப்பு இடம் பெற்றது. சேரனின் கவிதைகள் பல கவிதா நிகழ்வுகளில் வேற்றுக் குரல்களில் உயிர் பெற்றிருந்த போதும் சேரன் வாசிக்கும் போது அதன் ஜீவத்துடிப்பையும் கண்டு கொள்ளமுடிந்தது.



மறுநாள் (3.4.94) நிகழ்வுகள் பத்திரிகைகள்- கலந்துரையாடலுடன் ஆரம்பமாகியது. 10.45 மணியளவில் இந்திராபார்த்தசாரதியின் சிறப்புரைக்கு இடமளித்தது. தொன்மை இலக்கியங்கள் பற்றி தொட்டுச் சென்ற அவர் எதிர்ப்பிலக்கியம் பற்றிய கருத்தை மையப்படுத்தியிருந்தார். சமூகத்தில் ஆதிக்கம் செலுத்த வேண்டுமென நினைக்கிறவன் எவனாயிருந்தாலும் அவன் பார்ப்பனியனாக மாறி விடுவது பற்றிய கருத்தையும் முன்வைத்தார். பார்ப்பனரால் கொலை செய்யப்பட்ட நந்தன், இறைவனுடன் சோதியாய்க் கலந்தான் என்று மாற்றப்பட்டமையை நகைச்சுவையாகவும் சீரியசாகவும் எடுத்துரைத்தார். எதிர்ப்பிலக்கியங்கள் எப்போதும் சிறுபான்மையாகவே இருந்துள்ளன என்றும் அது என்றும் தோன்றிக் கொண்டேயிருக்கும் என்றும் தெரிவித்தார். இவ்வகையில் இன்றைய சிறுபத்திரிகைகள் இவ் எதிர்ப்பிலக்கிய வகையை சார்ந்தனவே என்ற கருத்தையும் முன்வைத்தார். இவரது சிறப்புரையை தொடர்ந்து சில நிமிடங்கள் கலந்துரையாடல்கள் நிகழ்ந்தன.

மதிய போசனத்தை அடுத்து தேசியவாதம் தேசிய விடுதலைப் போராட்டம் கலை இலக்கியம் என்ற தலைப்பில் சேரன் சில கருத்துக்களை கூற முனைப்பட்டார். விவாதத்தற்குரியமுறையில் சில கருத்துக்களை முன்வைக்கிறேன் என்று கூறி ஆரம்பித்த போதும் அவரது உரை தொகுப்பாக அமையாததனால் கூறவந்த கருத்துக்கள் முழுமை பெறாது ஈழத்தில் ஜனநாயக மறுப்பு என்ற விவாதத்துடன் முடங்கிக் கொண்டது.

தொடர்ந்து சிவசேகரத்தின் தமிழில் தரிப்புக் குறிப்புக்கள் என்ற சிறுநூலும், சோலைக்கிளியின் ஆணிவேர் அறுந்த நாள் கவிதை தொகுதியும் அறிமுகம் செய்யப்பட்டதை அடுத்து பாரதி கலைக்குழுவினரின் போராடும் மானுடம் கவிதா நிகழ்வு பார்வையாளர்களுக்கு சிறப்பு விருந்தாக அமைந்திருந்தது.

மேலும் தொடக்கவுரையில் குறிப்பிட்டது போல் இலக்கிய சந்திப்பு வருடத்தில் இரண்டு நிகழ்ந்தாலும் அவை வலிமையுடன் தரமாக அமைய வேண்டும், ஐரோப்பா வாழ் ஈழத்து புத்திஜீவிகளும் இச்சந்திப்புடன் தம்மை ஈடுபடுத்திக் கொள்ள முன்வர வேண்டும். அடுத்த இலக்கிய சந்திப்பு லண்டனில் நடைபெறும் என தீர்மானிக்கப்பட்டது.

* * * * * * * * * *

## நூல் அறிமுகம் "அவ்வப்போது பறித்த அக்கரைப் பூக்கள்"

(மொழிபெயர்ப்புக் கவிதைகள்) தமிழில் : வ. கீதா
எஸ் .வி. ராஜதுரை

கவிதையின் வரிகளுக்கிடையே
வெடிகுண்டொன்றை வையுங்கள்.
வரிகளனைத்தும் சுக்குநூறாகச் சிதறட்டும்.
பின்னர்
மேலும் உண்மையானதொரு
கவிதையை எழுப்புங்கள்.
அதற்குத் தேவையான அனைத்தும் கிடைக்கும்
இடிபாடுகளிலிருந்தே

D.Dilip Kumar
25, Third Trust Cross Street
Mandaiveli,
Madrass - 600 028
S.INDIA



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இலையுதிர்காலமும் நானும்

இது
இலையுதிர்காலம்
முகில்
முகம் களைத்து
பூமியைக் கிழித்து
வானத்தை மறைத்து
உடலுறவு செய்தது

இயற்கை
ஒரு பயங்கரத்தைப் பிழிந்து கொண்டிருந்தது

மலைகள் யாவும்
காணாமல் போயிற்று
இந்த உலகத்தின்
கொசுப் புள்ளியாய்
என் தேசத்தைப் போல்

ஊரிலென்றால்
விளக்குமாறு கொண்டு
இந்த முகிலை
பனை உச்சிக்கு மேலே
விரட்டியடித்திருப்பேன்
என்ன செய்வது
இங்கு
ஒன்றுமே இயலாத
என்னை
முகிலும் மொய்க்கிறது

நேற்று முன்தினம்
பசுமையாய் கிரித்த
அந்த இலைகள்
நேற்று அந்தி சாய்வதற்குள்
முதுமைகொண்டு
வெடித்துச் சிதறி
மரணித்து
நிலத்துள் புதைந்து
மறைந்து போயிற்று

மரம் மட்டும்
மீண்டும்
என்னைப் போலவே

பசும் புற்களின்
ஒவ்வொரு அலகையும்
குளிர் காவுகொண்டது

இந்த இயற்கை
ஒரு
பயங்கரத்தைப் பிழிந்துகொண்டிருந்தது.

– ஆனந்தி

❄❄❄❄❄❄❄❄



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




பர்மாவில் SLORC (State Law Order Restoration Council) யுடன் தொழில் ரீதியல் கூட்டுச் சேர்ந்து இயங்கும் ஒரு சில பாரிய வெளிநாட்டுக் கம்பனிகளில் "பெப்சி கோலா" கம்பனியும் (Pepsico) ஒன்று. கொடூரம் நிறைந்த பர்மிய இராணுவக் கும்பலால் "அரச சட்டம் ஒழுங்கு மீள் உருவாக்க சபை" என்ற முத்திரையுடன் நடத்தப்படும் அமைப்பே SLORC. இந்தவகையான வெளிநாட்டு பொருளாதார ரீதியிலான ஆதரவுகள் ஏதுமின்றி இந்த அமைப்பு தப்பிப்பிழைக்க முடியாது. ஆயுதங்களை வாங்கிக் குவிக்க முடியாது. தனது சொந்த மக்களை அடக்கி ஒடுக்க இவை தேவைப்பட்டன, அந்தக் கும்பலுக்கு. தேசிய வரவுசெலவுத் திட்டத்தில் 50 வீதத்துக்கும் அதிகமானதை இராணுவமே விழுங்கிக் கொள்கிறது. 300,000 இலிருந்து 500,000 க்கு தனது எண்ணிக்கையை ஊதிப்பெருக்க வைத்துள்ளது வேறெதற்காகவுமல்ல, தனது சொந்த மக்களை நசுக்குவதற்குத்தான்.

1991 நவம்பரில் பர்மாவின் உள்நாட்டு தனியார் கம்பனியான Myanamar Golden Star Co பெப்சி கம்பனியுடன் சேர்ந்து இயங்கும் நிலையை எடுத்தது. Myanmar கம்பனி நாளொன்றுக்கு பத்து அவுன்ஸ் நிறையுள்ள 100,000க்கும் மேலான போத்தல்களை உற்பத்திசெய்து குவிக்கின்றது. பெப்சியின் முதலீடு (3 மில்லியன் டாலர்) ஒப்பீட்டளவில் சிறிதாக இருப்பினும் SLORC க்கான பிரச்சாரம் கணக்கிடப்படமுடியாத பெறுமதியை தொட்டு நிற்கிறது. "வர்த்தகம் புரிந்துணர்வை வளர்க்கிறது" என்று தத்துவம் பேசுகிறது, பெப்சி. SLORC யின் வாழ்விற்கு பெப்சி உயிராதாரமாகவே செயற்படுகிறது.

பர்மாவில் வெளிநாட்டு மூலதனங்களை முடிவுக்கு கொண்டு வருவதற்கான போராட்டங்கள் கடந்த இரு வருடங்களாக தொடர்ச்சியான முறையில் நடைபெற்று வருகின்றன. இதன் விளைவு ஒரு சில குறிப்பிடத்தக்க மாற்றங்களை கொண்டு வரத் தவறவில்லை.

1. 1992 நவம்பர் இல் பெற்றோ–கனடா (Petro - Canada) என்ற கம்பனி வெளியேற்றப்பட்டது.

2. 1992 ஒக்டோபரில் Shell And Unocal வெளியேற்றப்பட்டது.

3. 1992 இல் அவுஸ்திரேலியாவின் Broken Hill Petroleum வாபஸ் ஆகியது.

4. அண்மையில் Levi Strauss Co வாபஸ் வாங்கிக் கொண்டது.

இது தனது அறிக்கையில் "தற்போதைய நிலைமையில் இராணுவத்துக்கும் மனிதஉரிமைகள் மீதான அதன் அத்துமீறிய நடவடிக்கைகளுக்கும் நேரடியான ஆதரவை வழங்காமல் பர்மாவில் தொழிற்பட முடியாதநிலையே உள்ளது "என்று கூறியிருக்கிறது.

இந்த சம்பவங்கள் இரு முக்கிய நோக்கு நிலைகளை சாதித்துள்ளன.

1. வெளிநாட்டு முதலீட்டாளர்களின் இந்த நடவடிக்கை ஒன்றை வெளிச்சமிட்டுக் காட்டுகிறது. SLORC போன்ற (இராணுவ) ஆட்சியாளர்களுடன் தொழில் ரீதியில் கூட்டு வைத்துக் கொள்வது பர்மிய மக்களின் வாழ்வுக்கும் மனித உரிமைகளுக்கும் விழும் அடியே என்பதுதான் அது.

2. சர்வதேச அளவில் எழுந்த குரல்கள் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கும் வெகுஜனங்களுக்கும் இருந்த மயக்கத்தை துடைப்பதில் பங்காற்றின. அத்தோடு SLORC யின் அநீதிகளுக்கு எதிராக செயற்படும்படியும் வற்புறுத்தின.

மனித விழுமியங்களுக்கு எதிரான SLORC யின் குரூரமான நடவடிக்கைகள் சில :

✝1988 இல் பர்மாவின் ஜனநாயகத்துக்கான குரலாக அமைதியான முறையில் நடாத்தப்பட்ட பாரிய ஆர்ப்பாட்ட ஊர்வலத்தின் மீது "போர்" தொடுத்து 8000 க்கும் அதிகமானோரைக் கொன்றொழித்தது – SLORC.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

• 1990 இல் நடாத்தப்பட்ட தேர்தலில் SLORC எதிர்க்கட்சியான NLD (National Leagie For Democracy) யிடம் படுதோல்வி கண்டது. Aung san Suu Kyi இனால் வழி நடாத்தப்படும் NLD யானது 82 வீதமான இடங்களைப் பெற்று பாரிய வெற்றியை ஈட்டியது. ஆனால் SLORC எதிர்க்கட்சி தலைவர்களை சிறையில் அடைத்து விட்டு தனது ஆட்சியைத் தொடர்கிறது. தொடர்ந்தும் பர்மிய மக்கள் அடக்கு முறைக்குள் வாழ்கிறார்கள்.

• பர்மிய சிறையில் வாடும் ஆயிரக்கணக்கான அரசியல் கைதிகள் உடல் உள ரீதியில் சகலவிதமான சித்திரவதைகளுக்கும் ஆளாகின்றனர்.

• இராணுவ நடவடிக்கைகளுக்காக சிறுபான்மை இனக்குழுக்கள் வாழும் பிரதேசங்களில் உள்ள மக்கள் சொந்த நிலத்திலிருந்து விரட்டப்பட்டுள்ளனர்.

• பல ஆயிரக்கணக்கான பர்மிய மக்கள் இராணுவத்தினருக்கு சேவகம் செய்யும் அடிமைகளாக்கப்பட்டுள்ளனர். பலர் அடி உதைகளினால் இறந்து விடுகின்றனர்.

• தாய்லாந்து, பங்களாதேஷ், இந்தியா, சீனா ஆகிய நாடுகளுடன் அமைந்துள்ள பர்மிய எல்லைப் பிரதேசங்களில் 400,000 க்கும் அதிகமான மக்கள் அகதி வாழ்க்கை வாழ்கின்றனர். 1.5 மில்லியன் மக்கள் உள்நாட்டுக்குள்ளேயே இடம்பெயர்ந்து வாழும் பரிதாப நிலை தொடர்கிறது.

இந்த அநீதிகளின் சிற்பிகளான SLORC க்கு பொருளாதார ரீதியல் தீனி போடும் Pepsico கம்பனியை பர்மாவிலிருந்து துரத்துவதற்கு சர்வதேச அளவில் குரலெழுப்பப்பட வேண்டும்.

நன்றி : (Christian Worker)
1993 Oct
தமிழில் : தீபா

# நினைவும் வாழ்வும்

அழகாக ஓடும் ஒரு
ஓடை
அதற்குப் பக்கத்தில்
என் குடியிருப்பு
மனது மாத்திரம்
துடுப்பிழந்த படகாட்டம்

பதிக்கக் கூடாத
ஓர் இடத்தில் என்
கால்களும்

வாழ்வு மறுக்கப்பட்ட
ஓர் தேசத்தில் என்
மனதுமாக

வாழ்வு எங்கோ
தொலைக்கப்பட்டு
விட்டது

ஒரு மூலையில் எருக்கலையும்
இன்னோர் மூலையில்
ஆமணக்குமாய்
இருந்த
புல்வெளி நிரம்பிய
அழகான வளவு கூட
இப்போ
என் நினைவில்
பூகம்பமாக

நினைவு
அதுகூட இப்போ
கொ ரங்களையே
காட்டி நிற்கிறது

மலத்தை காலால்
மிதித்து
கல்லிலும் புல்லிலுமாக
துடைத்து விட்டு
நெருஞ்சிமுள்ளும்
இக்கிரி முள்ளும்
காலில் குத்த
ஓடித்திரிந்து
பட்டம் விட்ட
எம் கலடுகளில்
மீண்டும்
கால் பதிக்கும்
நம்பிக்கையுடன்
நான் இங்கே.

– ஜெகன் –



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நேர்காணல்:

*ரஷ்யாவில் வலது தீவிரவாதக் கட்சியான லிபரல் ஜனநாயகக் கட்சியின் காங்கிரஸ் ஏப்ரல் மாத ஆரம்பப் பகுதியில் கூடியபோது இதன் தற்போதைய தலைவர் செர்னோவஸ்கியையே 2004 ம் ஆண்டுவரை –அதாவது 10 வருடங்களுக்கு– கட்சியின் தலைவராகத் தெரிவுசெய்ததோடு, 1996 இல் நடக்கவிருக்கும் ஜனாதிபதி தேர்தலில் கட்சியின் வேட்பாளராக நியமிப்பதென்றும் தீர்மானித்துள்ளது. அத்தோடு முன்னைய சோவியத்யூனியன் வரையான தன் அகன்ற ரஷ்யக் கொள்கையை மீண்டும் பிரகடனப்படுத்தியதோடு, எங்கெல்லாம் ஸ்லாவிய சகோதரர்கள் இருக்கிறார்களோ அவர்களை அரவணைப்பதும், அவர்களுக்காக ரத்தம் சிந்துவதும் தமது தலையாய கடமை என்றும் காங்கிரசில் உறுதிமொழி எழுதப்பட்டது.*



*? கடந்த டிசம்பரில் நிகழ்ந்த பாராளுமன்றத் தேர்தலில் இலட்சோப லட்சமான ரசிய மக்கள் ஏன் உங்களையும் உங்கள் கட்சியையும் தேர்வு செய்தார்கள். இது உங்களுக்கு எதிர்பாராத ஒன்று இல்லையா?*

**0** இல்லை! இது எதிர்பாராத ஒன்று இல்லை. இந்த லட்சோப லட்சமான மக்களும் இதற்கு மேலானவர்களும் விளங்கிக் கொள்கிறார்கள். அது என்னவெனில், இன்றைய ரசியாவில் ஜனநாயகம் இல்லை. இன்றைய அரசு மக்களுக்கான அரசாக இல்லை. வெறும் அதிகாரத்துவ அரசு. இதற்கு இனியும் முடிவு கட்டப்படாவிடில் எங்களுடைய நாடு சிதைக்கப்பட்டுள்ளது. மிகவும் விசாலமானதும் அதிகாரத்துவம் கொண்டதுமான எமது நாடு இன்றோ ஒரு மூன்றாம் உலக நாடாக மாறி வருகிறது. பிச்சைக்காரர்கள் அதிகரித்து வருகிறார்கள். இத்தகைய உண்மை மக்களுடைய புரிதலுக்கு கொண்டு வரப்படுகிறது. தேர்தல் விஞ்ஞாபனத்திற்கு நாம் கடுமையாக உழைத்தோம். இன்று எமது மக்களுக்கு தேவையானது புதிய உரிமைகள், வேறுபட்ட அரசும் அரசியல் பொருளாதாரமும். எங்களுடைய மக்கள் இதை நன்கு உணர்ந்து எம்மை அங்கீகரித்திருக்கிறார்கள்.

*? உங்களுடைய திட்டங்கள் எதை வெளிப்படுத்துகின்றது?*

**0** முன்னைய சோவியத்யூனியன் குடியரசுகளுக்கு எந்தவிதமான பொருளாதார உதவிகளும் வழங்குவதில்லை.

**0** ஆயுதக் குறைப்புகள் (அணு ஆயுதம்) குறித்து பேச்சு வார்த்தை நிறுத்துதல்.

**0** உரிமையுடன் ஆயுதங்களை உற்பத்தி செய்வதும் உள்நாட்டு வெளிநாட்டு சந்தைகளில் விற்பனை செய்வதும்.

**0** ரசியாவில் ஒழுங்கையும் அமைதியையும் உருவாக்கத் தடையாக நாசம் விளைவிக்கும் சுமார் 5000 பேரையும் (ஜெல்சினையும் அவருடனான சீர்திருத்தவாதிகளையும்) தூக்கி வீசுவது.

**0** படுக்கையிலுள்ள பொருளாதாரத்தை துயில் எழுப்புவதும் வேலையிழந்தோர்க்காகப் போராடுவதும்

**0** மக்களுக்கான வீடுகளுக்கு வரிவிலக்கும் இலவச வாய்ப்புகளும்

**0** எமது தந்தை நாடு அந்நியருக்க விற்கப்படாது.

**0** வெளிநாடுகளில் கடன் வாங்கவதில்லை.

**0** ரசிய நாட்டுக்குள் வர விரும்பும் பிறநாட்டவர்க்கு கட்டாய விசா.

**0** எமது மூலப் பொருட்கள் ஏற்றுமதிக்குத் தடை. இவை ரசியாவுக்குத் தேவையானவை.

**0** ரசியாவின் இராணுவ உதவி நடவடிக்கைகள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தொடர்ந்தும் பாதுகாக்கப்படும். இது மேலும் நவீன ஆயுதங்களாலே ஒழிய எமது துருப்புக்களாலல்ல.

*? ரசியாவிலும் வெளிநாடுகளிலுமுள்ள உத்தியோகபூர்வமான பத்திரிகைகள் உங்களை தேசியவாதிகள் பாசிஸ்டுக்கள் என அழைக்கிறார்களே, ஏன்?*

**0** இயல்பில் நாம் தேசியவாதிகளோ பாசிஸ்டுக்களோ அல்ல. ஆயினும் பலமான ராணுவத்துடனும் சுதந்திரமான பொருளாதாரத்துடனும் ஓர் இறுக்கமான அதிகாரத்துவமான ரசியாவைக் கட்டியெழுப்ப வேண்டுமென்பதே எமது கொள்கை. எமது அக்கறையெல்லாம் எமது மக்களிலேயேதான். எங்களுக்குப் பிரச்சினையில்லை, அவர்கள் எதில் ஈடுபாடு காட்டுகிறார்கள் என்று. எந்தத் தேசியவாதத்துடனும் தொடர்புடையவர்களாக இருந்தாலும் பரவாயில்லை. நாம் அவர்களைப் பாதுகாக்க வேண்டும். ஆனால் இன்றைய அதிகாரத்திலிருப்பவர்களோ எம்மை கிளர்ச்சியாளர்களாகப் பார்க்கிறார்கள். அவர்கள் எம்மைக் கண்டு அஞ்சுகிறார்கள். அவர்களைப் பொறுத்தவரை எம்மை நிந்திக்க வேண்டும். அதனாலேயே பாசிஸ்டுகள் என்று எம்மை அழைக்கிறார்கள். அவர்கள் அறிவர், எமது மக்களுக்கு இது மிகவும் இழிவான களங்கமான வார்த்தை என்று. அதனாலேயே எம்மை இப்படி அழைக்கிறார்கள்.

எங்கள் மக்கள் பாசிசத்தின் கீழ் மிகவும் பாதிக்கப்பட்டவர்கள். அதனால் இந்த வார்த்தைமீது அதிவெறுப்புடையவர்கள். ஆயினும் எமது மக்கள் அறிவர், இந்த நிலைமைக்கு பொறுப்புடைய வெளிநாட்டுத் தலைவர்கள் யார் யார் என்று. இன்று இவர்கள் ஜெல்சினைக் காக்க நினைக்கிறார்கள். அவரே ரசியாவிலுள்ள ஒரேயொரு ஜனநாயகவாதி என்று நினைக்கிறார்கள். அதனால் இவர்கள் மக்களால் புரிந்து கொள்ளப்பட முடியாதவர்களாய்ப் போய்விட்டார்கள். இது வெளிநாடுகளின் தவறாகவே போய்விட்டது. இது ஜெல்சினைக் காப்பதில் போய் முடிந்துள்ளது. இதன் வெளிப்பாடே எங்களை பாசிஸ்டுகள் எனறு நிந்திப்பது. வெளிநாடுகளைப் பொறுத்தவரை ஒரு பலமான ரசியா உருப்பெற்றிருப்பதை விரும்பவில்லை. ஆயினும் நாம் அதைப் படைக்க வேண்டும்.

*? திரு. சேர்ன்னோவஸ்கி ஒரு பேட்டியில் (அது நன்றாய் இருந்தது) யூ தர்கள் எல்லோரையும் ஒரு தீவில் (உ-ம் மடகாஸ்கார்) வசிக்க விடுவது பற்றி சொல்லியிருந்தார். இது பற்றி தெளிவுபடுத்துவீர்களா?*

**0** நாங்கள் கருதுகிறோம் இது முழு உலகத்துக்கும் சிறப்பான ஒரு திட்டம் –ஏன் யூதர்களுக்கும் கூட! யூதர்களுக்கும் அராபியர்களுக்கும் தொடர்ந்தும் சண்டைகள் யுத்தங்கள். யூதர்கள் அங்கிருந்து (இஸ்ரேல்) ஒரு தீவில் போய் வசிப்பது அவர்களுக்கு நல்லது –நாலு கரையும் கடல் சூழ! அதேநேரம் ரசியாவிலுள்ள யூதர்ளைப் பற்றி இங்கே எந்தக் கேள்வியும் இல்லை. எம்மைப் பொறுத்தவரை தேசியவாதமோ எதுவும் பிரச்சனையில்லை. ஆயினும் ஒன்று அவர்கள் ரசியாவில் வாழ விரும்பின் அவர்கள் ரசியர்கள். யூதர்கள் எம்மோடு வாழ விரும்பின் வாழலாம். இஸ்ரேல் போக விரும்பினும் போகலாம். ஒருகால் ரசிய யூதர்கள் இஸ்ரேலில் அதிகமாயின் அது சிலவேளை ரசியாவின் ஒரு மாநிலமாகவே மாறிவிடலாம். (இது ஒரு பகிடிச் சிந்தனை) எங்களுடைய பத்திரிகைகள் தொலைக்காட்சிகள் போன்றவற்றில் அதிகமாக யூதர் மயமாகவே இருக்கிறது. நாம் தேசிய வாதிகளாக அகண்ட ரசியா பற்றி கதைக்கும்போது பாசிஸ்டுகள் என்று அழைக்கப்படுவதும் இதன் பிரதிபலிப்பே.

*? உங்கள் வெளிநாட்டுக் கொள்கைகள் பற்றி சொல்லுங்களேன்?*

இந்த உலகம் ஒரு சில வல்லரசுகளின் கட்டுப்பாட்டிலேயே இருக்க வேண்டும். அமெரிக்கா, ரசியா, ஐரோப்பா, சீனா, ஜப்பான். இதற்கு கம்யூனிசமோ அன்றி சோசலிசக் கொள்கையோ தேவையில்லை. இந்த வல்லரசுகள் தமக்கென அங்கீகரிக்கப்பட்ட பகுதிகளுக்கு பதிலளிக்கக் கூடிய வகையில் பொறுப்புடையவர்களாக இருக்க வேண்டும்.

அங்கீகரிக்கப்பட்ட பகுதிகள் எனும் போது....
அமெரிக்கா, லத்தீன் அமெரிக்காவுக்கும்
ஐரோப்பா, ஆபிரிக்காவுக்கும்
ரசியா வானது துருக்கி, ஈரான், ஆப்கானிஸ்தான் போன்றவற்றிற்கும்
பொறுப்புடையவர்கள். எனவே நாங்கள் கருதுகிறோம், மேற்குறிப்பிட்ட நாடுகள் (குறிப்பாக துருக்கி, ஈரான், ஆப்கானிஸ்தான்) எதிர்காலத்தில் ஆபத்து நிறைந்ததாகவே இருக்கும். ரசியா இங்கே பொறுப்புணர்வாய் நடக்கும்.

இந் நாடுகளிடமிருந்து புதிய உலக யுத்த மொன்றும் வராது. தவிர பிரதேசவாதம், இஸ்லாமிய அடிப்படைவாதம் எதுவும் வெளித்தோன்றாது. இந்த நாடுகள் அணுகுண்டுகள் பெற்றிருந்தால் சூரிச்சிலோ, நியூயோர்க்கிலோ அன்றில் எங்கேயேனும் வெடிக்கச் செய்துவிடுவார்கள். இம் மூன்று நாடுகளையும் (துருக்கி, ஆப்கானிஸ்தான், ஈரான்) ஒன்றாக்கி ரசிய பாதுகாப்பு வலயத்துள் கொண்டு வரவேண்டும். பொறுப்புணர்வுடன் கூடிய பாதுகாப்பு கூட்டு வேலைமுறைகள் கிழக்கு–


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மேற்கில் இருந்து கிழக்கு தெற்காய் மாற்றப்படும். நாங்கள் இந்து சமுத்திரம் வரை போக வேண்டும். ரசியாவுக்கு இந்து மகா சமுத்திரம் தேவை. ஆனாலும் நாம் யுத்தம் நடத்தவோ இராணுவம் அனுப்பவோ தேவையில்லை. இந்தியா, ஈராக் எங்களுடைய கூட்டுக்குள் இருப்பார்கள்.

*? ஆனால் நீங்கள் குறிப்பட்ட மூன்று நாடுகளும் (துருக்கி, ஈரான், ஆப்கானிஸ்தான்) உங்களுடைய பாதுகாப்பு வலயத்துள் வர மறுத்தால் உங்கள் திட்டத்துக்காக இராணுவத்தை அனுப்புவீர்களா?*

**0** இல்லை. இதற்காக நாங்கள் அங்கே இராணுவத்தைப் பயன்படுத்த மாட்டோம். முதலில் பிற வல்லரசுகள் எம்முடன் உடன்பாட்டுக்கு வரவேண்டும். பிற்பாடு இந் நாடுகள் அரசியல் பொருளாதார (தடைகள்) நடவடிக்கைகளில் நாம் கலந்து கொள்வோம். இந்த கிழக்குப் பகுதி எம்மிலும் அதிகம் வேறுபட்டது. இவர்களுடைய தனித்துவமான உளவியல் பாங்கு, ரசியாவுக்குத் தெரியும். இந்தப் பகுதிகளில் எப்படி அரசியலை கையாள வேண்டும் என்றும் ரசியாவுக்குத் தெரியும்.

*? உங்கள் கட்சி புதிய பாராளுமன்றத்தில் பலமான நிலையில் இருப்பதால் ஜனாதிபதி, அரசு மட்டங்களில் உங்கள் செல்வாக்கு எப்படி பெரிதாக இருக்கிறதா?*

**0** நாம் நம்புகிறோம், நம்முடைய கை ஓங்கிவருகிறது என்று. இதன் வெளிப்பாடு தெரிகிறது. முதலில் உப பிரதம மந்திரி கைடர் பதவி விலகிக் கொண்டார். நிதியமைச்சரும் அவ்வாறே விலகிவிட்டார். ஏனைய அரசு அங்கங்களிலும் (ஜனநாயகவாதிகள், சீர்திருத்தவாதிகள் எனப்படுவோருக்கு) அதிர்ச்சி வைத்தியம் நடக்கிறது. எமது நாட்டுப் பொருளாதாரம் உயர்நிலைக்கு வளர்த்துச் செல்லப்பட வேண்டும். ஆனால் இவர்களோ அழிவுப் பாதைக்கே இட்டுச்சென்று சீரழித்துள்ளார்கள். இவர்களுக்கு இனி எதிர்காலம் இல்லை.

*? நீங்கள் ரசியாவில் அதிகாரத்துக்கு வந்தால் சுவிஸிலும் அணிவகுப்பு செய்வீர்களா?*

**0** ஆம், நாம் சுவிஸுக்கு வருவோம். ஆனால் உல்லாசப் பயணிகளாக, ஒரு உயர் பொருளாதார வளர்ச்சியடைந்த ரசிய நாட்டின் பிரஜைகளாக!

மிக்க நன்றி! உங்களுடனான உரையாடலுக்கு.

*ரசியாவில் கடந்த டிசம்பரில் நிகழ்ந்த பாராளுமன்றத் தேர்தலில் பெரும்பான்மை ஆசனங்களைக் கைப்பற்றி ரசியாவை மட்டுமன்றி உலகத்தையே அச்சம் கொள்ளவைத்திருக்கும் ரசியப் பெருந் தேசிய வெறியன் விளாடிமிர் செரினோவ்ஸ்கியை தலைவராகக் கொண்ட ரசிய லிபரல் ஜனநாயகக் கட்சியின் உபதலைவரும் கட்சியின் உத்தியோகபூர்வ ஏடான லிபரல் இன் நிர்வாக இயக்குநருமான சேப்றோவ்ஸ்கியின் பேட்டி இது.*

நேர்காணல் - பேராசிரியர் ஒலைனிவ்கோவ் (மொஸ்கோ பல்கலைக் கழகம்)

நன்றி : RIFF

தமிழில் - **சி.அமுதன்**

## யாருக்குச் சொல்லியழ ...

*நண்பரும் மனைவியும் என்னைப் பார்த்துப் பேசிவிட்டு போக வந்தாகள். (பொழுது போகாதபோது அப்பப்போ வருவார்கள்) வந்தவர்களை வரவேற்று... தேனீர் பரிமாறிவிட்டு..... அமர்ந்து பேசிக் கொண்டிருக்கின்றோம்.*

*நண்பர் ஆறு அல்லது ஏழாம் வகுப்புத் தானாம் படித்தவர். மனைவி யு:டு படித்தவவாம். அதனால் எப்பவுமே நண்பரின் மனைவி தான் படித்தவள் என்பதை காட்டிக் கொள்வதில் துடிப்பாய் இருப்பா. நண்பர் பணம் சேகரிப்பதும் அதற்கான வழிமுறைகள் (சரியானது தவறானது என்ற விவாதத்தை தயவு செய்து விட்டு விடுங்கள்) பற்றியும் தான் எப்போதும் கதைப்பார்.*

*கதைத்துக் கொண்டிருந்தவர்கள் என்ன ஞாபகமோ திடீரென.... எனது புத்தகங்கள் சஞ்சிகைகள் மேல் கண் பதித்தவர்களாக அதில் ஏதாவது வாசிக்கத் தரச் சொன்னாகள். நானும் அவர்களின் ஆவலைப் பார்த்து மனஓசை, கேடயம், புதிய காலச்சாரம் போன்ற சஞ்சிகைகளில் ஒரு கட்டைக் கொடுத்தேன்.*

*திருப்பிப் பார்த்தார்கள். மனம் சரிவரவில்லை.*

*பொம்மை, பேசும்படம் ஏதாவது.... என்று இழுத்தார் நண்பர் (நல்ல காலம்! திரைச்சித்திரா என்று கேட்கவில்லை)*

*நான் என்னிடம் இல்லை என்றேன்.*

*நண்பரின் மனைவிக்கு அதில் கோபம் போலும். தனது படிப்பைப் பற்றி எனக்குத் தெரியப்படுத்த நினைத்தா போலும்.*

*இது PLOT இன் புத்தகங்கள் என்றா.*

*நான் அதிர்ந்து போனேன். என்னடா, இது?*

*அவவிடம் எப்படிச் சொல்கிறீர்கள்? என்றேன்.*

*இதில் தோழர் என்று எழுதியிருக்கிறது, அதுதான்! என்றா.*

*தலையை எங்கே போய் முட்டிக் கொள்வது??*

*நீங்களே சொல்லுங்கள்!*

*–அப்பு*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**மனிதம் வைகாசி-ஆனி இதழில் பாரதி கலைக்குழுவினரின் வசந்த காலக்கோலங்கள் பற்றிய ஓர் பார்வை எனும் விமர்சனக் கட்டுரையில், அருச்சுனன் தபசு நாட்டுக் கூத்தினைப் பற்றி எழுதிய விமர்சனத்திற்கு எமது கருத்துக்களையும் கூற விழைகின்றோம்.**

**மணிவண்ணன் + தில்லைநடேசன்**
பிரான்ஸ்

ஐரோப்பியச் சூழலில் நாட்டுக்கூத்து கலையானது புதியதோர் அறிமுகமாகவே இருக்கிறது. இது மேடையில் நிகழ்த்தப்படுவதேயில்லை. இதன் ஆடும் தளம் வட்டக்களரியேயாகும். இங்கு யாராலும் நாட்டுக்கூத்தெனக் கருதப்படுபவை, தென்னிந்தியாவில் சங்கர்தாஸ் சுவாமி அவர்களின் பாணியிலான கொட்டகைக் கூத்துக்களாகவே இருக்கின்றன. இங்கு வட்டக்களரி அல்லாத மேடைகளிலேயே கூத்தை நிகழ்த்த வேண்டியிருப்பதால், பலவிதமான நெருக்கடிகளைச் சந்திக்க வேண்டியிருக்கிறது.

1. பாத்திரத்திற்கான வருகை.
2. ஆடற்தரு

போன்றவைகள் ஆடும்போது மேடைக்கேற்றவாறு அதனை அமைக்க வேண்டியிருக்கிறது.

3. மேடையில் ஒரே பக்கப் பார்வையாளர்களைச் சந்திப்பதற்காக, ஆடும் திசைகளிலும் மாறுதல்களைச் செய்ய வேண்டியுள்ளது.

4.மேடைகள் சறுக்கும் தன்மையுடையனவாக இருத்தலால் ஆடலுக்கு அமைவிலாதுளது.

இவை போன்ற காரணங்களினால் கூத்துக் கலையின் ஜீவன் சோர்கிறது.

லோகதாஸ் அவர்கள் கூத்தை வெளிப்படுத்திய முறைமை பற்றி சாடியிருக்கிறார். குறிப்பாக கூத்தை நகர்த்திச் செல்லும் முறைகளில்,

1. கட்டியகாரன் கதை கூறல்
2. அண்ணாவிமார்களின் சபைவிருத்தம்.
3. பாத்திரகாரர்களின் -விருத்தம், பாடல்கள்

இவை மூலமாகவே கதை நகர்ந்து செல்கிறது.

அருச்சுனன் தபசானது இரவு முழுவதும் விடியவிடிய ஆடப்படும் தர்மபுத்திர நாட்டுக்கூத்தின் ஓர் சிறு பகுதி மட்டுமே. ஆகையால் இங்கு கட்டியகாரன் தேவையற்றவனாகின்றான். மிகுதி இரு பகுதிகளினூடகவுமே கதை நகர்ந்து செல்கிறது. மேற்குறிப்பிட்ட மூன்று பகுதிகளுமே கூத்தை நகர்த்திச் செல்லும் முறைமைகளாகும்.

அடுத்தாற்போல் பாட்டுக்காரன், சம்பாஷணைகள் எதுவும் தெளிவற்றும், விளங்காமலும் இருந்ததெனக் கூறுகின்றீர்கள். அதாவது, கூத்துக் கலையிலிருந்து விழுதுவிட்ட பரதநாட்டியத்தைப் போலல்லாது கூத்திற்கு அதன் ஆட்டத்தின் போக்கிலேயே ஆடுபவர்களே பாடல்களையும் பாட வேண்டியிருக்கிறது. இது மேடையிலிருந்து தூரத்தே இருப்பவர்களுக்கு நவீன மைக் வசதிகள் இல்லாவிடில் கேட்பது கடினமாகவே இருக்கும். குரலெடுத்து இசை நயத்துடன் பாடினாலும் சுற்றிவரக் கேட்பதற்கு இது வட்டக்களரியுமல்ல.

இருந்தும் அண்ணாவிமார்கள் மைக்கின் முன்னிருந்து அப் பாடல்களை திருப்பிப் படிக்கும் போதுகூட விளங்காத தன்மை இருக்குமானால், அது இப் பாடல்களில் கையாண்டிருக்கும் இலக்கணத் தன்மையே காரணமாயிருக்கும். இதை விளங்கிக்கொள்வதென்பது, அவரவரது அறிவு சார்ந்த அல்லது தேடல் சம்பந்தப்பட்ட அல்லது பரீட்சயம் சார்ந்த விசயமும் கூடத்தான். இதனை யாத்தவர்கள் புலமை பெற்ற பண்டிதர்களாவர். அவர்கள் இலக்கணத் தன்மையைப் பாடல்களில் காட்டியிருக்கிறார்கள். கையாளப்பட்டிருக்கும் இவ் இலக்கணத் தன்மையானது அந்தந்த பாத்திரக் கருத்துக்களை இராகங்களுக்குள் இட்டுக்கட்ட வேண்டிய சூழலில்தான் இது நிகழ்ந்ததாக கூறமுடியாது. அக்காலத்துப் புலமைத்துவமே இவ் இலக்கணத் தன்மைக்கு காரணமாகும்.

விமர்சகர் கூறுவதைப்போல் பாடல்கள், வசனம் (அஃது- விருத்தம், சபைவிருத்தம்) என்பன சகலருக்கும் விளங்கும் வகையில் வெளிப்படுத்தும் முறையில் நவீனத்துவத்தை கையாளுதல் வேண்டுமென்பதுடன் நாமும் உடன்படுகின்றோம். அதற்காக, தமிழ் நாட்டில் விஜயலெட்சுமி நவநீதகிருஸ்ணன் குழுவினரும், இன்னும் குணசேகரா போன்றோரும் நாட்டுப்புறப் பாடல்களை வெளிப்படுத்துவதில் ஜனரஞ்சகமாக நவீனத்துவத்தை கையாளுகிறார்கள் என்பதை உதாரணமாய்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வெளிப்படுத்துவதில் ஜனரஞ்சகமாக நவீனத்துவத்தை கையாளுகிறார்கள் என்பதை உதாரணமாய் ட்டிக்காட்டுவதுதான் விளங்கவில்லை.

அதாவது, நாட்டார் பாடல்கள் எளிமையான மக்களின் பாடல்களாகும். அவை உழைக்கும் மக்களைப் போன்று எப்போதும் எளிமையாகவேதான் இருக்கும். எல்லோருக்கும் விளங்கும். இதனை யாத்தவர்கள் புலமை பெற்ற பண்டிதர்களல்ல. மக்கள் பாடல்களை பாடிய போது சுற்றுப்புற சூழலிலுள்ள பொருட்களையே தாளக்கருவிகளாகப் பயன்படுத்திக்கொண்டனர். இன்றும் கோலாட்டத்தில் தடிகளால் அடித்து ஓசை எழுப்பியும், கும்மி கொட்டுதலில் கைகளால் ஓசை எழுப்பியும் தாளமிட்டு இசையைப் பாடுவதைப் பார்க்கலாம். அம்மக்களின் பாடல்களைத்தான் இக்குழுவினர்கள் வெளிப்படுத்துகிறார்கள். மக்கள் பாடிய போதான நிலையிலிருந்து பிரித்துப் பார்த்தால், இக்குழுவினர்களால்

1. சுற்றுப்புறச் சூழலிலிருந்து தாளக்கருவிகளாகப் பயன்படுத்திக்கொண்ட பொருட்கள் இங்கு மாறியிருக்கின்றன. ஆனால் மக்கள் பாடிய போது தாளமிட்டுக்கொண்ட நடைகளில் மாற்றமில்லை.

2. இசைக்கருவிகள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. ( பாடல்களின் வெளிகள் இவை பாடலிற்கான அடிகளை எடுத்துக் கொடுப்பதற்கும், மெட்டுக்களை வாசிப்பதற்கும் ...... ஆகப் பயன்படுகின்றன. அடிகளை எடுத்துக் கொடுப்பதற்கு இசைக்கருவியினை வாசிக்கும் முறைக்கேற்ப இந்த வெளிகளில் மாற்றி வாசிக்கப்படுகின்றன மீண்டும் பாடல் தொடங்கும் போது மீண்டும் பாடலுக்குரிய தாளம் வாசிக்கப்படுகின்றது.)

இதைத் தவிர, மக்கள் பாடியபோதான அசைவுகள், நெளிவு சுளிவுகளின் போக்கில் மாற்றமேதுமில்லை. (அவரது குரலுக்கேற்ப பாடல்களில் மாற்றம் காணலாம்.) மக்களது பாடல்களுக்கு அவற்றை வெளிப்படுத்துவதில் ஜனரஞ்சகமாய் நவீனத்துவத்தைக் கையாள்வதற்கு இங்கு ஒரு சாம்பலும் இல்லை. கூத்தை நவீனமயப்படுத்துவதற்கு, கூத்தை நவீனமயப்படுத்தியவர்களின் பெயர்களை, மௌனகுருவும், தாஸியஸும் என உதாரணிகளாய் முன்நிறுத்திமிருக்கிறார் விமர்சகர். எமக்கு கூத்தை நவீனமயப்படுத்தியவர்களென, இவர்களது பெயர்களுடனான விலாசத்தில் பிரச்சனை இல்லை. ஆனால் இவர்களால் நவீனமயப்படுத்தப்பட்ட கூத்தின் நிலை என்ன? அது தொடர்பாக அல்லது கூத்துக்கலை தொடர்பாக இவர்களது தற்போதைய உழைப்பு எவ்வாறுள்ளது?

ஆட்டமும் பாட்டும் கூத்தானது. கூத்தென்றால் ஆட்டமும் பாட்டும். கூத்துத்தான் மக்கள் கலை வடிவமே தவிர அதன் உள்ளடக்கங்கள் புராண, இதிகாச கதைகளாகவே இருக்கின்றன. இங்கு ஐரோப்பிய இயந்திர மயமான வாழ்விலும், எத்தனையோ அழுத்தங்களிற்கு ஊடாகவும், அதன் உயிரான அபிநயங்களுடன், இச் சூழலை சணலடி அடித்தே பழகவேண்டியுள்ளது. தற்போது நாம் பழகும் வன்சன் காடும் பனி உறைந்து விட்டது. எமது ஆரம்ப நிலைகளே இவை.





----------------------

உங்கள் ஆணிவேர்கள் கவனமாக இருக்கின்றனவா?
மிகவும் கவனம்! அறவிடாதீர்கள்.
கவிதை எழுதப் பழகிவிடுவீர்கள்.

– சோலைக்கிளி

**"ஆணிவேர் அறுந்த நான்"**

(கவிதைத் தொகுதி)

தொடர்புகட்கு :

**Asseay**
3, Allee Paul Leautaud
95200 Sarcelles
FRANCE

**http :\\ www. thamizham. net**




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# துள்ளி விளையாடும் மரணம்

எனது மரணம்
இருக்க இருக்கப் பெருக்கிறது.
சொற்ப காலத்திற்கு முன்னர்தான்
என் கண்முன்னே தெரியத்தொடங்கிய அது,
இப்போது
என் வாசலில்
வால் முறுக்கிய ஒரு கன்றுக்குட்டியைப்போல்
தினம் விளையாடிக் களிக்கிறது.

முதன் முதலாக என் கண்ணுக்குத் தெரியும்போது அது
சிறு
எறும்பைப்போன்றுதான்
இருந்தது.
அதன் வளர்ச்சி
மிகவும்
வேகமான ஒன்று!
இந்தக் குறுகிய காலத்திற்குள்
அது வளர்ந்திருக்கும் விதம்
பயங்கரம்!

மண்ணின் ராசி அப்படி, கேட்டீரோ!
கடலும் சுருங்கி ஒரு போத்தலுக்குள் ஊற்றி
மேசையிலே வைக்கும் அளவுக்கு,
அச்சம் நிறைந்த என் தரையில்
மரணம்;
மாடு மாதிரி என்ன,
யானையைப்போன்றும் கொழுக்கும்.

என் மரணம் இப்போது மிகவும் மகிழ்ச்சியுடன்
துள்ளி ஓடி வந்து
சற்று
விலகிக்கொண்டு போகிறது;
நான் – இன்று – பாவமென்று நினைத்திருக்கும்.